# மஞ்சரி

AUG. '48




விடுதலைக் கொடிகள்

★

ஒரே பாஷை

★

என் விமரிசகர்கள்

★

பிரபுக்கள் வாழ்ந்த வீடு

★

மூன்றாம் வகுப்பு

★

மலரே மருந்து

★

மூக்கின் மகத்துவம்


-6-
அணா

# லட்சிய சின்னம்

நம் சுதந்தர விழாவிலே எங்கும் ஓங்கிப் பறக்கும் நம் கொடி. (அட்டைப் படம்) அது நமது சுதந்தரச் சின்னம்; நம் தேசிய லட்சியங்களைப் பிரதிபலிக்கிறது. நம் நாட்டிலே அறிவுத் துறைகளில் நடக்கும் முயற்சிகளுக்குப் பிரதிநிதியாக விளங்குவது மஞ்சரி.

இந்த இதழில் இந்தக் கட்டுரைகளைப் படிக்கத் தவறாதீர்கள்:


நமது அரசியல் நகல் .. .. (பக்-56)

மணமகள் தேவை .. .. (பக்-38)

திருடர்கள் - ஜாக்கிரதை .. .. (பக்-59)

ஹைதராபாத் ஹிட்லர் .. .. (பக்-33)


## மஞ்சரி


ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாலைவ ஆசிரியர்கள்:

| | |
|---|---|
| கி. வா. ஜகந்நாதன் | கா. ஸ்ரீ. ஸ்ரீ. |
| த. நா. ஸேனாபதி | குமுதினி |
| வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி | கி. சாவித்திரி அம்மாள் |
| சீதா தேவி | 'ஆர்வி' |
| கௌரி அம்மாள் | மோ. ஸ்ரீ. செல்லம் |

ஓவியர்கள்: ஸாமி; சங்கர்; மகான்.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை, 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை "ஸர்க்குலேஷன் மானேஜர்" என்று விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

மஞ்சரி
மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

# விடுதலைக் கொடிகள்

★

நவீனகால உலக சரித்திரத்தில், நான்கு கொடிகள் குறிப்பிடத் தக்கவை: (1) ஐக்கிய அமெரிக்காவின் கொடி; (2) பிரெஞ்சுக் குடியரசின் கொடி; (3) ஸோவியத் பொது உடைமைக் கொடி; (4) இந்திய சுதந்தரக் கொடி. இந்த நான்கும் விடுதலைக் கொடிகள். ஆனால் வரலாறு, கருத்து, அமைப்பு ஆகிய அம்சங்களில் வேறுபட்டவை.

ஐக்கிய அமெரிக்காவின் கொடி, ஏகாதிபத்திய முறையை எதிர்த்தது; மக்கள் ஆட்சி உரிமையை நிலைநாட்ட வந்தது பிரெஞ்சுக் கொடி; புதிய சமுதாயத்தைப் படைக்க முயன்றது ஸோவியத் கொடி; அஹிம்சா தர்ம சுதந்தரக் கொடி நமது கொடி.

**அமெரிக்கக் கொடி:** ஐக்கிய அமெரிக்காவின் கொடியில் 48 நட்சத்திரங்கள் இருக்கின்றன; 6 வெள்ளைக் கோடுகளும் 7 சிவப்புக் கோடுகளும் இருக்கின்றன. நட்சத்திரங்கள், ஐக்கிய அமெரிக்காவில் அடங்கியிருக்கும் 48 - சம்ஸ்தானங்களைக் குறிக்கின்றன. பதினெட்டாம் நூற்றாண்டில், தாய்நாடான பிரிட்டனுடன் யுத்தம் புரிந்தே ஐக்கிய அமெரிக்கா விடுதலை பெற்றது. அப்போது அமெரிக்காவின் 13 - சம்ஸ்தானங்களே ஐக்கியப்பட்டிருந்தன. ஆகவே, ஆதியில் ஐக்கிய அமெரிக்கக் கொடியில் 13 - நட்சத்திரங்களே இருந்தன. நட்சத்திரங்கள் ஐந்து மூலைகளோடு அமைக்கப்பட்டன. 1912-ஆம் வருஷத்தில் தான் நட்சத்திரங்களின் எண்ணிக்கை 48-க்கு உயர்ந்தது. இன்னும் ஹாவாய், அலாஸ்கா இந்த இரண்டு சம்ஸ்தானங்களும் ஐக்கிய அமெரிக்காவில் சேரும் என்று எதிர்பார்க்கிறார்கள். அப்போது நட்சத்திரங்களின் எண்ணிக்கை வள்ளிசாக 50 - ஆகிவிடுமாம். ஐக்கிய அமெரிக்காவின் ஸ்தாபகரான வாஷிங்டன் தங்கள் கொடியின் கருத்தை இவ்விதம் விளக்கினார்: "வானத்திலிருந்து நட்சத்திரங்களை எடுத்துக்கொண்டோம்; சிவப்பை நம் தாய்நாட்டிலிருந்து எடுத்துக்கொண்டோம்; அவளிடமிருந்து நாம் பிரிந்துவிட்டோம் என்பதைக் காட்ட வெள்ளைக்கோடுகளைப் போட்டுக்கொண்டோம்."

**பிரெஞ்சுக் கொடி:** ஆதியில் பிரெஞ்சு அரசர்கள் நீலக் கொடியும் அதன்பின்பு சிவப்புக் கொடியும் வைத்துக்கொண்டிருந்தார்கள். 15 - ஆம் நூற்றாண்டில் மீண்டும்

ஒரு நீலக் கொடி வந்தது. நாலாவது ஹென்ரிக்குப் பிறகு வெள்ளைக் கொடி வழங்கியது. 18-ஆம் நூற்றூண்டில் முதலாவது பிரெஞ்சுப் புரட்சி நடந்தபோதுதான் நீலம், வெள்ளை, சிவப்பு மூன்று பட்டைகளுள்ள தற்போதைய மூவர்ணக் கொடி வந்தது. தாம் சக்கரவர்த்திப் பட்டம் பெறும் வரையில் இந்தக் கொடியையே நெப்போலியன் வைத்துக்கொண்டிருந்தார். மீண்டும் பூர்பன் வம்ச அரசர்கள் ஆட்சிக்கு வந்தபோது, இதை விட்டு வெள்ளைக் கொடியைக் கைக்கொண்டார்கள். 1830-ஆம் ஆண்டு நாலாவது புரட்சி நடந்து குடியரசு ஸ்தாபிதமான போது, தற்போதைய மூவர்ணக் கொடி புத்துயிர் பெற்று நிலைத்தது.

**ஸோவியத் கொடி:** ஜார் அரசனை வீழ்த்திப் புரட்சி செய்து, லெனின் தலைமையில் 1920-ஆம் ஆண்டு ருஷ்யாவில் ஸோவியத் சர்க்கார் நிலைபெற்றது. மார்க்ஸின் பொது உடைமை ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காக எழுந்தது அந்தப் புரட்சி. ஆகவே, ஸோவியத் கொடி முழுச் சிவப்பு. அதன் தலைப்பு முனையிலே ஐந்து முனை உள்ள ஒரு நட்சத்திர உருவம் போட்டிருக்கும். நட்சத்திரத்தின் வெளிக் கோட்டை மட்டுமே வரைந்திருப்பார்கள். அந்த நட்சத்திரத்துக்குக் கீழே, தங்க வர்ணத்தில் ஒரு சம்மட்டியும் கருக்கரிவாளும் வரைந்திருப்பார்கள். சம்மட்டி தொழிலாளரையும் கருக்கரிவாள் விவசாயியையும் குறிக்கும்.

**நமது கொடி:** மகாத்மா காந்தியின் அஹிம்சா தர்ம இயக்கத்திலே பிறந்தது நம் கொடி. மேலே ஆரெஞ்சு, நடுவிலே வெள்ளை, கீழே பச்சை - இந்த வர்ணப் பட்டைகள் தீட்டி, வெள்ளைப் பட்டையின் மத்தியில் 24 ஆரங்கள் உடைய அசோக சக்கரம் பொறித்திருக்கும். சக்கரம் நீல வர்ணத்தில் இருக்கும். மகாத்மாவின் தலைமையில் காங்கிரஸ் கைக்கொண்ட தேசியக் கொடியில் ராட்டினம் போட்டிருந்தார்கள். ராட்டினத்தின் முக்கிய அங்கம் சக்கரமே அல்லவா? ஆகையால், அதை மட்டும் நம் சுதந்தரக் கொடியில் வைத்துக் கொண்டார்கள். சக்கரம் தர்மத்தைக் குறிக்கும்; முன்னேற்றத்தைக் குறிக்கும்; உலைவின்றிப் புரியும் தொழிலைக் குறிக்கும். கலையழகு பொலியும் தெய்விகக் கொடி நம் சுதந்தரக் கொடி.

**கொடிக்கு மரியாதை:** எந்தத் தேசத்தாரும் தங்கள் கொடியை மதித்துப் போற்றுவார்கள். பூஜையதைக்குரிய ஒரு சின்னம் தேசத்தின் திருக்கொடி. சூரியோதயத்திலிருந்து அஸ்தமனம் வரையிலுமே அதைப் பறக்கவிடலாம். உயர்த்தும்போது, சட்டென்று உயர்த்த வேண்டும்; இறக்கும்போது மெல்ல மெல்ல இறக்கவேண்டும். கடுங் காற்றிலும் மழையிலும் கொடி அலைபட விடலாகாது. தேசியக் கொடிக்கு மேலே வேறு கொடியைப் பறக்க விடலாகாது. கொடியை முறுக்கி முடிச்சுப் போடக்கூடாது. மேஜை விரிப்பாகப் பயன்படுத்தலாகாது. எப்போது பறக்க விட்டாலும் சிவப்புப் பட்டை மேலே இருக்கவேண்டும். அந்த நிலையை மாற்றுவது துயரத்தின் அறிகுறி. கொடியை எந்தப் பொருளிலும் தீட்டலாகாது. விளம்பரங்களிலே உபயோகிக்கக் கூடாது. பொதுவாக, மதிப்பரியதும் வணக்கத்

துக்கு உரியதுமான ஒரு புனிதப் பொருளாக அதை மதித்துப் போற்றவேண்டும்.

பாரதியார் கொடிப் பாட்டின் சில வரிகளை இங்கே நாம் ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும்:

பட்டுத்துகில் எனலாமோ—அதில்
பாய்ந்து சுழற்றும்
பெரும் புயல் காற்று
மட்டுமிகுந் தடித்தாலும்—அதை
மதியாதவ் வுறுதிகொள்
மாணிக்கப் படலம்
தாயின் மணிக்கொடி பாரீர்—அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட—வாரீர்

## இந்த மாதம் என்ன நடக்கும்?

ஆகஸ்டு மாதம் 4-ஆம் தேதி அமாவாசை. அன்றுமுதல் அமையும் கிரகநிலையைக் கவனித்தால் பல வகையான குழப்பங்கள் நிகழுமென்றே தோன்றுகிறது.

ஆகஸ்டு 16 – ஆம் தேதி முதல் இந்தியாவில் அரசாங்கத்துக்குப் பல சங்கடங்கள் உண்டாகும். பலாத்காரச் செயல் மிகுதியாகும். ஹைதராபாத் விஷயம் உச்ச நிலைக்கு வந்தாலும் இந்திய அரசாங்கம் அதை அடக்கும் உறுதியைப் பெறும்; சம்பந்தப்பட்ட ஆசாமிகளிடம் அதிகக் கண்டிப்பாக நடந்துகொள்ளும். தொழிலாளர் பிரச்னையில் அமைதி இராது. அரசாங்கம் கடுமையான வழிகளை மேற்கொள்ளும். ஹைதராபாத் நிஜாமின் காரியங்களால் மாளவ ராஜ்யத்துக்குத் துன்பம் உண்டாகும். காங்கிரஸுக்கும் ஸோஷலிஸ்டுக் கட்சிக்கும் அடிக்கடி வாக்குவாதம் நடைபெறும். ராணுவம் எந்த நிலைமையையும் சமாளிக்கும் வலிமையுடன் இருக்கும். ஹைதராபாத் நகரில் பிரிட்டிஷ் கன்ஸர்வேடிவ்களின் உதவிபற்றி மேலும் பல விஷயங்கள் அம்பலமாகலாம். உள்நாட்டில் குற்றங்கள் அதிகமாகும்; வகுப்புச் சண்டைகள் தென்னாட்டில் எழும்.

ஜின்னாவுக்குப் பல சங்கடங்கள் உண்டாகும். அவரோடு ஒத்துவராதவர்களின் எதிர்ப்பு அதிகமாகும். ஆனாலும் இரு வேறு சமூகமென்ற பைத்தியக்காரக் கொள்கையினின்றும் அவர் அணுவும் பிறழமாட்டார். பாகிஸ்தானில் வியாபார விஷயம் அநுகூலமாக இராது. புதிய அரசியற் கட்சி ஒன்று ஏற்பட்டு, அதிகாரத்தில் இருக்கும் கட்சிக்கு எதிரான உணர்ச்சியை வளர்க்கும். செஞ்சட்டைக்காரருடைய பயம் அதிகமாகும். ரெயில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதாகப் பயமுறுத்துவார்கள்.

இங்கிலாந்தில் மந்திரிசபையில் சில மாறுதல் நேரும். ஏகாதிபத்தியம் பின்னும் தளர்ச்சியடையும். கொள்ளை நோய்களால் மரணம் அதிகமாகும். ஆங்கிலேயர்கள் அதிருப்தியடைந்து, மாறுதல் வேண்டுமென்ற எண்ணத்தை அடைவார்கள்.

ருஷ்யாவுக்கும் மேற்கத்திய வல்லரசுகளுக்குமிடையே நேசம் மிகுவதற்கு நியாயம் இல்லை. இத்தாலியில் கம்யூனிஸ்டுகளுக்குத் தொந்தரவு ஏற்படும். பிரெஞ்சு அரசியலில் நிரந்தரமான நிலை ஏற்படாது. அமெரிக்காவுக்கும் ருஷ்யாவுக்குமிடையே உள்ள மனக்கசப்பு இருந்து கொண்டேயிருக்கும்.

சீனாவில் இப்போதுள்ள யுத்த நிலை நீடிக்கும். பர்மாவிலும் மலேயாவிலும் கலகக்காரர்களின் கொடுமை அதிகமாகும்.

யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் போர் எழும்.

—'அஸ்ட்ரலாஜிகல் மகஸீன்'

ஆதிசங்கரர் முதல்முதலிலே ஸ்தாபித்தது சிருங்கேரி மடம். அதைத் தரிசிக்கச் செல்வோர் எத்தனையோ பக்தர்கள்.

# சிருங்கேரி யாத்திரை

**வி. ராமராவ்**

நான் பெல்காமில் இருந்த பொழுது உத்தியோக முறையில் சிருங்கேரிக்குப் போக நேர்ந்தது. ஹரிஹர் வரைக்கும் ரெயில். அங்கேயிருந்து 48 மைல் தூரம் சிவமாக்கா என்ற ஊர் வரையிலும் பஸ். அதற்கு ரெயிலிலும் போகலாம். ஆனால் ரெயிலில் போவதைவிடப் பஸ்ஸில் சீக்கிரமாகப் போகலாம் என்று கேள்விப்பட்டதால், பஸ்ஸிலே போனேன்.

ஹரிஹரிலிருந்து சிவமாக்கா போகும் வழியில் சில கணவாய்கள் இருக்கின்றன. பஸ் பாதை வெகு அழகாகப் பாம்பு நெளிவதுபோல வளைந்து வளைந்து செல்லுகிறது. ஆனால் போதுமான அகலம் இல்லை. இரண்டு வண்டிகள் எதிர்ப்பட்டால் ஒன்றை ஒன்று தாண்டிப் போக முடியுமோ, முடியாதோ என்று சந்தேகிக்கும்படி இருக்கிறது. பஸ் டிரைவர்கள் சற்று அசிரத்தையாக இருந்தால், பிரயாணிகள் சொர்க்கத்துக்கே போய்விடுவார்கள். பாதையிலே அவ்வளவு மேடு பள்ளங்கள்.

ஹரிஹருக்கும் சிவமாக்காவுக்கும் இடையில் துங்கபத்திரா நதியின் மேல் சிறிய பாலம் ஒன்று இருக்கிறது. வழியின் இரு புறங்களிலும் பலவகை மரங்களும் மூங்கில்களும் பின்னிப் பிணைந்து வளர்ந்திருக்கின்றன. சிவமாக்காவுக்கும் பத்திராவதிக்கும் பதினொரு மைல் தூரம்.

சிவமாக்காவிலிருந்து சிருங்கேரிக்குப் போகிறவர்கள் கொப்பா என்னும் இடத்தில் பஸ் மாறவேண்டும். 'லோக ஸேவா நிரத' என்ற பட்டம் பெற்ற 'குடாப்' பஸ் கம்பெனியாருக்கு இந்த ஊர்தான் ஜங்ஷன். கொப்பாவிலிருந்து, ஆகும்பி, தரிகிரி, சிருங்கேரி, சிவமாக்கா ஆகிய ஊர்களுக்குப் பஸ்கள் போகின்றன.

ஹரிஹரைவிடச் சிவமாக்கா பெரிய ஊர். ஜில்லாவின் முக்கியப் பட்டணம். இந்த இரண்டு ஊர்களும் மைசூர் சம்ஸ்தானத்தைச் சேர்ந்தவை. நான் வெகு காலமாகத் தக்காணத்தில் தங்கிவிட்டதால், நல்ல காபியைக் கண்டு எத்தனையோ நாளாகிவிட்டது. எனவே ஹரிஹரில் தொடங்கிக் காபியைக் குடங்குடமாகக் குடித்து நாக்கைத் திருப்தி செய்தேன்.

சிவமாக்காவிலிருந்து கொப்பா முப்பத்தெட்டு மைல். மேடும் பள்ளமும் நிறைந்து அலை எழுந்த சமுத்திரத்தைப்போல் இருக்கும் வழியில், குறைந்த பட்சம் ஆறு தடவையாவது ரெயில் பாதையைப் பஸ் தாண்டியாக வேண்டும். கொப்பாவிலிருந்து பஸ் மாறி 'ஹரிஹர் புரம்' என்னும் கிராமத்தின் வழியாகப் போகவேண்டும். மேலே இருந்து இறக்கமாக வளைந்து செல்லும் இந்த வழியிலே பெரிய

காப்பிரைட்: ஆனந்தவாணி (தெலுங்கு: 30-5-'48), தம்பு செட்டித் தெரு, சென்னை.

மரக் கூட்டங்கள் சூழ்ந்து பார்க்கப் பயங்கரமாக இருக்கும்.

பெங்களூரிலிருந்தாவது மைசூரிலிருந்தாவது சிருங்கேரி போகிறவர்கள், பஸ் அல்லது ரெயிலில் ஹாஸனுக்குப் போக வேண்டும். அங்கேயிருந்து பஸ்ஸிலோ ரெயில் மார்க்கமாகவோ தரிகிரிக்குப் போக வேண்டும். ஹரிஹரிலிருந்து ரெயிலில் போக வேண்டுமென்றால் 'பீரூர்' என்னும் இடத்தில் இறங்கிப் பஸ்ஸில் போகவேண்டும்.

மைசூர் சம்ஸ்தானத்தைச் சேர்ந்த காடூர் ஜில்லாவில் சிருங்கேரி ஒரு சிறிய பட்டணம். மடத்துக்கு அரை பர்லாங் தூரத்தில் யாத்திரிகர் சத்திரமும், லக்ஷ்மணவரத்தாரின் தர்ம சத்திரமும் இருக்கின்றன. நாம் அங்கே தங்கலாம். முதலில் சொன்ன யாத்திரிகர் சத்திரம் உத்தியோகஸ்தர்கள் தங்க வசதியானது. ஊரின் ஜனத்தொகை ஐயாயிரத்துக்கு மேல் இருக்கும். ஒரு போலீஸ் ஸ்டேஷன், தாலுக்கா ஆபீஸ், தபால் தந்தி ஆபீஸ், லோகல் பண்டு ஆஸ்பத்திரி, காட்டிலாகா ஆபீஸ் எல்லாம் இருக்கின்றன.

ஸ்ரீமத் ஆதி சங்கராசாரியார் முதல் முதலில் இங்கேதான் அத்வைத சித்தாந்தத்தை நிலைநிறுத்தி ஒரு மடம் ஸ்தாபித்தார். பின்பே பூரி, காசி, கும்பகோணம், துவாரகை போன்ற மகா க்ஷேத்திரங்களில் மடங்களை ஸ்தாபித்தார்.

தற்சமயம் சிருங்கேரி மடத்தின் பீடத்தை அலங்கரிப்பவர் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரபாரதி ஸ்வாமிகள். இவர் முப்பத்து நாலாவது சங்கராசாரியார். இவருடைய குருநாதர், சங்கரருடன் ஐக்கியமாகிய ஸ்ரீ சச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்மபாரதி ஸ்வாமிகள்.

ஸ்ரீ ஜகத்குரு சந்திரசேகரபாரதி ஸ்வாமிகளின் தரிசனம் எல்லோருக்கும் எல்லாச் சமயத்திலும் கிடைப்பது அரிது. அவருக்குப்பின் பீடத்துக்கு அதிபதியாக வரப்போகும் முப்பத்தைந்தாவது பட்டம் சங்கராசாரிய ஸ்வாமிகளின் பெயர் ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகள். இவர் பல சாஸ்திரங்களைப் படித்துக் கரை கண்டவர். இவரைத் தினந்தோறும் காலை பதினொரு மணிக்குத் தரிசிக்கலாம்; மாலை வேளைகளில் தரிசிக்க முடியாது. இவர் மடத்தின் சாரதா தேவி கோயிலிலாவது, ஆசிரமத்திலாவது சாரதா பூஜை செய்வார். ஸம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய பாஷைகளைச் சுத்தமாக உச்சரித்துப் பேசுகிறார். மூக்குக் கண்ணாடியணிந்த கூரிய பார்வையுடையவர். முப்பத்தைந்து பிராயத்தைத் தாண்டாத இளைஞர். சரீரக் கட்டு வாய்ந்தவர். சாந்த பூஷணமாக விளங்குகிறார். காஷாயம் தரித்த மகாத்மா. குறிப்பிட்ட நேரங்களில் யார் வேண்டுமானாலும் இவருடன் பேசலாம். மயில்கள் குயில்கள் முதலிய பறவைகளும், பசுக்கள் மான்கள் முதலிய சாது மிருகங்களும் வாழ்ந்த பாரத்வாஜ முனிவருடைய ஆசிரமத்தின் சாந்தியை, இவருடைய ஆசிரமத்தில் காணலாம். மடத்திலிருந்து இந்த ஆசிரமத்துக்குத் துங்கா நதியின் - துங்கபத்திரை அல்ல - சிறிய பாலத்தைக் கடந்து சுமார் இருபது கஜ தூரம் போகவேண்டும்.

மடத்தின் உட்புறத்தில் ஸ்ரீ சாரதாம்பாளின் கோயில், பத்தாவது சங்கராசாரிய ஸ்வாமிகளாகிய ஸ்ரீ வித்தியாசங்கரருடைய கோயில்,

இதர சங்கராசாரியார்களின் சமாதிகள், துங்கா நதியின் கிளை இவற்றைக் காணலாம். கறுத்து நீண்ட மீன்கள் பாய இடையறுமல் ஓடும் துங்கா நதியின் தெள்ளிய நீரைப் பார்த்தால், அந்த ஊர்க்காரர்கள் 'கங்கா ஸ்நானம்; துங்கா பானம்' என்று சொல்லும் பழமொழி எவ்வளவு பொருத்தம் என்று தெரியும். ஸ்ரீ வித்தியாசங்கரருடைய சமாதிச் சிற்பத்தின் வேலைப்பாடும் அழகும் மிகவும் அற்புதம்.

சாரதா தேவியின் கோயிலுக்கு எதிரில் வித்தியாசங்கரர் சமாதியும், அதற்குச் சற்று எட்டிச் சுமார் முப்பத்தைந்து அடி தூரத்தில் துங்கா நதிக் கிளையும் மடத்தின் உட்புறத்தில் இருக்கின்றன. மடத்துக்கு வரும் யாத்திரிகர்களுக்கும் மற்றவர்களுக்கும் சாப்பிட வசதிகள் உண்டு. பக்தர்களிடம் சிறிய தொகையை வசூலித்துக்கொண்டு சாரதா தேவிக்கு அஷ்டோத்தர சத நாமாவளி, சஹஸ்ரநாம பூஜைகளைச் செய்து, கேசரிபாத் பொங்கல் வகையறுக்களை நைவேத்யம்செய்து பிரசாதம் கொடுக்கிறுர்கள்.

ஸ்ரீ அபிநவ வித்தியாதீர்த்த ஸ்வாமிகள் இருக்கும் ஆசிரமத்துக்கு 'ஸச்சிதானந்த விலாஸம்' என்று பெயர்.

ஸ்ரீ சந்திரசேகரபாரதி ஸ்வாமிகள் அங்கேயிருந்து கொஞ்ச தூரத்தில் ஓரிடத்தில் சாமானிய மனிதர்களின் கண்ணில் படாமல் ஒதுங்கி, இரவும் பகலும் தியானத்திலேயே அமர்ந்திருக்கிறுர்.

ஆதிசங்கரரின் காலத்துக்கு முன்பே 'ஸ்ரீ விபாண்டக க்ஷேத்திரம்' என்னும் பெயருடன் சிருங்கேரி புனிதமாக இருந்தது. ஏதோ ஒரு ராமாயணத்திலே இதைப் பற்றிப் பிரஸ்தாபம் வந்திருக்கிறது. விபாண்டகர் கோயில் (இதற்கு மல்லிகார்ஜுனம் என்று வேறு பெயரும் உண்டு), சந்திரமௌளீசுவரர் கோயில் இரண்டும் பார்க்க வேண்டியவை. மல்லிகார்ஜுனன் என்ற பெயருள்ள ஈசுவரனை விபாண்டகர் இங்கே பூஜித்து ஐக்கியம் அடைந்ததால், விபாண்டக க்ஷேத்திரம் என்று இதற்குப் பெயர் வந்ததாகச் சொல்லுகிறுர்கள். வருஷந்தோறும் மாசி மாதத்தில் மல்லிகார்ஜுனருக்கும் சாரதாதேவிக்கும் வெகு விமரிசையாக உற்சவம் நடக்கும். தசராவின் போது நடக்கும் ரதோற்சவத்தைப் பற்றி வர்ணித்துச் சாத்தியம் இல்லை.

நான் சிருங்கேரிக்குப் போகும் போது மனச்சுமை நிறைந்தவனுகச் சென்றேன். இரண்டு நாட்கள் அங்கே தங்கியதில், கண்ணை விட்டகலாத காட்சிகளைக் கண்டு, மனச் சாந்தி பெற்று, இனிய ஞாபகங்களோடு திரும்பினேன்.

கல்லைச் செதுக்கி உருவாக்குவது போல், மனிதனை உருவாக்க முடியாது. தனக்குத்தானே உருவாகும்படி அவனுக்குக் கற்பிக்கத்தான் முடியும்.

—கே. எம். முன்ஷி

உண்மைக்கு வரம்பு உண்டு; பொய்க்கு இல்லை.

—வில்லியம் பிளேக்

**அந்திமந்தாரை:** அந்திமந்தாரைப் பூவைத் தனியே மருந்தாக உபயோகிப்பதில்லை. அதன் இலைகளின் மேல் விளக்கெண்ணெயைத் தடவிச் சூடு பிடித்துச் சிரங்கில் போட்டால், அது சீக்கிரம் உடையும்; இது எல்லோருக்கும் தெரிந்த மருந்துதான். அந்திமந்தாரைச் செடியின் கிழங்கு ஒரு தோலா, மிளகு ¼ தோலா - இந்த இரண்டையும் சேர்த்து அரைத்து அன்றுடம் மாத்திரைகள் செய்து பத்து நாள் உள்ளுக்குச் சாப்பிட்டால், வெட்டை நோய் குணமாகும்.

**செம்பருத்தி:** செம்பருத்திப் பூவின் ரசத்தைப் பிழிந்து சம பாகம் தேங்காய் எண்ணெயில் கலக்கவேண்டும்; கலந்த எண்ணெயை அடுப்பில் வைத்துப் பூவின் ரசம் ஆவியாக மாறும் வரையில் காய்ச்சவேண்டும். பிறகு வடிகட்டி எண்ணெயைத் தலைக்குத் தடவிக்கொண்டால், தலைமயிர் வளரும். பெண்கள் வீட்டுக்கு விலக்காகும் காலத்தில் அதிகப் போக்கு இருந்தால் இரண்டு மூன்று மலர்களை நெய்யில் வதக்கித் தின்பது அதைக் குணப்படுத்தும். தினந்தோறும் அதிகாலையில் ஒன்றிரண்டு மலர்களைத் தின்றால், பருவமாகாத பெண்கள் பருவம் அடைவார்கள். செம்பருத்திப் பூவைக் கசக்கித் தலை வழுக்கையில் தேய்த்தால், வழுக்கை மாறி மயிர் வளரும். இலையின் சாற்றை உட்கொண்டால் பேதியாகும்; நீர் பிரியும்.

**மல்லிகை:** மல்லிகைப் பூவைத் தலையில் வைத்துக்கொள்ளுவதால் கண்பார்வை கூர்மைப்படும். கூந்தலுக்கும் நல்லதுதான்; ஆனால் பேன் புழுக்கும். மல்லிகைத் தழைகளை இளஞ்சூடாக்கிக் கண்ணில் வைத்துக் கட்டினால், கண் சிவப்பு முதலிய வியாதிகள் நீங்கும்.

**தாழம்பூ:** தாழையின் வாசனை, காங்கையையும் காம இச்சையையும் உண்டாக்கும்; ஆனால் எல்லாவித வாதநோய்களையும் சிலேஷ்மத்தையும் போக்கும். இருதயத்துக்குப் பலம் அளிக்கும்.

**நந்தியாவட்டை:** நந்தியாவட்டைப்பூவைக் கண்ணில் ஒற்றிக் கொண்டால், கண்சிவப்பும் கண் பொங்குவதும் நின்று, ஜில்லென்று குளிர்ச்சி ஏற்படும். சாதாரணமாய் எல்லோருக்கும் இந்த வைத்தியம் தெரிந்ததே. கலங்கிய கண்ணிலே நந்தியாவட்டை இலைப் பழுப்புக்களைச் சாறு பிழிந்து ஊற்றினால், கண்ணின் கலக்கம் தெளிந்துவிடும்.

**மகிழம்பூ:** மகிழம்பூவைத் தலையில் வைத்துக்கொள்ளுவதால், தலைவலி, சிரோவாதம், கண்நோய் முதலியன தீரும். மகிழமரப் பட்டையிலிருந்து காய்ச்சிய கஷாயத்தைக் கொப்புளித்தால், ஆடிப்போன பற்களும் கெட்டிப்படும்; எயிற்று நோய்களும் பல் வியாதிகளும் நீங்கும். மகிழமரப் பட்டையைப் பொடி செய்து வைத்துக் கொண்டு உள்ளுக்குச் சாப்பிட்டால், மலடு நீங்கிக் குழந்தை பிறக்கும்.

°°ஓ°°°°ஓ°°

**பொருந்தும் சொல்**

| | | | |
|---|---|---|---|
| 1. க | 4. ட | 7. ண | 10. ந |
| 2. ச | 5. ஞ | 8. ப | 11. ய |
| 3. ங | 6. த | 9. ம | 12. ர |

# நடுக்கடலில்




—அமிர்த பஜார் பத்திரிகை.

# நகைச்சித்திரம்



கனவான் (கறுக குட்டியிடம்) "நெட்டையும் வேண்டாம்; குட்டையும் வேண்டாம். நடுத்தரமாய் வெட்டு" என்ருர். அதன் பிறகு...

—சங்கர்ஸ் வீக்லி.

இந்தியாவில் எத்தனை பாஷைகள்! எத்தனை ஒலிகள்! இவை அனைத்தையும் பயன்படுத்த இதோ ஒரு புதுமையான யோசனை.

# ஒரே பாஷை

அடெல்தா பீடெர்ஸன்

புதிய சுதந்தர இந்தியாவுக்கு ஒரு பொதுப் பாஷை வேண்டும். பாஷா நிபுணர்கள் சேர்ந்து எதைப் பொதுப் பாஷையாக்கவேண்டுமென்று ஆராய்ந்து தீர்மானிக்க வேண்டுமே; அதை எங்கே செய்கிறார்கள்? இதைப்பற்றி அதிருப்தியான அபிப்பிராயமும் விவாதமுமே காதில் படுகின்றன. "இங்கிலீஷை ஒழித்துவிடுங்கள்", "கூடாது; இங்கிலீஷ் இருக்கத்தான் வேண்டும்", "ஒவ்வொருவரும் உடனே ஹிந்துஸ்தானியைக் கற்றுக்கொள்ளவேண்டும்", "ஹிந்துஸ்தானியைத் திணிக்க நாங்கள் இடம் கொடுக்கமாட்டோம்" என்பன போன்ற கூக்குரல்களைக் கேட்கிறோம். ஹிந்துஸ்தானியின்மேல் அபிமானம் உள்ளவர்கள் அதைப் படிக்கும் ஆர்வம் இல்லாதவர்களைக் கோணல் புத்தியுள்ளவர்களென்று எண்ணுகிறார்கள்.

தென்னிந்தியாவிலும் வட இந்தியாவிலும் உள்ள தாய்மொழிகளைப் பற்றிக் கொஞ்சம் ஆராய்வோம். வெகு காலத்துக்கு முன்பே - எத்தனை ஆயிரவருஷங்களுக்கு முன் என்பது யாருக்குமே தெரியாது - அகத்திய முனிவர் தமிழ் மொழி பயின்று அதன் இலக்கணத்தை ஒழுங்குபடுத்தினார்; அது திருத்தமான இலக்கணம். ஆகவே அபூர்ணமாகவும் பொருத்தமற்றதாகவும் முரண்பாடுள்ளதாகவும் உள்ள இலக்கணத்தைப் பெற்ற வேறொரு மொழியைக் கற்கும் விஷயத்தில் தமிழர்கள் சங்கடப்படுகிறார்கள்.

இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பாஷையும் அதைப் பேசும் மக்களின் தனிப்பட்ட தன்மையைப் புலப்படுத்துகிறது. பாஷையின் பிரயோசனம் என்ன? வெறும் வார்த்தைகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துவது மட்டும் அல்ல; பேசும் மனிதனின் மனப் பண்பைப் புலப்படுத்துவதே அதன் பயன். ஒரே பாஷையை வேறு வேறு மக்கள் எப்படியெல்லாம் உருமாற்றிவிடுகிறார்கள் என்று பாருங்கள். உணர்ச்சி வசப்பட்டவர்கள் மிருதுவாகப் பேசுவார்கள்; அவர்கள் பேச்சில் தெலுங்கைப்போல வார்த்தைகளின் கடைசியில் உயிரெழுத்துக்கள் வரும். அறிவுத் திறம் படைத்தவர்கள் வார்த்தைகளின் கடைசியில் மெய்யெழுத்துக்கள் வந்தால்தான் லட்சணம் என்று எண்ணுவார்கள்; சம்ஸ்கிருதச் சொல் தமிழில் வரும்போது 'ன்' அல்லது 'ம்' என்ற மெய்யில் முடியும். திடசித்தம் படைத்த மக்கள் கடைசியிலுள்ள உயிரொலிகளை நறுக்கிவிடுவார்கள்; ஹிந்துஸ்தானி

காப்பிரைட்: ஸ்வதந்த்ரா (ஆங்கிலம்: 10-7-'48), ராயப்பேட்டை, சென்னை.

யில் இப்படியிருப்பதைக் காண லாம். ஹிந்துஸ்தானியில் நமஸ்கார் என்று சொல்கிறார்கள்; அதையே கன்னடத்திலும் மராட்டியிலும் நமஸ்கார என்கிறார்கள்; தமிழில் நமஸ்காரம் என்றும், தெலுங்கில் நமஸ்காரமு என்றும் சொல்கிறார் கள். இந்த மாறுதல்கள் தற்செய லாக அமைந்தவை அல்ல. கன்ன டம்பேசுகிறவர் 'ப' இருக்குமிடத் தில் 'ஹ' வைச் சொல்கிறார்; வங் காளிகள் 'ஒ' என்று அகரத்தை உச் சரிப்பதோடு வகரத்தையெல்லாம் 'ப' ஆக்கிவிடுகிறார்கள். 'ஹாட்' (Hat) என்ற ஆங்கில வார்த்தை யில் வரும் ஒருவகையான 'ஆ' என்ற ஒலி வடக்கே மாத்திரம் இருக்கிறது; தென் கோடியிலுள்ள இலங்கையிலும் அதைக் கேட்க லாம். இப்படியே ஸிந்தியிலும் பஞ் சாபியிலும் சில விசித்திர ஒலிகள் உண்டு. இந்தமாதிரி வேறுபாடுகள் உண்டானதற்குக் காரணம் என்ன என்பதை நாம் முனிவர்களைப்போல சர்வஞ்ஞர்களாக இருந்தால் தெரிந்துகொள்ளலாம். இத்தகைய சப்தங்கள் யாவும் பழங்காலத்தில் வடமொழியில் இருந்தனவென்றும், நாளடைவில் மறைந்தனவென்றும் டாக்டர் பெஸண்டும் பகவான் தாஸும் எழுதியிருக்கிறார்கள்.

இந்தியாவில் மொத்தமாகப் பார்த்தால் 94 விதமான எழுத் தொலிகள் இருக்கின்றன. இவற் றில் 26 உயிர் எழுத்துக்கள். அனுஸ்வாரங்களும் மெய்யெழுத் துக்களும் சேர்ந்து 68. ஸம்ஸ்கிரு தத்தில் இப்போது 11 உயிரும் 35 மெய்களும் இருக்கின்றன. பாதிக்கு மேற்பட்ட ஒலிகள் மறைந்தன.

பாஷையில் ஒற்றுமை ஏற்படும் வழிகளைப்பற்றி நாம் கவனிப்போம். முதலில் இந்தியாவிலுள்ள அனை வரும் இந்தத் தேசத்தில் பேசப் படும் எல்லா ஒலிகளையும் பழக்கப் படுத்திக்கொள்ள வேண்டும். சின் னஞ்சிறு குழந்தை தன் காதில் விழும் எழுத்தொலிகளை உத்ஸாகத் தோடு தெரிந்துகொள்ளும்; அதே மாதிரி உச்சரிக்கும். வயதான பிள் ளைக்கு ஏதாவது கற்றுக்கொடுக்கும் போது, அருகில் இரண்டு வயதுக் குழந்தை இருந்தால் அது கேட் டதை அப்படியே பிடித்துக் கொள்ளும். எல்லா விதமான எழுத் தொலிகளையும் 'ரிகார்டு' எடுத்து வைக்க வேண்டும். அவற்றைக் கேட்டுப் பழகவேண்டும். நம்முடைய பேச்சைப் போல ஒருவனுக்குப் பேசத் தெரியாவிட்டாலும், நம்மால் பேச முடியாத பேச்சை அவன் பேசினாலும் அவனை அயலான் என்று சொல்கிறோம். நம் தாய்நாட்டிலுள்ள எல்லா எழுத் தொலிகளையும் கேட்டுப் பழகிக் கொள்வதோடு அவற்றை நம் லிபி களில் எழுதிக் காட்டவும் ஏற்பாடு செய்யவேண்டும்.

இந்திய லிபிகளில் அதிகமாகச் சீர்திருத்தம் செய்ய வேண்டும். இந்தியாவில் பேசப்படும் எழுத் தொலிகள் அனைத்தையும் குறிக்க லிபி இல்லை. தமிழில் F என்ற ஒலி யைக் குறிக்க வேண்டுமானால், அதற்குக் கிட்டத்தட்டச் சமமான ஒலியுடைய 'வ'வை விட்டுவிட்டு, ஒலி ஒற்றுமையேயில்லாத 'ப' வை இப்போது உபயோகிக்கிறோம். காபி என்றும் பிப்ரவரி என்றும் சொல்கிறோம்.

பொதுப்பாஷை சம்பந்தப்பட்ட வரையில் நான்கு இயல்புகள் அவ சியமாக அமையவேண்டும்.

(1) சுலபமாக உச்சரிக்கக்கூடிய தாக, காதுக்கு இனிமையாய் இருக்கவேண்டும்.

(2) வாக்கிய அமைப்புச் சுலபமாக இருக்கவேண்டும்.

(3) எல்லோருக்கும் ஒரே வித மரியாதை செலுத்தும் முறையில் ஒருமை பன்மை முதலிய இலக்கண உருவங்களை வைத்துக் கொள்ள வேண்டும்.

(4) அதன் லிபி படிக்கவும் எழுதவும் சுலபமாகவும், ஒவ்வொரு சப்தத்தையும் தனியே குறிக்கும் குறியீடுகளை உடையதாகவும் அமைய வேண்டும்.

1. உச்சரிப்பதற்குக் கஷ்டமான சப்தங்களைப் பொது மொழியிலிருந்து விலக்கிவிட வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் உச்சரிக்க முடியாமல் ஆளுக்கு ஒருவிதமாகச் சிதைத்து வழங்குவார்கள்; நாளடைவில் அவை தனித் தனிக் கிளைமொழிகளாகிவிடும்.

2. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்றையும் இவை போன்றவற்றையும் மிகவும் சுலபமான முறையில் வெளியிடும்படி இருப்பதுதான் சிறந்த இலக்கணம். தமிழில் ஆல், ஆலும் என்ற விகுதிகள் வினைச்சொற்களைச் சுலபமாக மாற்றுகின்றன. இங்கிலீஷில் அநாவசியமான விகுதிகளும் விகாரங்களும் இல்லாமையால் அது சுலபமாகப் பரவுகிறது. மலையாளத்தில் வினைவிகுதிகளில் மாறுபாடே இல்லை.

தமிழில் உள்ள அ, இ என்ற சுட்டெழுத்துக்களும், ஆ என்ற வினாவெழுத்தும், ஏ என்ற இடைச்சொல்லும் மிக எளிதில் வார்த்தைகளின் பொருளைத் தெரிவிக்க உதவுகின்றன. இத்தகையவை மிகவும் உபயோகமான முறைகள். அஃறிணைப் பொருள்களுக்குப் பால் பிரிவு அவசியம் இல்லை, 'பென்ஸில்' பெண்பால் என்று தெரிந்துகொண்ட பிறகே குறிப்பிட்ட ஒரு பாஷையைப் பேச முடியுமென்றால் தமிழன் அதை எவ்வாறு சுலபமாகக் கற்றுக் கொள்ள முடியும்?

3. ஜனநாயகம் பரவிய நாட்டில் ஏழைகளை மரியாதை யில்லாமல் குறிப்பிடும்படியான வார்த்தைகளே இருக்கக்கூடாது. எல்லாரோடும் மரியாதையாகப் பேசுவதே நியாயம். ஆகவே, தமிழில் யாராலும் 'நீங்கள்' என்று சொல்வதை விரும்புகிறார்; நீ என்னும் வழக்குக் குறைந்துகொண்டு வருகிறது. ஹிந்துஸ்தானியில் ஒவ்வொருவரும் 'ஆப்' என்றே பேசுவதை விரும்புகிறார். அது படர்க்கைச் சொல். முன்னிலைச் சொல் வர வர மறைந்து வருகிறது. அப்படி மறையும் சொற்களை மறுபடியும் வழக்கில் கொண்டு வரவேண்டும். நீ, அவன் என்ற சொற்களை உயர்ந்த நிலையிலுள்ளவர்களுக்கும் உபயோகித்து, அவற்றிற்கு வந்த தாழ்வைப் போக்கவேண்டும்.

4. பொது லிபி ஒன்றை வகுக்கும்போது அயல் மொழியிலுள்ள ஒலிகளைக் குறிப்பதற்கு ஏற்றபடி வகுப்பது நலம். இப்போதைக்கு இங்கிலீஷில் உள்ள ரோமன் லிபியைச் சில குறியீடுகளோடு உபயோகித்துக்கொள்ளலாம். எல்லா வித மான பாஷைகளையும் ரோமன் லிபியைக்கொண்டு எழுதிக் காட்டும் வழக்கத்தை ஆராய்ச்சிக்காரர்கள் வைத்துக்கொண் டிருக்கிறார்கள். இத்தனை காலம் அநுபவத்தில் வந்த அந்த முறையை நாம் தள்ளிவிடக் கூடாது. புது லிபியை உண்டாக்கும் வரையில் அதை உபயோகிக்கலாம்.

எல்லாப் பாஷைகளுக்கும் பொதுவாகப் பல வார்த்தைகள் வழங்குகின்றன. அவற்றை யெல்லாம் தொகுத்து ஓர் அகராதியாக வெளியிடவேண்டும். ஜல்தி, பக்கா, ஜலம் முதலிய வார்த்தைகளும், போஸ்ட் ஆபீஸ், பாங்க், ஸ்டாம்ப், பென்ஸில் முதலிய இங்கிலீஷ் வார்த்தைகளும் எல்லா இந்தியப் பாஷைகளிலும் வழங்குகின்றன.

ஒரே வார்த்தை பல பாஷைகளில் எப்படி எப்படி வழங்கும் என்று தெரிந்துகொள்வதில் குழந்தைகளுக்குப் பிரியம் உண்டு. ஒரு பாஷையில் பன்னிரண்டு வார்த்தைகளைத் தெரிந்து கொள்வதைவிட ஒரே பொருளுக்குப் பன்னிரண்டு பாஷையிலுள்ள வார்த்தைகளைத் தெரிந்து கொள்வது சுலபம்.

இந்திய பாஷைகளில் உள்ள நல்ல அம்சத்தை யெல்லாம் தொகுத்துப் பொதுமொழியை ஏற்படுத்துவோம். இலக்கண விஷயத்தில் தமிழிலிருந்து பலவற்றை மேற்கொள்ளலாம். தெலுங்கிலிருந்து இனிய ஓசையை அமைக்க வழி காணலாம். சுருக்கமான வார்த்தைகளை ஹிந்துஸ்தானியிலிருந்து தெரிந்துகொள்ளலாம். இலக்கணத்தைச் சுருக்கமாக அமைக்க மலையாளம் உதவும். லிபியில் சிக்கனமாக இருக்கக் குஜராத்தியைப் பின்பற்றலாம். ஒவ்வொன்றும் ஒவ்வொன்றை அறிவிக்கும்.

இந்தியா எப்பொருளையும் இணைத்துத் தழுவிக்கொள்ளும் இயல்புடையது. சமயமோ, கலையோ ஏதானாலும் எதையும் விடாமல் தழுவிப் பொருத்திக்கொள்வது. ஆகவே பாஷையின் விஷயத்திலும் இது வேண்டாம், அது வேண்டாம் என்று எதையும் ஒதுக்காமல் ஒவ்வொரு பாஷையையும் அதற்குள்ள கௌரவத்தோடு வைத்துப் பாதுகாப்பதே அதற்கு ஏற்ற பண்பு.

இந்த யுகசந்தியில், இருப்பது போதும் என்ற திருப்தியோடு இருக்கக்கூடாது. உண்மையான தும் நீடித்து நிற்பதுமான பொது மொழியை ஆய்ந்து ஓய்ந்து வகுப்போம். அப்படிச் செய்தால் இந்தியாவின் கலைவளத்துக்கும், சமாகமப்படுத்தும் ஆற்றலுக்கும் அடையாளமாக யுக யுகாந்தரமாக அந்த மொழி நிலவும்.

## மனிதகுல முன்னேற்றம்

மனிதகுலம் முன்னேறியிருப்பதன் அடையாளங்கள்:

கி. மு. 399: சாக்ரடீஸை விஷமிட்டுக் கொன்றார்கள்.
கி. பி. 29: கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தார்கள்.
,, 650: முகம்மது நபி மெக்காவுக்குத் தப்பியோடினார்.
,, 1865: ஆபிரகாம் லிங்கனைக் கொலை செய்தார்கள்.
,, 1918: லெனினைத் துப்பாக்கியால் ஒருவன் சுட்டான்; அந்தக் குண்டு உடம்பிலேயே தங்கி 1924–ஆம் வரு அவரைக் கொன்றுவிட்டது.
,, 1922: மைக்கேல் காலின்ஸைச் சுட்டுக் கொன்றார்கள்.
,, 1948: ஜனவரி 30: மகாத்மா காந்தியை ஒருவன் சுட்டுக் கொன்றான்.

—'மலபார் ஹெரால்டு



# குழந்தைகள் குறும்பு

என் அக்காள் ஒரு பட்டு ரவிக்கைச் சீட்டி வாங்கினாள். அவள் புருஷன் வீட்டுக்கு வந்ததும், "ஒரு சீட்டிக்கு இப்படி அநியாய விலை கொடுத்து யாராவது வாங்குவார்களா?" என்று திட்டினார். வாக்கு வாதம் வலுத்தது. அக்காள் புருஷன் முகமெல்லாம் சிவக்க ஏதோ திட்டிக்கொண்டே வெளியே போய்விட்டார்.

அக்காள் மகன் ஏழு வயதுச் சிறுவன். இந்தச் சமயத்தில் வெகு நிதானமாக ஒரு கேள்வி கேட்டான். "அம்மா, அப்பா மறுபடியும் வீட்டுக்கு வருவாரா? மாட்டாரா?" என்று விசாரித்தான்.

அக்காள் சலிப்புடன், "அதென்னவோ எனக்குத் தெரியாது" என்றாள்.

"அப்பா வரவே வராத போனால், அவர் தோசையை நான் எடுத்துக்கலாமா?" என்று மறுபடியும் கேட்டான் சிறுவன்.

ஃ ஃ

காமுவும் சோமுவும் பாட்டி வீட்டுக்குப் போயிருந்தார்கள். காமு அக்காள்; சோமு தம்பி. காமுவுக்கு வயது ஏழு; சோமுவுக்கு வயது ஐந்து. பேரன் பேத்தியை உள்ளே ஓர் அறையிலே படுக்கப் போட்டுவிட்டு, பாட்டி திண்ணையிலே போய்ப் படுத்தாள். சற்றுக் கண்ணயர்ந்தாள்.

திடீரென்று காச்சு மூச்சென்று சத்தம் கேட்கவே விழிப்புற்றாள். உள்ளே குழந்தைகள் போடும் சத்தந்தான் என்று அறிந்தாள். உள்ளே போனாள்.

"ஏ குழந்தைகளா, அர்த்த ஜாமம் ஆச்சு; இன்னும் உங்களுக்குத் தூக்கம் வரவில்லையா? என்ன லூட்டி இது?" என்று கோபித்துக்கொண்டாள்.

"இல்லே, பாட்டி! நான் தூங்கிப் போயிட்டேன்; காமுதான் தூங்கல்லே" என்று கண்ணை மூடிக்கொண்டே கத்தினான் சோமு.



விருந்தாளியும், குஞ்சுவின் தகப்பனாரும் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள்.

குஞ்சு தனது சிலேட்டை எடுத்து வைத்துக்கொண்டு எதிரே உட்கார்ந்தான். விருந்தாளியைப் பார்த்துப் பார்த்துச் சிலேட்டில் ஏதோ வரையத் தொடங்கினான்.

"என்னடா வரைகிறாய்?" என்று கேட்டார் தகப்பனார்.

"இந்த மாமாவின் படம் வரைகிறேன்" என்றான் குஞ்சு.

கொஞ்சநேரம் ஆயிற்று. "என்னடா, இன்னும் முடியவில்லையா? எங்கே காட்டு, பார்க்கலாம்" என்றார் தகப்பனார்.



"முடிஞ்சுடுத்து. ஆனால் எனக்குப் பிடிக்கலே. அதுக்கு ஒரு வால் வெச்சு நாய்க்குட்டி பண்ணிடப் போறேன்" என்றான் குஞ்சு!

ஃ ஃ

ராஜம் நாலாவது வகுப்புக்குப் போனதும், வாத்தியார் வான சாஸ்திரம் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினார். அவனுக்கு இந்தச் சூரியன், சந்திரன், நட்சத்திரங்களைப்பற்றிய விஷயங்களெல்லாம் புதுமையாக இருந்தன. தான் கற்ற விசேஷங்களை யாருக்காவது சொல்ல அவனுக்கு ஆசை வந்தது.



தங்கை கனகத்தை அழைத்தான். வானத்தில் உள்ள ஒரு நட்சத்திரத்தை அவளுக்குச் சுட்டிக் காட்டினான்.

"அதோ பார் கனகம், அந்த நட்சத்திரம் இத்தனை சின்னதாகத் தெரிகிறதல்லவா? ஆனாலும், அது நமது பூமியைவிட எத்தனையோ கோடி மடங்கு பெரியது. இது தெரியுமா உனக்கு?" என்றான்.

கனகம் இதைச் சிறிதும் நம்பவில்லை. "அப்படியானால், மழையை ஏன் அது தடுக்கவில்லை?" என்று அவள் கேட்டாள்.

ஃ ஃ

குழந்தை ஜகம் ஒரு நாள் தன் விளையாட்டிலிருந்து குடு குடு என்று வீட்டுக்கு ஓடிவந்தான். "அம்மா, பிசாசு என்றால் யார்? அது ஒரு மனிதனா?" என்று விசாரித்தான்.

பிசாசோடு மனிதனைச் சேர்த்துத் தன் குழந்தை எண்ணிவிடக் கூடாது என்று தாய் நினைத்தாள். "இல்லை, அது மனிதன் அல்ல; மனிதனைவிட மோசமானது" என்றாள்.

"அப்படியானால், என்ன? அது ஒரு பெண்ணா?" என்று மறுபடியும் கேட்டான் குழந்தை.

# அரசன் - இங்கும் அங்கும்

ஏ. எஸ். ஆள்தேகர்

சுதேச மன்னர்கள் சட்ட வரம்புக்கு உட்பட்டவர்களாக ராஜ்யம் ஆள வேண்டும் என்று சென்ற ஆறுமாத காலமாக இந்திய யூனியன் சர்க்கார் வற்புறுத்தி வருகிறது. இந் நிலையில், அரசனின் தெய்வாம்சத்தைப்பற்றிக் கீழ்நாட்டிலும் மேல்நாட்டிலும் வழங்கும் அபிப்பிராயங்களை ஆராய்வது ரசமாக இருக்கும் அல்லவா?

அரசன் தெய்வாம்சம் உள்ளவன் என்ற கொள்கை பிற்கால ஹிந்து சமுதாயத்தில் மெல்ல மெல்ல உண்டாகிப் பரவியது. வேத காலத்தில் அந்தக் கொள்கை இல்லை. வேதம் எத்தனையோ அரசர்களைப்பற்றிச் சொல்கிறது. ஆனால் ஒருவனையாவது தெய்வாம்சம் படைத்தவனாகச் சொல்லவில்லை. ஆனால் த்ராஸதஸ்யு என்ற அரசனை மாத்திரம் ஓரளவு தெய்வாம்சம் பெற்றவனென்று சொல்கிறது. ஏனென்றால் அவன், புருஷனை இழந்த தன் தாய்க்குத் தெய்வத் திருவருளால் பிறந்தவன் என்று மதிக்கப்பட்டான்.

கி. மு. 1500க்கும் கி. மு. 800க்கும் இடைப்பட்ட பிராம்மண காலத்தில்தான் அரசன் தெய்வாம்சமுடையவன் என்ற செய்தி மெல்ல மெல்ல வேரூன்றத் தொடங்கியது. அரசனுக்குப் பட்டாபிஷேகம் செய்யும்போது தெய்வங்களையெல்லாம் வழிபடுவார்கள். அந்தத் தெய்வங்களின் திருவருளால் பட்டாபிஷேகம் இனிது நடைபெறுமென்று நம்பினார்கள். அரசன் பகைவரோடு போரிட்டுப் பெறும் வெற்றிக்குத் தெய்வத் திருவருளே காரணம் என்று கொண்டார்கள். இத்தகைய கருத்துக்களால் தெய்வத்தின் அருளுக்குச் சிறப்பாகப் பாத்திரமானவன் அரசன் என்ற நம்பிக்கையும், ஆகவே அவன் மற்ற மக்களைக் காட்டிலும் உயர்ந்தவனென்ற கொள்கையும் ஏற்பட்டன.

கி. மு. 300 முதல் கி. பி. 300 வரைக்கும் உள்ள ஸ்மிருதி காலத்தில் அரசியல் நூலாசிரியர்கள், சில வகைகளில் சில தெய்வங்களுக்கும் அரசனுக்கும் உள்ள ஒப்புமையை மாத்திரம் எடுத்துக் காட்டினார்கள். அரசன் துஷ்டர்களைத் தண்டிக்கையில் அக்கினி தேவனாகவும், ஒற்றர் மூலமாக ராஜ்யம் முழுவதும் நடைபெறுவனவற்றை அறிகையில் சூரியனாகவும், நன்மை செய்தவர்களை ஆதரித்துத் தீமைபுரிபவர்களைத் தண்டிப்பதில் யமனாகவும், தக்கவர்களுக்குச் செல்வத்தை வழங்குவதில் குபேரனாகவும் ஆகிறானென்று மகாபாரதம் சொல்கிறது.

இப்படித் தெய்வங்களுக்கும் அரசனுக்கும் செயல்களில் ஒப்புமை இருக்கும் செய்தியை வற்புறுத்திச் சொல்லச் சொல்ல, நாளடைவில் அரசனே தெய்வத்தின் அம்சம் உடையவன் என்ற கொள்கை எழுந்தது. மகா பாரதத்தில் ஓரிடத்தில், அரசனைச் சாமானிய மனிதனாக எண்ணக்கூடாது, அவன்

காப்பிரைட்: நியூ டெமொகிராட் (ஆங்கிலம்: 9-7-'48), கோட்டை, பம்பாய்.

மனித உருவத்தில் வந்த கடவுள் என்று குறிப்பிட்டிருப்பதைக் காண்கிறோம். வேறு பலர் திக்குப் பாலகர்கள் எட்டுப் பேருடைய அம்சங்களில் சிறிது சிறிது சேர்ந்து அரசன் அமைகிறான் என்று சொல்லியிருக்கிறார்கள்.

சீனர்களும் அரசனைத் தேவ குமாரன் என்றே நம்புகிறார்கள். கி. பி. 50 முதல் கி. பி. 250 வரையில் வாழ்ந்த குஷாண அரசர்கள் இந்தக் கொள்கையை இங்கே பரப்பினார்கள். அவர்கள் தேவபுத்திரர் என்ற சிறப்புப் பெயரை உடையவர்கள். மேக லோகத்திலிருந்து இறங்கும் கோலத்தில் தங்கள் உருவத்தை நாணயங்களில் அமைத்தார்கள்.

அவர்களுக்குப்பின் வந்த குப்த மன்னர்களில் ஒருவராகிய சமுத்திர குப்தன் காலத்துக் கவிஞர் ஒருவர் அவனைத் தெய்வமென்றே சொல்கிறார். ஆனால் அவன் மனிதரைப் போன்ற செயல்களைக் கருணையினால் மேற்கொண்டதனால் மனிதனாகத் தோற்றுகிறானென்று புகழ்கிறார்.

அரசியல் நூலாசிரியர்கள், அரசனுக்குத் தெய்வாம்சம் உண்டென்பதற்குப் பொருள் அவன் மிக்க சிறப்பை உடையவன் என்பது தான். செங்கோல் செலுத்தும் புண்ணிய மூர்த்திகளாகிய பூபாலர்களையே தெய்வாம்சமுடையவர்களென்று சுக்கிரனும் பிறரும் கூறுவர். கொடுங்கோல் மன்னனை அசுரனென்றே சொல்லவேண்டும்.

இந்தியாவில் பழங்காலத்தில் எந்தக் கொடுங்கோல் அரசனும் தான் தெய்வாம்சம் பெற்றவன் என்று சொல்லிக்கொண்டு அக்கிரமங்களைச் செய்ய முடியாது. "நான் கடவுள் ஒருவருக்கே உத்தரவாதம் சொல்ல வேண்டியவன்" என்று முதல் ஜேம்ஸ் மன்னன் சொன்னான். அப்படி இந்திய அரசன் சொல்ல இடமில்லை. தன் கடமையை மறந்து கொடுமை புரியத் தலைப்பட்ட கணத்தில் அவனது தெய்வத்தன்மை மறைந்து போய்விடும்.

மேல்நாடுகளில் அரசனுக்குத் தெய்வாம்சம் இருப்பதாக வைத்ததற்குக் காரணம், அவன் யதேச்சாதிகாரத்தை நிலை நாட்டவேண்டுமென்பதே. பிளாக்ஸ்டன் என்பவர், அரசன் குற்றம் செய்தால் கடவுளையன்றி வேறு யாருக்கும் அவனைக் கேட்கும் உரிமையில்லை என்று சொல்கிறார். "அரசனைச் சாதாரண மனிதனாக எண்ணுவது தவறு. சாட்சாத் கடவுளின் உருவமே அவன்" என்று பூஸெட் பாதிரியார் சொல்கிறார். யாரும் அறிய அரசன் கொடுமை புரிந்தாலும் அவன் குடிகள் அவனுக்கு அடங்கி நடக்கத்தான் வேண்டும்.

ஹிந்து அரசியல் நூலாசிரியர்கள் இத்தகைய பைத்தியக்காரக் கொள்கையைச் சொல்லவில்லை. உபமானத்துக்காகத் தெய்வத்தை அரசனோடு இணைத்துச் சொன்னார்கள்; அவ்வளவுதான். அரசன் பாவச் செயல் புரிந்து கொடுமையிழைத்தால் குடிமக்கள் அவனை வழிபடாமல் இருப்பது மட்டுமன்று, அவனை எதிர்த்துப் போரிடலாம்; கொன்றேவிடலாம்.

அரசனுக்குத் தெய்வத்தன்மை உண்டென்று சொல்லும் மனு முதலியவர்கள்கூட அவனும் குற்றம் செய்யக் கூடியவனே என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். அரசனுக்குத் தெய்வாம்சம் உண்டென்று நம்பினாலும், அந்தக் காரணத்தால் அவனுக்கு எல்லாரிலும் மேலான

ஞானம் வந்துவிடுகிறதென்று சொல்வதில்லை. அவனுக்கும் பயிற்சி வேண்டும். கலைப்பயிற்சியினால்தான் அவனிடத்திலுள்ள ஆற்றல், மலர்ச்சி பெற வேண்டும். அரசன் கவனத்துடனும் யோசனையுடனும் கல்வி பயிலவேண்டுமென்று மனு சொல்கிறார். பணிவையும் அடக்கத்தையும் அவன் பயிலவேண்டும். மூத்தோர் சொல்லைக் கேட்டுப் பயன்பெற வேண்டும். பல கலைகளையும் தெரிந்துகொள்ள வேண்டும். இவ்வளவும் இருந்தால் தான் அரசனுக்குத் தெய்வத் தன்மை இருப்பதாகச் சொல்லலாம்.

அது மாத்திரம் அல்ல. தெய்வத்தன்மை உடையவனென்பதனால், அரசன் சர்வாந்தர்யாமி, சர்வஞ்ஞன் என்று எண்ணவும் முடியாது. தக்க மந்திரிகளின் உதவியின்றி அரசனால் ராஜ்யத்தை ஆள முடியாது என்று மனுவே சொல்கிறார்.

தெய்வத்தன்மை பெற்றவன் என்பதனால் அரசன் கர்மத்தினின்றும் வழுவ முடியாது. குடிகளுள் இழிந்தவன் தன் பாவச் செயல்களுக்காக எப்படிக் கஷ்டப்பட வேண்டுமோ அப்படியே அரசனும் கர்மபலனை அநுபவிக்கத் தான் வேண்டும்.

அரசன் தெய்வாம்சம் உடையவனென்றால், தர்மமும் அத்தகையதே; ஆதலால் அரசன் தர்மத்தைப் பாதுகாக்கவேண்டும். பட்டாபிஷேக காலத்தில் தெய்விகமான தர்மத்தைப் பாதுகாப்பதாக அவன் சத்தியம் செய்யவேண்டும். ஹிந்து சமுதாயத்தில் தர்மமே எல்லாவற்றிலும் சிறந்தது. அரசன் தெய்வாம்சம் பெற்றவன் என்று சொல்வதனால் நேரக்கூடிய குறைபாடுகளுக்கு, தர்மத்துக்கு அளித்திருக்கும் சிறப்பு ஈடு செய்கிறது.

மேலே சொன்னவற்றிலிருந்து ஹிந்து அரசியல் ஞானிகளில் ஒரு சாரார் அரசனுக்குத் தெய்வாம்சம் இருப்பதாகச் சொன்னார்கள், அதுவும் அரைமனசாகச் சொன்னார்கள் என்பது தெரியவரும். அவர்கள்கூட அரசன் மனம் போன போக்கில் கொடுங்கோன்மை செலுத்தக்கூடாது என்றனர். மேல்நாட்டினர் அப்படிச் சொல்லவில்லை. நம் நாட்டின் கொள்கைப்படி கடவுளைப்போன்ற நற்குண நற்செயல்களை உடையவனே தெய்வாம்சம் பெற்றவனென்ற சிறப்பைப் பெறுவான். இல்லாவிட்டால் அவனை அசுரனாகவே எண்ணினர். குடிமக்கள் அவனை நீக்கவும், அவசியமானால் கொன்றுவிடவும் உரிமையுடையவர்கள்.

### டாகுர் செய்த கேலி

டாக்டர் டாகுர் மலேயாவுக்குப் போயிருந்தபோது, அவரை ஒரு பத்திரிகையின் ஆசிரியர் தமது சுயநலத்துக்குப் பயன்படுத்திக்கொள்ள முயன்றார். அது பலிக்கவில்லை. ஆசிரியர் தமது பத்திரிகையில் டாகுரைக் கண்டபடி திட்டத் தொடங்கினார். டாகுர் அதிகமாய் ஒன்றும் சொல்லவில்லை. "ஆசிரியர் என்னை ஓர் அரசியல்வாதி என்று நினைத்துவிட்டார்; நான் அவரை ஒரு கனவான் என்று நினைத்துவிட்டேன். இரண்டு பேர் நினைப்புமே தவறு என்று இப்போது எனக்கு விளங்கி விட்டது" என்று மட்டும் சொன்னார். —'இந்தியா டைஜெஸ்ட்'

# பிரபுக்கள் வாழ்ந்த விதம்

ஹஜாரிபிரஸாத் த்விவேதி

**அஷ்ட லக்ஷ்மிகளும் முற்றத்திலே நர்த்தனமாடலாம். என்றாலும் அநுபவிக்கத் தெரிய வேண்டாமா? அந்தக் காலத்துப் பிரபுக்கள் கலையழகு ததும்பச் செல்வத்தை அநுபவித்தார்கள். பல பழம் நூல்களை ஆராய்ந்து இந்தக் கட்டுரையை எழுதியுள்ளவர் சாந்தி நிகேதனத்தில் ஹிந்திப் பகுதிக்குத் தலைவர். சம்ஸ்கிருதத்தில் வல்லவர். 'விசுவபாரதி' பத்திரிகையின் ஆசிரியர்.**

கலைமயமான உல்லாச வாழ்க்கை எந்த நாட்டினருக்குமே ஸ்திரமாக வாய்ப்பதில்லை. அத்தகைய வாழ்க்கையை அநுபவிப்பதற்கு ஏராளமான செல்வம் வேண்டும், வளம் வேண்டும், போகத்துக்கும் தியாகத்துக்கும் தேவையான ஆற்றல் வேண்டும். இவையெல்லாவற்றுக்கும் மேலாக, எழிலையும் மென்மையையும் பாதுகாக்கும் பௌருஷம் வேண்டும். மிருக இச்சையையும் உலக இன்பங்களையுமே சுகங்களுக்கெல்லாம் காரணமாக மதியாத வாழ்க்கை நோக்கமும், சரித்திர பூர்வமாக மகத்தான பரந்த பண்பாடும், சுயமதிப்பை எந்த வாழ்க்கை வசதிக்கும் மேலாகக் கருதும் பெருமிதமும், வாழ்வின் எந்தத் துறையிலும் அழகின்மையைக் காணச் சகிக்காத தன்மையும் கொண்ட ஒரு நாட்டினருக்குத்தான் இவை அனைத்தும் கிடைக்கும்.

யந்திர உற்பத்தி பெருகிப்போன இந்தக் காலத்திலே உல்லாசம் என்பது மிகவும் மலிவாகிவிட்டது. பண்டைக் காலத்திலே இந்தியாவில் வாழ்ந்த தனிகர்கள் கல்விக்கும் கலைக்கும் தமது செல்வத்தை வாரி அளித்தார்கள். அபாரமான பணக்குவியலைத் தாம் மட்டுமே ஆளும் கஞ்சர்களாக இராமல், கலைஞர்களும் சிற்பிகளும் வேலையாட்களும் அடங்கிய ஒரு பெரும் கூட்டத்துக்கு அதைப் பங்கிட்டு வந்தார்கள்.

அதிகாலையில் பிராம்ம முகூர்த்தத்திலே குலமகன் எழுந்திருப்பான். அவன் எழுந்தவுடனே சிற்பிகளுக்கும் சேவகர்களுக்கும் வேலை மும்முரமாக இருக்கும்.



கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டே தாம்பூலம் தரிப்பான்..

காப்பிரைட்: விசுவபாரதி பத்திரிகா (ஹிந்தி: ஜனவரி-மார்ச் '44), சாந்திநிகேதனம், வங்காளம்.



பொன் வெள்ளிப் பாத்திரங்களில் நறுமண நீர்...

காலையில் எழுந்து கைகால் கழுவி வந்ததும் அவன் பற்குச்சியால் பல் தேய்ப்பான். அது அப்பொழுது ஒடித்த சாதாரணப் பற்குச்சி அல்ல; யல நாள் முன்பே ஒடித்து, கடுக்காய்ப் பொடி கலந்த கோமூத்திரத்தில் ஒரு வாரம் ஊறவைத்து, மூலிகைகளும் வாசனைச் சாமான்களும் சேர்த்துத் தயாரான பற்குச்சி. கஸ்தூரி, அகில், குங்குமப்பூ முதலியவற்றைப் பால் ஆடையில் இழைத்துத் தயாரித்த பூச்சை வேலைக்காரன் கொண்டுவந்து கொடுப்பான். இதைப் பூசிக் கொள்வதால் சர்மம் மென்மையாகவும் மழமழப்பாகவும் இருக்கும். இதன் வாசனை வெகு நேரம் நீடித்திருக்கும்.

பிறகு கூந்தலுக்குத் தூபமிடுவார்கள். கூந்தலை அழகாக வைத்துக்கொள்வது தனிக் கலை. "என்னதான் பூமாலையும் பட்டாடையும் பொன்னணியும் பூண்டாலும், உன் கூந்தல் நரைத்துப் போனால் எதுவும் அழகாக இராது. ஆதலால் கூந்தலின் அழகைக் காப்பதில் அஜாக்கிரதையாக இராதே" என்கிறார் வராகமிகிரர். நரையைத் தடுப்பதற்கு எத்தனையோ முறைகள் பழக்கத்திலே இருந்தன. புத்தகங்களுக்கும் ஆடைகளுக்குங் கூடத் தூபம் போட்டு நறுமணத்தோடு வைத்துக்கொள்வார்கள். கூந்தலுக்குத் தூபமிட்டுச் சிறிது நேரம் விட்டு வைத்துப் பிறகு ஸ்நானம் ஆனதும் வாசனைத் தைலம் தடவி வாரிக் கொள்வார்கள். சண்பகம், மல்லிகை முதலிய மலர்மாலைகளை அணிந்து குலமகன் கண்ணாடியில் அழகு பார்த்துக்கொண்டே தாம்பூலம் தரிப்பான். வெற்றிலை பழங்காலத்தில் பூஜைக்கும் உல்லாச வாழ்க்கைக்கும் சமமாகப் பயன்பட்டது. பிறகு உத்தரீயத்தைப் போட்டுக்கொண்டு, குலமகன் தன் வேலையைக் கவனிக்கப் போவான். அவனுடைய வேலை வியாபாரமாக இருக்கலாம்; அரசாட்சியில் ஒரு பகுதியாக இருக்கலாம்; அல்லது மந்திரி சபையில் ஆலோசனை கூறுவதாக இருக்கலாம். அந்தக் காலத்துப் பிரபுக்களிலே எல்லாச் சாதியாரும் இருந்தார்கள்.

நடுப்பகலுக்குச் சற்று முன்பு வேலைகளை முடித்துக்கொண்டு, குலமகன் ஸ்நானம் செய்ய வருவான். ஸ்நானம் என்பது சாதாரண விஷயமல்ல. சமவயதுள்ள நண்பர்களோடு அவன் சிறிது நேரம் தேகப் பயிற்சி செய்வான். கன்னத்திலும் நெற்றியிலும் இரண்டொரு வேர்வைத் துளிகள் தோன்றியதும், அவன் ஸ்நான அறைக்குப் போவான். பளிங்குக் கல் மேடையிலே, ரத்தினமிழைத்த பொன் வெள்ளிப் பாத்திரங்களில் நறுமணநீர் நிரப்பி வைத்திருப்பார்கள். அரைத்துக் காடியிட்ட நெல்லிப்பருப்பை வேலைக்காரன் மெதுவாக உடலில் பூசுவான்; வாசனை எண்ணெயால் உடம்பை உருவிவிடு

வான். கழுத்துப் பட்டையை மட்டும் வெகு நேரம் தேய்ப்பான். அறிவைக் கொண்டு வாழ்பவர்களின் கழுத்துப்பட்டையில் இப்படி எண்ணெய் தேய்ப்பதால் மூளை நரம்புகள் வலுவாகும் என்பார்கள். ஸ்நானத் தொட்டியில் சிறிது நேரம் அமர்ந்தபின்பு குலமகன் மேடைமேல் உட்காருவான். வாசனைத் தண்ணீர் அவன் தலையிலே நீர்வீழ்ச்சிபோலக் கொட்டும். மனத்திருப்தியோடு அவனுடைய ஸ்நானம் முடியும். பட்டுத்துணியால் தலையைத் துவட்டுவார்கள்.

பாம்பு உரித்த தோல்போன்ற வெண்மையும் பளபளப்புமான ஆடைகளை அணிந்து, அவன் பூஜை செய்யப்போவான். பிறகு சாப்பாடு. அறுசுவையன்னம் புசித்தபின்பு அவன் சற்று இளைப்பாறுவான். வேலைக்காரன் வந்து மெதுவாக உடம்பைப் பிடித்துவிடுவான். உடம்பைப் பிடித்துவிடுவது ஒரு கலை. சாருதத்தனுடைய வேலைக்காரன் ஒருவன் இந்தக் கலையில் தேர்ந்தவனாக இருந்தான். பிற்காலத்தில் அவன் ஏழையாகிவிட்டான். வசந்தசேனை அவனுடைய கலைத் திறத்தைப் புகழ்ந்தபோது, "கலையாகத்தான் இதைக் கற்றேன்; ஆனால் இப்பொழுது இது வயிற்றுப் பிழைப்பாகி விட்டது!" என்று அவன் சொல்லுகிறான்.

உண்டு இளைப்பாறியதும், பகல் தூக்கத்துக்கு முன்பு குலமகன் வேடிக்கையாய்ப் பொழுது போக்குவான். கிளிக்குப் படிப்பிப்பது, புறாக்களையும் ஆடுகளையும் சண்டைக்கு விடுவது, வீட்டிலே அன்னம் குயில் மயில் முதலிய பறவைகளையும், மான் குரங்கு புலி சிங்கம் முதலிய மிருகங்களையும் வளர்ப்பது - இப்படி எத்தனையோ பொழுது போக்குகள். இந்தச் சமயத்திலே விதூஷகன் வந்து ஹாஸ்யமாகப் பேசுவான்.

பகல் தூக்கத்திலிருந்து எழுந்ததும் குலமகன் தன்னை அலங்கரித்துக்கொண்டு பொதுக்கூட்டங்களுக்குப் போவான். சாயந்தரம் திரும்பப் பூஜை முதலியவை முடிந்ததும் சங்கீதக் கச்சேரிகளுக்கு ஏற்பாடு செய்வான். கூத்து, பாட்டு, அபிநயம் முதலியவற்றை எல்லாருமே ரசிப்பார்கள். பொது ஜனங்களும் இந்தக் கச்சேரிகளுக்கு வருவார்கள்.

பாட்டுக் கச்சேரியிலிருந்து திரும்பியதும், குலமகனுடைய அக வாழ்க்கை ஆரம்பமாகும். இப்படிக் காலையிலிருந்து இரவு வரையிலும் கலைமயமான உல்லாச வாழ்வில் அவனுடைய பொழுது கழியும். ஒவ்வொரு நிமிஷமும் ஏதாவது ஒரு கலைக்கு வளர்ச்சி இருக்கும்; ஒவ்வொரு கணமும் உழைப்புக்கு வேலை இருக்கும். அவனுடைய செல்வத்தால் ஏராளமான மக்கள் பிழைத்து வந்தார்கள். காவியம், நாடகம், கதை முதலிய இலக்கிய நூல்களைப் பிரபுவே ரசித்துப் பாராட்டுவான்.



கிளி, மான், சிங்கம் முதலியவற்றை வளர்ப்பது..

நாட்டியம், கீதம், ஓவியம் முதலிய கலைகளுக்கோ அவன் புகலாகவே விளங்குவான். வீடு கட்டும் கலை, ரத்தினப் பரீட்சை, உலோகக் கலை, மரம் செடி கொடிகளைப் பற்றிய சாஸ்திரம், ஆயுத வித்தை, யானை குதிரைகளின் லட்சணங்கள் முதலிய பல கலைகளில் அவன் தேர்ச்சி பெற்றிருப்பான். உல்லா சத்திலே ஆழ்ந்துபோய் அவன் ஆத்யாத்மிக வளர்ச்சியிலோ தார்மிக முன்னேற்றத்திலோ பின்தங்கிவிட மாட்டான்.

பெரும்பாலும் நீர்நிலைகளுக்குப் பக்கத்திலேதான் பெரிய மனிதர்கள் மாளிகை கட்டிக்கொள்வது வழக்கம். மாளிகையின் முன்புறத்திலே ஆண்களும், பின்கட்டிலே பெண்களும் வளையவருவார்கள். அந்தப்புர மங்கையர் மேல்மாடிகளிலே இருப்பார்கள். விழாக் காலங்களில் மேல்மாடியிலுள்ள ஜன்னல்களிலிருந்து அவர்கள் வேடிக்கை பார்ப்பார்கள். மாளிகையின் வாசல் அழகாகவும் விசாலமாகவும் இருக்கும். வாசலில் தண்ணீர் தெளித்துச் சாணத்தால் மெழுகிக் கோலமிட்டிருப்பார்கள்; மலர்களால் அலங்காரம் செய்திருப்பார்கள். வாசற் கம்பங்களிலுள்ள யானைத் தந்தங்களிலே மலர்மாலைகளை அழகாகத் தொங்கவிட்டிருப்பார்கள்.

அந்தப்புரத்தைச் சேர்ந்தாற்போல ஓர் உபவனம் உண்டு. இதன் நடுவே ஒரு பொய்கை இருக்கும். இந்தப் பொய்கையைச் சுற்றிக் கனி குலுங்கும் மரங்களும், கொடிவீடுகளும், பூஞ்சோலைகளும் வரிசையாக இருக்கும். இந்த உபவனத்திலே அடர்ந்த நிழலில் ஊஞ்சல்களும், உட்காருவதற்கு மேடைகளும் இருக்கும். இந்த மேடைகளிலே மென்மையான மலர்களைத் தூவிவைப்பார்கள்.

பொய்கைக்குச் சற்றுத் தொலைவிலே விளையாட்டு மலை உண்டு. மயில்கள் இதைச் சுற்றி நடமாடும். அந்தப்புரத்துப் பெண்கள் இங்கே வந்து விளையாடுவார்கள்.

மாளிகையின் வெளிப்புறம் பார்ப்பதற்கு வெகு அழகாக இருக்கும். முன்பக்கத்து அறையிலே மெத்தையும் துப்பட்டியும் விரித்து இருபுறமும் திண்டுகள் வைத்த கட்டில் இருக்கும். சந்தனமரக் கட்டில் மிகவும் உயர்ந்தது. கட்டிலின் பல பகுதிகளிலே யானைத்தந்தத்தை இழைத்திருப்பார்கள்.

அந்தப்புர மங்கையருக்குப் பல விதமான கலைகள் தெரியும். அவர்கள் யானைத்தந்தத்தினால் செய்த பலகையிலோ, மழமழப்பான பட்டைக்கல்லிலோ, கிழியிலோ, சுவரிலோ சித்திரம் எழுதுவார்கள். சுவரில் எழுதும் சித்திரத்துக்கு, பித்திசித்திரம் என்று பெயர். சித்திரங்களில் நான்கு வகை உண்டு. கண்ணாடியில் பிரதிபிம்பம் தெரிவதுபோல ஒரு காட்சியை உள்ளது உள்ளபடியே சித்திரிப்பது வித்த சித்திரம் எனப்படும். சித்திரகாரன் உணர்ச்சிவசமாகித் தன் கற்பனையில் வரைவது அவித்த சித்திரம் அல்லது கற்பனைச் சித்திரம் எனப்படும். மற்றவை ரஸ சித்திரமும் தூலி சித்திரமும் ஆகும். "தூங்குகிறவனிடம் உள்ள உணர்வையும், பிணத்தின் அசைவின்மையையும், மேடுபள்ளங்களின் இயல்பையும், அலைகளின் நெளிவையும், தீக் கொழுந்தின் எழுச்சியையும், புகையின் மிதப்பையும், காற்றிலே பறக்கும் கொடியின் வீச்சையும் எவன் சித்திரத்திலே வகையாகக் காண்பிக்கிறானோ அவன்தான் ஓவியன்"

என்று விஷ்ணுதர்மோத்தரம் கூறுகிறது.

வீணை வாசிப்பதிலும், குழல் ஊதுவதிலும், சொக்கட்டான் ஆடுவதிலும், காவியங்களைச் சுவையோடு ரசிப்பதிலும் கலாவதிகளான இந்தப் பெண்களுக்கு ஈடு இணையே இல்லை. கல்யாணமான யுவதிகளோ உலக விவகாரம் எதிலும் ஆண்களுக்கு நிகராக, சில கலைகளில் அவர்களுக்கும் மேலாக, விளங்கி வாழ்ந்தார்கள்.

## ஆணும் பெண்ணும்

அநாதிகாலத்திலே, பகவான் த்வஷ்டா உலகத்தைப் படைத்தார் என்று சம்ஸ்க்ருதக் கதை ஒன்று சொல்லுகிறது. கடினமான பொருள்களைக் கொண்டு சூரியனையும், சந்திரனையும், வானத்து நட்சத்திரங்களையும், குன்றுகளையும், வனங்களையும், கடைசியிலே மனிதனையும் த்வஷ்டா படைத்தார்.

மனிதனைப் படைப்பதிலே கடினமான பொருள்களெல்லாம் செலவாகிவிட்டன. பின்பு, சந்திரனின் வட்டத்தையும், கொடிகளின் வளைவுகளையும், புல்லின் அசைவையும், நாணலின் மெலிவையும், மலரின் மென்மையையும், இலைகளின் லேசையும், மான் விழிக் குறுகுறுப்பையும், சூரிய ஒளியையும், பனிநீர்த் துளிகளையும், காற்றின் சஞ்சலத்தையும், முயலின் பீதியையும், மயிலின் பகட்டையும், வைரத்தின் உறுதியையும், புலியின் மூர்க்கத்தையும், தீயின் வெம்மையையும், மழையின் குளுமையையும், கிளியின் மழலையையும், புறாவின் முனகலையும்! கொண்டு பெண்ணைப் படைத்தார் த்வஷ்டா.

அவளை அவர் மனிதனுக்கு அளித்தார். அவளுடன் வாழ்வின்பங்களைப் பகிர்ந்துகொண்டு, மனிதன் பல நாள் சுகமாக வாழ்ந்தான்.

பின்பு ஒரு நாள் அவன் த்வஷ்டாவிடம் வந்தான். "பகவானே, நீங்கள் கொடுத்தீர்களே, அந்தப் பெண் ஓயாமல் தொணதொணக்கிறாள். விடாமல் காலைக் கட்டுகிறாள். எப்போதும் சோம்பி நிற்கிறாள். அவளோடு நான் வாழ முடியாது. அவளைத் திரும்ப வாங்கிக்கொள்ளுங்கள்" என்றான்.

த்வஷ்டா அவளை வாங்கிக் கொண்டார். எட்டு நாள் சென்றது. மனிதன் மறுபடியும் த்வஷ்டாவிடம் வந்தான். "பகவானே, பெண்ணைப் பிரிந்த தனிமையை என்னால் சகிக்க முடியவில்லை. அவள் ஆடிப்பாடி எனக்கு எப்படி இன்பந்தந்தாள்! என்னைக் கட்டியணைத்து எப்படி ஆறுதல் அளித்தாள்!" என்றான்.

த்வஷ்டா மறுபடியும் பெண்ணை மனிதனிடம் அளித்தார்.

ஒரு மாதம் சென்றது. மறுபடியும் மனிதன் வந்துவிட்டான். "பகவானே, முடியாது, முடியாது! அவளை என்னால் சகிக்கவே முடியாது. அவளால் இன்பத்தைவிடத் துன்பந்தான் அதிகமாயிருக்கிறது. அவளை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள்" என்று கூச்சலிட்டான்.

"வேண்டாம். முடிந்தமட்டில் அவளிடம் நல்லதைக் கிரகித்துக்கொள்" என்றார் த்வஷ்டா.

"அவளோடு வாழவே முடியவில்லையே!" என்று ஏங்கினான் மனிதன்.

"அவள் இல்லாமலும் நீ வாழ முடியாது; போ!" என்றார் பகவான்.

—லூயிஸ் கே. ஹில், 'திஸ் வீக் மகஸீன்.'

**ராணுவத்தினர் புதுப் புது ஆயுதங்களைக் கண்டுபிடிக்கிறார்கள்! எப்படி? மிருகம், பட்சி, புழு முதலியவற்றைப் பார்த்துத்தான்.**

# பிராணிகளின் போர் முறைகள்

**கௌசிகன்**

ஜெர்மானியர்கள் சென்ற மகா யுத்தத்தில் வெற்றி யடைவதற்காக எவ்வளவோ பாடு பட்டார்கள். அவர்கள் பல அதிசய ஆயுதங்களைக் கண்டுபிடித்தார்கள். மனித உதவியில்லாமல் பறந்து சென்று குண்டுகளைப் பொழியும் விமானமும் குண்டைவிடச் சக்தி வாய்ந்த யந்திர வெடித் தூணும் அவற்றில் மிக முக்கியமானவை. மிருகம், பட்சி, புழு முதலிய அஃறிணைப் பிராணிகளை ஆராய்ந்தே இத்தகைய அபூர்வக் கருவிகளை அவர்கள் கண்டுபிடித்தார்கள். சில பிராணிகள் வெகு லாகவமாக ஆகாயத்தில் பறப்பதைப் பார்த்தால், நம் சிறந்த ஆகாயவிமானங்கூட அற்பமாகத் தோன்றும். ஆகாய விமானத்தை அழகாய்ப் பறக்கச் செய்வதற்கு, கேவலம் ஓர் ஈ பறப்பதைக் கண்டுதான் ஜெர்மானியர்கள் அறிந்துகொண்டார்கள்.

பாலைவனத்தில் நடந்த யுத்தத்தில் சேனாதிபதி வேவல் வெற்றி யடைந்தது எப்படி? பாலைவனத்துப் பிராணிகளின் சூட்சுமங்களை அறிந்துகொண்டு அவற்றைத் தாமும் கைக்கொண்டே அவர் வெற்றியடைந்தார். அந்தப் பிராணிகளைப் பார்த்தே டாங்கிகளின் ஓட்டத்தை மணல் பிரதேசத்துக்கு ஏற்றதாக அவரால் புதுப்பித்து அமைக்க முடிந்தது.

வௌவால்களை ஆராய்ந்து நிபுணர்கள் அறிந்துகொண்ட விஷயம் இதைவிட வியப்பைத் தரக்கூடியது. "வௌவால்கள் நன்றாகப் பறப்பதைக் கவனித்தே ஆகாய விமானத்தில் சில மாறுதல்களைச் செய்ய முடிந்தது" என்று விமானிகளுக்குப் பாடமான ஒரு பிரசுரம் கூறுகிறது.

ஓர் அறைக்குள் ஏராளமான தோரணங்களைக் கட்டினார்கள். ஒரு வௌவாலின் கண்ணைக் கட்டி அதை அந்த அறைக்குள் பறக்கவிட்டார்கள். எந்தத் தோரணத்திலும் படாமல் அதிவேகமாய்ப் பறந்து விளையாடியது அந்த வௌவால். வௌவாலின் உடம்பில் ரேடியோ நுட்பம் மாதிரி ஒரு சக்தி இருக்கிறது. இந்தச் சக்தியால்தான் அது தன் ஆகாரம் இன்ன திசையில் இருக்கிறதென்று கண்டுபிடித்து வருகிறது. ரேடியோ என்ற பெயரை நாம் கேட்பதற்குக் கோடானுகோடி வருஷங்களுக்கு முன்பே வௌவால் இந்த ரேடியோ சக்தியை உபயோகித்து வந்திருக்கிறது. இதைத் தவிரத் தன் உடம்பைவிட மிகச் சிறிய இடுக்குகளில் கூடப் புகுந்து மறைந்துகொள்வதற்கும் வௌவாலால் முடியும். தங்கள் உடம்பைத் தான் இப்படிச் சிறு பொந்துக்குள் நுழைத்துக்கொள்ள நம் விஞ்ஞானிகளால் முடியவில்லை. ஆனால் சிறிய

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 23-5-'48), கள்ளிக்கோட்டை.

இடத்தில் அதிகச் சாமானை வைப்ப தற்கு மாத்திரம் அவர்கள் இதி லிருந்து அறிந்துகொண் டிருக் கிறார்கள்.

ஆயுதமில்லாமல் தம் சொந்தக் கை கால்களை மட்டும் உப யோகித்துப் பகைவரை வெல்வதை யும் விலங்குகளிடமிருந்து மனிதர் அறிந்துகொள்ளலாம். மாம்சம் தின்னும் ஒரு மிருகத்தினால், தாவரம் தின்னும் ஒரு மிருகத்தை ஒரே கொடியில் கொல்ல முடியும். விலங்கு வேட்டையில் தேர்ச்சி பெற்ற மார்க்கஸ் டாவி என்பவர், "சிங்கம் ஒரு மிருகத்தைக் கொல்ல அரைக்கணம் போதும்" என்று கூறியிருக்கிறார்.

மல்யுத்தத்தில் சிங்கம் போன்ற மிருகங்களுக்கு மட்டுந்தான் திறமை உண்டு என்று, கூறுவதற்கில்லை. முதலை ஏதாவது ஒரு மிருகத்தைப் பிடித்துவிட்டால், முதலில் அந்தப் பிடியை நன்றாக இறுக்கிக் கொள்ளும். பிறகு அந்த மிருகம் கீழே விழும்படி தன் உடலை ஒரு புறமாய்த் திருப்பிக்கொள்ளும். கீழே விழுந்த அந்த மிருகத்தின் பலம் அப்போதே குன்றிவிடும். இந்த ரகஸ்யத்தைக் குஸ்திச் சண்டை இடுபவர் அறிந்துகொள் வது நலம்.

தாங்கள் இருக்கும் இடத்துக்கு ஏற்றபடி வேஷம் பூண்டு எதிரியின் கண்ணுக்குத் தென்படாமல் தப்பித் துக்கொள்ளும் 'கேமபிளாஜ்' என்ற தந்திரத்தைச் சென்ற மகாயுத்தத் தில் பல போர்வீரர்கள் கற்றிருந் தார்கள். அதில் ஒரு முறை இது: பல சுள்ளிகளையும் இலை களையும் அள்ளித் தலையில் போட் டுக்கொண்டு அசையாமல் நிற்கும் வீரரை எதிரிகள் கண்டுகொள்ள முடியாது. 'மே - ப்ளை' என்ற ஈசலின் முட்டையில் உண்டாகும் சில புழுக்களிடமிருந்தே ராணுவத் தினர் இதைக் கற்றுக்கொண்டார் கள்.

அமெரிக்காவில் வாழும் ஒரு வகை நில அணிலைப் பார்த்தே மாஷினோ அரணைப் பிரெஞ்சுக் காரர்கள் கட்டினார்கள். அந்தச் சிறிய பிராணி ஒரு நாய்க்குட்டி அளவிருக்கும். அதன் பொந்து ஒரு பெரிய மயில்ராவணன் கோட்டை மாதிரி இருக்கும். அந்த அணில் முதலில் தரைமட் டத்திலிருந்து பத்து அல்லது பதி னைந்தடி ஆழத்தில் ஒரு வளை தோண்டும். பூமிக்குள்ளே ஓடும் நீர்க் குழாய்களைப்போல் நீளமாகப் பல மாடங்களை அந்த வளைக்குள் குடையும். அடுத்தடுத்துக் குகைக ளைப் போன்ற பல அறைகளையும் அதில் அமைக்கும். அந்த அறை களில் அணில் தனது உணவைச் சேகரித்து வைத்துக்கொள்ளும். பொந்து தோண்டும்போது எடுத்த மண்ணைப் பொந்தின் வாய் அருகில் குவித்துத் தன் தலையால் அமுக்கி ஒரு சிறிய கூட்டைப்போல் ஆக்கி விடும். இதைக் கண்டுதான் மாஷி னோ அரணில் 'பில் - பாக்ஸ்' என்ற சிறு சிறு பீரங்கிக் கோட்டைகளைக் கட்டினார்கள்.

இந்த அணில் அடுத்தடுத்துப் பொந்துகள் செய்துகொண்டு பெரும் கூட்டமாகவே வாழ்கின்றன. இவை முறைவைத்துக்கொண்டு ஒவ்வொன் றாகப் பாராக் கொடுக்கும். சத்து ருக்கள் வருவதைக் கண்டால் பாராக்கார அணில் அழுகை போன்ற ஒருவிதமான சத்தம் செய் யும். உடனே மற்ற அணில்களெல் லாம் ஓடிப்போய்ப் பொந்துகளில் பதுங்கிக்கொள்ளும். அபாயம் நீங் கியதென்றால், வேறு விதமான மற்

ளூர் அழுகைக் குரலால் பாராக் கார அணில் மற்ற அணில்களுக்கு அறிவிக்கும். இது அபாயச் சங்கு மாதிரி இல்லையா?

டாங்கியைப் போல் உடம்பில் முள் நிறைந்த ஒருவகைப் பிராணி அமெரிக்காவில் இருக்கிறது. ஒடு வேய்ந்ததுபோல், அதன் தேகம் முழுவதும் ரூபாய் அளவு பல தகடு கள் மூடிக்கொண் டிருக்கின்றன. அந்தத் தகடுகளின் மேல்பாகம் முள்ளைப்போல் கூராக இருக்கும். ஆபத்து நெருங்கும்போது, கால் பந்துபோல் இந்தப் பிராணி உருண் டையாகி, அசைவற்றுக் கிடக்கும். இந்தச் சமயத்தில் மற்றப் பிராணி கள் இதன் அருகில் வரப் பயப் படும். இப்படிப் பந்துபோல் முடங்கியபடியே இது உருண்டு கொண்டு போவதும் உண்டு. இதற்கு வாலில் உருண்டையான ஒரு கொடுக்கு இருக்கிறது. தன் அரு கில் வரும் மற்றப் பிராணிகளை இது இந்தக் கொடுக்கினால் அடிக்கும். அந்த அடிபட்டுப் பல பிராணிகள் இறந்துவிடுவதும் உண்டு.

விஷவாயுப் பிரயோகத்தையும் மிருகங்களிடமிருந்தே ராணுவத் தினர் கற்றிருக்கிறார்கள். இந்த விஷவாயுப் பிரயோகத்தைப் பல பிராணிகள் கையாளுகின்றன. எல்லாவற்றிலும் அதிகத் திறமை கொண்டது ஸ்கங்க் என்ற பிராணி தான். அதன் வயிற்றில் இருக்கும் ஒரு சிறிய துவாரத்திலிருந்து ஒரு வகைத் திராவகம் வெளியாகும். இந் தத் திராவகத்தின் துர்க்கந்தத் துக்கு முன்னே வேறு எந்தத் துர்க் கந்தமும் நில்லாது. மனிதர்கள் வாழும் வீடுகளுக்கு அருகில் ஒரு துளி எங்கேயாவது இது விழுந்து விட்டால் பிறகு அந்த வீட்டில் ஒரு மாதகாலம் எவரும் வசிக்க முடி யாது. இதை விஷவாயுவுடன் ஒப் பிடுவதைவிடக் கண்ணீர்ப் புகை யுடன் ஒப்பிடுவதுதான் பொருத்தம். ஏனென்றால் இந்தத் திராவகத்தின் நாற்றம் மனிதரைக் கஷ்டப்படுத் துமேயொழியக் கொன்றுவிடாது.

'பொம்பார்டியர் பீட்டில்' என்ற ஒரு பீரங்கி வண்டு இருக்கிறது. அந்தச் சிறு பிராணிதான் உண்மை யான விஷவாயுவைப் பிரயோகிக் கிறது. அந்த வண்டுகள் கூட்டம் கூட்டமாகப் போருக்குக் கிளம்பும். குண்டு வெடிப்பதுபோல் அவற்றின் வால்புறத்திலிருந்து ஒரு சத்தம் கிளம்பும். அதிலிருந்து ஒரு சிவந்த திராவகம் தெறிக்கும். அது காற்றிலே கலக்கும்போது ஒருவித நீலப் புகையாக மாறிவிடும். அந்தப் புகைப்படலத்தைத் திரை யாக உபயோகித்துக் கொண்டு இந்த வண்டுகள் தங்கள் பகை வரிடமிருந்து தப்பித்துக் கொள்ளும். அந்தப் புகை இவற்றை மறைக்கும் திரையாக உப யோகமாவது மட்டும் அல்ல; துரத்தி வரும் சத்துருக்களையும் மூர்ச்சித்து விழச் செய்துவிடுகிறது.

## பெண்ணுக்கு ஏன் நகைச்சுவை இல்லை?

பெண்ணைக் கடவுள் நகைச்சுவை யில்லாமல் படைத்திருக் கிறார். ஏனென்றால், அவள் ஆணைப் பார்த்து நகைப்பதை விட்டுக் காதல் செய்வதற்காகவே.

—(மிஸ்) எச். எம். ஔத்வெயிட்

*'ஹிட்லரைக் கண்டேன்' என்ற தலைப்பிலே எழுதுகிறார் கட்டுரையாளர். ஆனால், அவர் குறிப்பிடுவது ஜெர்மன் ஹிட்லரை அல்ல; ரஜ்வியைத்தான்.*

# ஹைதராபாத் ஹிட்லர்

**எச். ஜே. எச். தலையார்க்கான்**



ஹைதராபாதுக்கு நான் 1943-இல் போயிருந்தேன்; மறுபடியும் இரண்டுவாரத்துக்கு முன் அங்கே போயிருந்தேன். ஒரு வித்தியாசத்தைக் கண்டேன். 1943-இல் அடிமைத்தனத்திலே உழன்று வாய் பேசாமல் துன்பப்பட்டுக்கொண்டிருந்த மக்கள், இன்று தங்கள் துன்பத்தை உணரத் தொடங்கிவிட்டார்கள். அவர்களுக்கு இந்த உணர்ச்சியை உண்டாக்கிவிட்டவர் காஸிம் ரஜ்வி. அவருடைய பிரசங்கங்கள் அட்டகாசமாயிருக்கும்; முஸ்லிம்களுக்குச் சம்பந்தமில்லாத எந்த விஷயத்திலும் அவருக்கு வெறுப்பு; ஹிந்துக்கள் என்றாலே அவருக்குக் கடுகடுப்பு. இவற்றைக் கண்டுதான் மக்கள் உணர்ச்சி பெற்றுவிட்டார்கள்.

அவரை நான் சந்தித்த முதல் எடுப்பிலேயே நேருக்கு நேரே தாக்கினேன். "உங்களுக்கும் ஹிட்லருக்கும் ஒரே ஒரு வித்தியாசம்: ஹிட்லர் பேசும்போது, தமக்கு முன்னே குண்டு பாய முடியாத ஒரு திரையைப் போட்டுக்கொள்வார்; நீங்கள் பேசும்போதோ அப்படிப் போட்டுக்கொள்வதில்லை" என்றேன்.

எதிரி அஜாக்கிரதையாகத் துளி இடங் கொடுத்தால் போதும், அதைப் பிடித்துக்கொண்டுவிடுகிறார் காஸிம் ரஜ்வி. அவர்தாம் மஜ்லிஸ் இத்திஹாத்-ஈ-முஸல்மீன் தலைவர்; ரஜாக்கர் படையின் சிருஷ்டிகர்த்தா. அவருக்கு வயது 48. அவர் தாடிக்காரர்; குள்ளர்; மாஜி வக்கீல். என் கேள்வியைக் கேட்டதும், அவர் துள்ளியெழுந்து, "இது எதைக் காட்டுகிறது, தலையார்க்கான்? மக்கள் என்னிடம் அன்பு காட்டுகிறார்கள்; என்னைக் கண்டு வெறுக்கவில்லை, அஞ்சவில்லை. இதைத்தானே காட்டுகிறது?" என்றார்.

இந்த அன்பை எனக்கு அவர் நேருக்கு நேராக மெய்ப்பிக்கவும் மெய்ப்பித்தார். ஹைதராபாது சுதந்தர தினக் கொண்டாட்டத்துக்காக அணிவகுத்த ரஜாக்கர்கள் அணி அணியாகத் திரும்பிக்கொண்டிருந்தார்கள். ஒரு

மூலம்: ப்ளிட்ஸ் (ஆங்கிலம்: 26-6-'48), பம்பாய்.

'ஜீப்' காரில் என்னையும் ஏற்றிக் கொண்டு, அந்த அணிகளுக்குள்ளே புகுந்தார் ரஜ்வி. பல ரஜாக்கர்களை முதுகிலே தடவிக் கொடுத்துக் கொஞ்சினார். மற்றும் பலருடன் தகப்பனைப் போல் அன்புடன் சம்பாஷித்தார். ஒரு ரஜாக்கச் சிறுமியைத் தம் கையால் தூக்கி முத்தமும் கொடுத்தார். ரஜாக்கர்கள் தேகாப்பியாசமும் அணிவகுப்பும் ஆயுதப் பிரயோகமும் கற்றிருக்கிறார்கள்; அதோடு காஸிம் ரஜ்வியைத் தொழுது கொண்டாடவும் பயின்றிருக்கிறார்கள்.

ரஜ்வியோ காந்திஜியைப் போற்றித் தொழுகிறார்; ராஜாஜியிடம் மகத்தான நம்பிக்கை வைத்திருக்கிறார். ஆனால், அந்த இருவரில் எவருடைய வழியிலும் அவருக்கு நம்பிக்கை இல்லை. தம்மை ஒருவர் ஒரு கன்னத்தில் அறைந்தால், தாம் அவருக்கு மறு கன்னத்தைத் திருப்பிக் காட்ட வேண்டும் என்பது அவருக்குப் பிடிக்காது; தம்மை ஒருவர் கன்னத்தில் அறைந்துவிடப் போகிறார் என்று தாமாகவே எண்ணிக் கொண்டு, தாம் அவருக்கு 'அட்வான்ஸ்' அறை கொடுத்து விட வேண்டும் என்பதே அவருடைய கொள்கை.

பிரசாரத்தில் ரஜ்வியிடம் கெப்பல்ஸ் பிச்சை வாங்க வேண்டும். பிரசங்க வெறியில் அவரிடம் ஹிட்லர் தோற்றுப் போவார். விஷயங்களை யெல்லாம் திரித்துச் சொல்வதில், முகம்மதலி ஜின்னாவும் அவரை மிஞ்ச முடியாது.

இந்திய யூனியனில் ஹைதராபாது சேர்ந்துவிடவேண்டும் என்பதில் அவருக்கு மகா வெறுப்பு. அதைப்பற்றி அவர் என்னிடம் சொன்னது இது: "இந்திய யூனியனில் சேர்ந்தால், நாங்கள் அடியோடு அழிந்துபோவோம். அதைத்தான் நேரு விரும்புகிறார். இந்தியாவின் ஒரு மூலையிலே, என்னவோ கொஞ்சம் முஸ்லிம்கள் மிஞ்சியிருக்கிறார்கள். 700- வருஷமாக அவர்கள் ஆண்ட இடம் அது. அவர்களும் ஒழிந்து போக வேண்டும் என்பதே நேருவின் விருப்பம்...... இந்திய யூனியனில் சேர்ந்த சம்ஸ்தானங்களெல்லாம் இதற்குள்ளேயே அடியோடு அழிந்துவிட்டன; உருத் தெரியாமல் அழிந்துவிட்டன. யூனியனின் கொடிய சூழ்ச்சிகளை எதிர்க்க அவற்றுக்கு வலிமையில்லை. அவையெல்லாம் கோழைகள்."

குறிப்பிட்ட ஒரு பிரசங்கத்தை அவர் புரிந்தாரா, இல்லையா என்பதுபற்றிச் சமீபத்தில் ஒரு பெரிய வாதப் பிரதிவாதம் நடந்தது நண்பர்களுக்கு ஞாபகம் இருக்கும். கடைசியிலே, அது அவர் புரிந்தது தான் என்று ருசுவாகிவிட்டது.

அந்தப் பிரசங்கத்தைத் தாம் புரியவில்லை என்றே ரஜ்வி என்னிடம் மகா உக்கிரமாய் மறுத்தார். தம் கௌரவத்துக்கே ஹானி வந்துவிட்டாற்போல அபிநயித்துக் கொண்டு, ரஜ்வி இவ்வாறு கூறினார்: "முதலில் அவர்கள் அந்தப் பிரசங்கத்தை நான் பகிரங்கக் கூட்டத்தில் புரிந்ததாகச் சொன்னார்கள். இதை அவர்களால் நிரூபிக்க முடியாமல் போகவே, ரஜாக்கர் கவுன்ஸில் கூட்டத்தில் அதை நான் புரிந்ததாகச் சொன்னார்கள். இதையும் நிரூபிக்க முடியாமல் போகவே, சில உத்தியோகஸ்தர்களுக்கு முன் நான் அதைப் புரிந்ததாகச் சொன்னார்கள். இனிமேல் அவர்கள் அதை நான் என் கனவிலே புரிந்ததாகக்கூடச் சொல்லுவார்கள்."

ஆனால் ஒன்று: பொய்களைக் கொண்டே ரஜ்வி தமது செல்வாக்கைச் சம்பாதித்துக்கொள்ளவில்லை. அசுர முயற்சி செய்து, இத்திஹாத் - ஈ - முஸல்மீன் என்ற மதஸ்தாபனத்தைப் பிரம்மாண்டமான ஓர் அரசியல் ஸ்தாபனமாக அவர் மாற்றிவிட்டார். அந்த ஸ்தாபனமே இன்று நிஜாம் சர்க்காரின் மூளையாக விளங்குகிறது.

மந்திரிகளில் ஐந்தாறு பேர் இத்திஹாத் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களை நியமித்தவர் ரஜ்வியே. இவர் சொன்னபடி அவர்கள் நடக்கிறார்கள். எழுதப் படிக்கத் தெரியாத கனம் கல்வி மந்திரி வேங்கடராவ் ஹரிஜன வகுப்பினர். ரஜ்வியின் சுயேச்சைக் கோரிக்கையை 90 - லட்சம் ஹரிஜனங்கள் ஆதரிப்பதாக அந்த ஹரிஜன மந்திரி உரிமை கொண்டாடுகிறார். இந்த '90 - லட்சம்' என்பது வேங்கடராவின் கணக்கு. உண்மையான ஜனகணிதப்படி, 30 - லட்சம் ஹரிஜனங்கள் தாம் உண்டு.

சமீபத்தில் டில்லியில் நடந்த பேச்சு வார்த்தைகளில், முதல் மந்திரி மீர் லாயிக் அலியை அவருடைய இஷ்டப்படி நடக்க விட்டிருந்தால், இந்திய யூனியனோடு அவர் ஒரு சமரசத்துக்கு வந்திருப்பார். ஆனால் அவருக்குக் காவலாக இத்திஹாத் மந்திரி ரவூப் என்பவரை அவரோடு கூடவே ரஜ்வி அனுப்பிவைத்தார். ரவூப் நல்ல முரடர். லாயிக் அலி துளிப் பிசகினாலும் அவர்மீது பாய ரவூப் தயாராயிருந்தார்.

இவ்விதம் தமது அரசியல் அதிகாரத்தை ஏற்படுத்திக் கொண்ட ரஜ்வி, ராணுவ ரீதியில் அதை நிலைநாட்டிக்கொள்ளத் தொடங்கினார். ரஜாக்கர் இயக்கத்தை அவர் ஆரம்பித்தார். ரஜாக்கர் என்றால் 'ஆண்டவன் சித்தம்' என்று பொருள். ரஜாக்கர் என்ற தேவதையின் சக்கரம் ஆறே மாத காலத்தில் ஹைதராபாது சம்ஸ்தானம் எங்கும் சுழல ஆரம்பித்துவிட்டது. தலைநகரத்திலே ரஜாக்கரின் ஆயுதங்கள் சலசலத்தன; மூலைமுடுக்கில் உள்ள கிராமத்திலெல்லாம் அவர்களுடைய வால்கள் நீண்டன.

ரஜ்வியின் பிதுரார்ஜித வீடு மால்க்பேட் மைதானத்துக்கு அருகிலே இருக்கிறது. சுதந்தர தின அணிவகுப்புக்குப் பின் அந்த வீட்டிலே ரஜ்வியுடன் நான் சம்பாஷித்தேன். அவர் என்னை இவ்வாறு கேட்டார்: "நீங்களே சொல்லுங்கள், என் ரஜாக்கர்கள் வெறி பிடித்த கொலைகாரர்கள் மாதிரியா தோன்றுகிறார்கள்? அவர்கள் உம்மைப் போலவே (தம்மைப் போலவே என்று ரஜ்வி சொல்லவில்லை; தாம் அசாதாரண புருஷர் என்று அவருக்குத் தெரியாதா!) சாதாரண மனிதர்கள்தாம். இந்த ராணுவ உடையையும் துப்பாக்கியையும் எறிந்துவிட்டு, ஆடிப்பாடி வாழ்க்கை இன்பத்தை அநுபவிக்கத்தான் அவர்களுக்கு விருப்பம். அப்படியிருந்தும், பிரதிப்பிரயோசனமில்லாத ரஜாக்கர் இயக்கத்தில் தங்கள் நேரம் முழுவதையும் அவர்கள் ஈடுபடுத்துகிறார்களே, அது ஏன்? ஏன்? தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளத்தான். அவர்கள் ஒரு கொசுவைக்கூடத் துன்புறுத்த மாட்டார்கள். ஆனால், அது தங்களைக் கடிக்க வந்தால் அவர்கள் சும்மா விடுவார்களா?"

மேலும் அவர், "இன்று ஹைதராபாதில் நீங்கள் காணும் காட்சிகளை உள்ளது உள்ளபடி உங்கள் மக்களுக்கு எழுதுங்கள். ஹைதராபாதை ஏதோ ஒரு நரகம்

போல் வேண்டுமென்றே பொய்யாக அவர்களுக்கு உங்கள் தலைவர்கள் சித்திரித்துக்கொண்டிருக்கிறார்கள். அது அப்படி நரகமாக இல்லை என்று நீங்கள் தெரிவியுங்கள்" என்றார்.

பிறகு சற்று நின்று என்னவோ யோசித்துவிட்டு, "ஆனால், இந்த நல்ல அம்சங்களை - ஹைதராபாதில் நல்ல அம்சங்களைத் தவிர வேறே என்ன இருக்கிறது? - இவற்றை நீங்கள் எங்கே எழுதப்போகிறீர்கள்? உங்களால் எழுத முடியும் என்று நான் நினைக்கவில்லை. ஹைதராபாதைப்பற்றிய நல்ல சித்திரத்தை வரைய எந்தப் பத்திரிகை நிருபனாவது முயன்றால், அவனை உங்கள் சர்க்கார்தான் பலமாக எச்சரித்து, அவனுக்குக் கடுமையான அபராதமும் விதிக்கிறதே! இது எனக்கு நன்றாய்த் தெரியும்" என்றார்.

நான் கேலியாக, "உங்கள் ஹைதராபாதிலே பேச்சுச் சுதந்தரமும் பத்திரிகைச் சுதந்தரமும் பரிபூர்ணம்போலிருக்கிறது!" என்றேன்.

அவர் சிறிதும் வாய் கூசாமல், "ஆட்சேபமில்லாமல், பரிபூர்ணந்தான். ஆனால், பலாத்காரத்தையோ கலகத்தையோ கிளப்பிவிடாத வரையில்தான் யாருக்கும் அந்தச் சுதந்தரம் உண்டு. சமஸ்தானக் காங்கிரஸின் அமைதியான சேவையும் பத்திரிகைகளும் நசுக்கப்பட்டன என்பது பழங்கதை, பொய்" என்றார்.

ரஜ்வி மகா கெட்டிக்காரர். கேட்ட கேள்விக்குத் தயங்காமல் தப்போ சரியோ சட்டென்று பதில் சொல்லிவிடுகிறார். "ஹைதராபாதைப் பக்கத்திலே இந்தியா சூழ்ந்திருக்கிறது. ஆகையால், அது இந்திய யூனியனில் சேர்ந்துதான் தீரவேண்டும்" என்றால், "இந்தியாவைப் பாகிஸ்தான் சூழ்ந்திருக்கிறது. ஆகையால், இந்தியா பாகிஸ்தானில் சேர்ந்துவிடட்டுமே" என்பார் ரஜ்வி.

"ஹைதராபாது ஹிந்துக்களிடமிருந்து மட்டும் ஆயுதங்களை ஏன் பறித்துவிட்டீர்கள்?" என்றால், "இல்லவே யில்லை. அது சுத்தப் பொய். காலிகளிடமிருந்து மட்டுமே ஆயுதங்களைப் பறித்துவிட்டோம்" என்பார் அவர். "ஹிந்து, முஸ்லிம் இரண்டு வகுப்புக் காலிகளிடமிருந்தும் ஆயுதங்களைப் பிடுங்கிவிடுகிறீர்களா?" என்று கேட்டால், "முஸ்லிம்களில் காலிகளே கிடையாது" என்கிறார் ரஜ்வி.

"இந்தியாவுக்குள்ளே ஒரு சோட்டா பாகிஸ்தானைச் சிருஷ்டிக்க உங்கள் விருப்பமோ?" என்று அவரைக் கேட்டால், அவர் மகா ஆத்திரத்தோடு, "ஆமாம்; ஏன் கூடாது?" என்கிறார். கடைசியாக, "இந்தியர் ராணுவ நடவடிக்கை எடுத்தால், நீங்கள் ஜயிக்கலாம் என்று துளியாவது உங்களுக்கு நம்பிக்கை உண்டா?" என்று கேட்டால், "ஆஹா, உண்டு; மரண ஜயம். அதைவிடக்கீர்த்திகரமானது வேறென்ன இருக்கிறது? பயனற்ற வாழ்வைவிட மரணமே மேல்..." என்று அவர் உரத்த குரலில் கூவுகிறார்.

இந்தச் சமயத்தில் அவருக்குப் பக்கத்திலே அவருடைய சின்னஞ் சிறு மகனோ, இத்திஹாத் அங்கத்தினர் அல்லது மந்திரிகளுடைய புதல்வர்களோ நின்றுகொண்டிருந்தால், அந்தச் சிறுவர்கள் சின்னஞ் சிறு பிஸ்டல் அல்லது துப்பாக்கிகளைக் கம்பீரமாய் ஆட்டிக்கொண்டு, "ஜிந்தாபாத்!" என்று கத்துகிறார்கள். பூர்ணப் பயிற்சியடைந்த

சோல்ஜர்களைப் போலவே இந்தச் சிறுவர்கள் அந்தத் துப்பாக்கிகளைப் புழங்குகிறார்கள்.

இத்தகைய கடும் வெறியை ஹைதராபாத் முஸ்லிம்களின் மனத்தில் காஸிம் ரஜ்வி கிளப்பிவிட்டிருக்கிறார். இவருக்குப் பின்பலமாகச் 'சர்வ வல்லமையுள்ள' நிஜாம் இருக்கிறார்; தந்திரக்காரரான அயல் நாட்டு மந்திரி நவாப் மொயின் நவாஸ் ஜங் இருக்கிறார்; தற்போதைய ஒப்பந்தப்படி ஹைதராபாதுக்கு 13,000 வீரர்களே இருக்கலாம் என்றாலும் அதை மீறி 25,000 வீரர்களைப் படையில் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கும் சேனாதிபதி ஸையத் எலிட்ரூஸ் இருக்கிறார்; போலீஸ் டைரெக்டர் ஜெனரல் தீன் யார் ஜங் இருக்கிறார்.

என்றாலும், ஹைதராபாதின் இந்த 'முடிசூடா மன்னன்' ரான ரஜ்வியை அவருடைய வீட்டிலே நீங்கள் சந்தித்தால், அவர் எளிய உடை உடுத்து, மகா சாந்தமான கனவானாக நடந்துகொள்கிறார். ஒன்பது ரஜாக்க வாலிபர்கள் அவருடைய குடும்பப் புகழைப் பேசிக்கொண்டு, வரும் விருந்தாளிகளை அன்போடு உபசரிக்கிறார்கள்.

இதையெல்லாம் பார்க்கும்போது உங்கள் மனத்தில் ஓர் அபிப்பிராயந் தான் விழுகிறது: காஸிம் ரஜ்வி என்பவர் ஒரு பெரிய வெடிகுண்டு; ஆனால், மோட்டா வெடிகுண்டு அல்ல.

## அரசரின் அழைப்பை மறுத்த ஆசிரியர்

1924-இல், பிரேம்சந்த் லக்னௌவில் இருந்த சமயம்; அவருடைய நாவல் 'ரங்கபூமி' அச்சாகிக்கொண்டிருந்தது. ஆள்வார் ஸம்ஸ்தானத்திலிருந்து மகாராஜாவின் கடிதத்தோடு ஐந்தாறு பெரிய மனிதர்கள் பிரேம்சந்தைப் பார்க்க வந்தார்கள். மகாராஜாவுக்கு நாவல்களும் கதைகளும் படிப்பதிலே வெகு ஆசை. மாதம் நானூறு ரூபாய் சம்மானமும் காரும் பங்களாவும் தருவதாகவும், குடும்பத்தோடு ஸம்ஸ்தானத்துக்கு வரவேண்டும் என்றும் அவர் எழுதியிருந்தார். "நான் பெரிய புரட்சிக்காரன், அதனால்தான் சர்க்கார் வேலையை விட்டு வந்தேன்" என்று பிரேம்சந்த் அந்தப் பெரிய மனிதர்களிடம் சொல்லிவிட்டு, மகாராஜாவுக்குப் பதில்கடிதம் எழுதிக் கொடுத்தார்: "தங்கள் அழைப்புக்கு நன்றி. நான் என் வாழ்க்கையை இலக்கியத் தொண்டிலே ஈடுபடுத்திவிட்டேன். நான் எழுதும் நூல்கள் அத்தனையையும் தாங்கள் படிக்கிறீர்களே, அதற்காகத் தங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். தாங்கள் எனக்கு அளிக்கும் பதவிக்கு நான் ஏற்றவனல்ல. என் கதைகட்டுரைகளைத் தாங்கள் உன்னிப்பாகப் படிப்பதையே என் பாக்கியமாகக் கருதுகிறேன். முடிந்தால் எப்போதாவது தங்களைத் தரிசிக்க வருவேன். தனபத்ராய் - ஓர் இலக்கியத் தொண்டன்."

—சிவராணிதேவி, 'பிரேம்சந்த் - வீட்டிலே'.

வரன் தேடும் தொல்லையிலிருந்து விடுபடப் பல பேர் என்ன விசித்திரமான முறைகளைக் கையாளுகிறார்கள்!

# மணமகள் தேவை

எஸ். ஏ.

'குதிரையை வாங்கினாலும் பெண்ணை மணந்தாலும், கண்ணை இறுக மூடிக்கொண்டு கடவுளைப் பிரார்த்தி' என்று ஷோன் பாஷையில் ஒரு பழமொழி உண்டு. இந்த அரிய புத்திமதியை இந்தக் காலத்தில் கேட்பவரைக் காணோம்.

உக்ரேன் நாட்டுக் குடியானவர்கள் ஒரு பெண்ணிடம் சென்று, "என்னை மணந்துகொள்வாயா?" என்று கேட்பதில்லை. வாலிபன் தொடர்ந்து நாலு வார காலம் ஒரு பெண்ணின் வீட்டுக்குச் சென்று வட்டமிடுவான். தன் கையால் பின்னிய ஒரு குல்லாயை இவனுக்கு அவள் கொடுக்கவேண்டும். அப்படி அவள் கொடுக்காவிட்டால், தன்னிடம் அவளுக்குச் சிரத்தை இல்லை என்று வாலிபன் தெரிந்து கொண்டு அகன்றுவிடுவான்.

வடக்கு இதாலியில் ஒரு பெண்ணை மணக்க விரும்பும் வாலிபன், ஒரு பூச்சட்டியை அவளுக்கு அனுப்புவான். இவனை மணக்க அவளுக்குச் சம்மதமானால், அந்தப் பூச்சட்டியில் உள்ள செடிக்கு அவள் நாள்தோறும் தண்ணீர் ஊற்றுவாள். வேறு வாலிபனிடம் அவளுக்குக் கண் என்றால், இந்தப் பூஞ்செடி வாடிச் சாகும்படி அவள் விட்டு விடுவாள்.

சமீபத்தில் உள்ள சீனாவைப் பார்ப்போம். அங்கே மஞ்சள் நதியில் ஏராளமான படகுகள் மொய்த்துக்கொண்டிருக்கும். அந்தப் படகுகளிலே வீடு கட்டிக் கொண்டு படகுக்காரர்கள் வசிக்கிறார்கள். சீனாவுக்குள்ளேயே மகா அழகான சில பெண்கள் அந்தப் படகுக்காரக் குடும்பங்களிலே இருக்கிறார்கள். படகுக்காரப் பெண்ணை மணக்க விரும்பும் ஒரு படகுக்கார வாலிபன், அவளுக்கு ஓர் ஊசியை அனுப்புவான். நூலைக் கோத்துக் கொண்டு அந்த ஊசி திரும்பி வருமானால், 'சரி' என்று அர்த்தம்.

மேல்நாட்டில் வாலிபரும் பெண்களும் தாங்களே முயன்றுதான் வரனைத் தேடிக்கொள்ளவேண்டும். அமெரிக்காவில் பெண்களை அழகு



மகா அழகான எம். பி., பி. எஸ். மாணவன் பெண் பார்க்கிறான்....

காப்பிரைட்: இந்தியா (ஆங்கிலம்: 18-4-'48), துல்லோச் ரோட், கொலாபா, பம்பாய்.



சர்வகலா வல்லவருக்கு இப்படி ஆறு பெண்கள் தேவை.

செய்வதற்கென்றே இரண்டு லட்சம் கோடி டாலர் மதிப்புள்ள சாயம் முதலிய அலங்காரச் சரக்குகளைப் பல கம்பெனிகள் தயாரிக்கின்றன; நாகரிகமான ஆடைகளையும் பல கம்பெனிகள் தயாரிக்கின்றன. வாலிபர்களுக்குக் கைநிறையப் பணம் கொடுக்கிறார்கள். பெண்களை அவர்கள் அழைத்துக்கொண்டு, நாட்டியம், ஸினிமா, விளையாட்டுச் சங்கம் முதலியவற்றுக்குச் செல்லுகிறார்கள். இதிலிருந்து தங்களுக்கு வேண்டிய மணாட்டியை அவர்கள் தேர்ந்துகொள்கிறார்கள்.

நம் இந்தியாவிலோ தங்கள் குழந்தைகளுக்கு வரன் தேடும் கடமை பெற்றோரைச் சார்ந்திருக்கிறது. அந்தக் காரியம் மூன்று விதமாய் நடக்கிறது:

நம் வைதிகர்களின் வழிதான் மிகவும் புத்திசாலித்தனமானது. பெண்கள் வளர்ந்து குரூபமாகவோ தடித்தோ போய்விடக்கூடும்; பிள்ளைகள் வளர்ந்து கெட்ட பழக்கங்களைப் பிடித்துக்கொள்ளக்கூடும். அதற்குள்ளாகவே அவர்களுக்கு இவர்கள் பத்திரமாக மணம் செய்து வைத்துவிடுகிறார்கள். மந்திரத்தைச் சொல்லி முடிந்த மங்கல முடிச்சை அவிழ்க்க யாரும் பின்னால் துணிவதில்லை.

அதிதீவிர நவீன நாகரிகக்காரர்களுக்கும் அதிகக் கஷ்டம் இல்லை. அவர்களுக்கு மேல்நாட்டு முறையில் மிகுந்த நம்பிக்கை. வாலிபரும் கன்னிப் பெண்களும் தங்கள் வரனைத் தாங்களே தேடிக்கொள்ளும்படி அவர்கள் விட்டுவிடுகிறார்கள். அப்படியில்லையென்றால், பெருந்தொகை சீதனமாகக் கிடைத்தாலும் அவர்களுக்குச் சம்மதமே.

இந்த இரண்டு வகையிலும் சேராத இரண்டுங்கெட்டான் பெற்றோருக்குத்தான் மிகுந்த சிரமம். அவர்கள் நன்றாய்ப் படித்திருக்கிறார்கள். ஆகவே, பாலிய விவாகம் தவறு என்று அவர்கள் உணர்கிறார்கள். என்றாலும், அதற்காக மேல்நாட்டு முறையைப் பின்பற்றவும் அவர்களுக்குத் துணிச்சல் இல்லை. இப்படித் திணறுவதால், மிகவும் ரசமான ஒரு வழியை அவர்கள் கண்டுபிடித்துவிட்டார்கள். அதுதான் திருமண விளம்பரம். இப்போது நம் நாட்டின் தலைசிறந்த தினசரிப் பத்திரிகைகள் 'டைப்பிஸ்ட் தேவை', 'ஸ்டெனொகிராபர் தேவை', 'யந்திரம் தேவை'

என்ற விளம்பரங்களைப் போலவே, 'மணமகள் தேவை', 'மணமகன் தேவை' என்ற விளம்பரங்களையும் கொட்டை கொட்டையாகப் பிரசுரிக்கின்றன.

இந்த வரன் தேடும் விளம்பரங்கள் எப்படி ஆரம்பித்தன என்றே தெரியவில்லை. தறிகெட்ட எவனோ ஒரு வாலிபனின் மூளையில்தான் இந்த யுக்தி முதல்முதலில் உதித்திருக்க வேண்டும். கல்யாண மார்க்கெட் நிலவரத்தை ஆராய்ந்து பார்த்தால், 'மகா அழகான பெண்', 'நடுத்தர அழகு வாய்ந்த பெண்', 'அழகும் படிப்பும் சங்கீத ஞானமும் உள்ள பெண்', 'சிவப்பான பெண்'- இவர்களுக்கெல்லாம் நல்ல கிராக்கி இருப்பதாகத் தெரிகிறது. கறுப்புப் பெண்களின் கதி அந்தரமாக இருக்கிறது. இந்த ரகஸ்யத்தை அறிந்து கொண்ட ஒரு மாமா தம் மருமகளுக்கு 'மணமகன் தேவை' என்று பின்வரும் விளம்பரத்தைப் போட்டார்:

"கல்யாணத்தில் அழகே முக்கியமாதலால், என் 18 வயது மருமகள் டி. ஆர். மௌலிக் காயஸ்தாவை மணக்க அழகான வாலிபர்களின் விண்ணப்பங்களை வரவேற்கிறேன். மணமகன் எம். பி., பி. எஸ். பட்டம் பெற்றிருக்க வேண்டும். நல்ல பதவியில் இருக்கவேண்டும். பணக்காரராக இருக்க வேண்டும். சீதனம் ரூ. 8,000."

இவ்வளவு பணத்தை ஜேபியிலே போட்டுக் குலுக்கிக்கொண்டிருப்பவர் என்ன நிபந்தனை விதித்தாலும் தாங்கும். பெரும்பாலான பெண்களின் பெற்றோரால் இப்படியெல்லாம் விதிக்கக் கட்டுமோ?

ஒரு சர்வகலாவல்லவர் தாம்



மேன்மையான பயிற்சி பெற்ற பெண்...

கண்ட கனவையெல்லாம் சேர்த்து ஒரு பெரிய அட்டவணையே தயாரித்துப் பின்வருமாறு விளம்பரம் செய்துவிட்டார்:

"பட முதலாளி, பத்திராசிரியர், பிரசுரகர்த்தர்; வயது 33; அயல்நாட்டில் கல்வி கற்றவர்; ஹிந்து; வங்காளி, பிரம்மசாரி; வியாபாரி; உயர்ந்த குடும்பம் - இத்தகைய ஒருவர் மணந்துகொள்ளப் பெண் வேண்டும். பெண் 25 வயதும், கல்வியறிவும், சங்கீத ஞானமும், கலாரசனையும், உயர்குல ஆடம்பரமும், ஏழை மக்களிடம் சமத்துவமும் உள்ளவளாக இருக்க வேண்டும். அவள் எந்த மதமோ, சரித்திரமோ, கைம்பெண்ணோ எப்படி இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் முற்போக்கும், தேசியமும், வீரமும் உள்ளவளாக இருக்க வேண்டும். பொட்டையுருப் படிப்பும் அநாவசியப் பட்டங்களும் பெற்றவளாக இருக்கக்கூடாது. இங்கிலாந்து, அமெரிக்கா

முதலிய நாடுகளுக்கு அவளை யும் அழைத்துக் கொண்டு இந்த விளம்பரக்காரர் கூடிய சீக்கிரம் யாத்திரை புறப்பட வேண்டும். அவள் எழுதும் கடிதம் வெகு ரகசியமாய் வைத்துக்கொள்ளப் படும். அவளே எழுத வேண்டும்; தாகர் வேண்டாம்.''

ஏது, இந்த மனிதர் ஒரு பெண்ணை மணந்து பயனில்லை; ஆறு பெண் களைத்தான் மணக்க வேண்டும்.

தகப்பனாரின் யோக்கியதையும் பதவியும் மகனுக்கு ஓரளவு கல் யாண யோக்கியதையை அளிக்கின் றன. ஒரு தீவிர மாணவன் தனது குணப் பெருமையைக் கூறுகிறான்; அதோடு நிற்காமல், 52 தலைமுறை யாக விட்டுப்போன தன் தாயாதி களின் குணப் பெருமையையும் குறிப்பிடுகிறான்:

''நல்ல வசீகரமும் படிப்பும் நல்லொழுக்கமும் வாய்ந்த குலப்பெண் தேவை. மண மகன் மகா அழகன்; கலாரசி கன்; எம். பி., பி. எஸ். மாண வன்; எல்லாருக்கும் சிநேகி தன்; எவருக்கும் விரோதி யல்ல என்று பெய ரெடுத்தவன்; அப்பழுக்கற்ற, கீர்த்தி பெற்ற கத்திரி குலத் தினன். அவன் குடும்ப உற வினர்களெல்லாம் நல்ல பதவி யிலும், கெஜடட் ஆபீஸர் களாகவும் இருக்கிறார்கள். இது வீண் பெருமையோ, பேராசையோ அல்ல. அத் தனையும் காதலே.''

இது எந்தப் பெண்ணுக்கும் அருமையான புக்ககந்தான். ஆனால், பையன் அல்லவா பெரிய இடைஞ் சலாக இருக்கிறான்! அவனுடைய பேரழகோடு ஒப்பிடக்கூடிய அபூர்வ அழகல்லவா பெண்ணுக்கு வேண்டி யிருக்கிறது!

இவர்களெல்லாம் தேவலோக அழகைத் தேடும் வேட்டையாடிகள். இவர்களைவிட, அநுபவ சாத்திய மாக நடக்கும் சில அபூர்வ மனிதர் களைப் பார்ப்போம். அவர் களுடைய பித்தங்களும் விசித்திர மாகத்தான் இருக்கின்றன.

பின்வரும் விளம்பரக்காரருக்கு உடலழகும் நிறமும்பற்றிக் கவலை இல்லை:

''மேன்மையான பயிற்சி பெற்ற பெண் தேவை. வீட்டு விவகாரங்களில் வல்லவளாக இருக்கவேண்டும். கடிதப் போக்கு வரத்து மெத்த ரக சியமாக வைத்துக்கொள்ளப் படும்.''

இதை விட அநுபவசாத்திய மான மற்றொரு விளம்பரம் வருமாறு:

''சிக்குச் சிடுக்குகளில்லாத, தேகக்கட்டு வாய்ந்த ஒரு வாலிபனை மணக்க ஓர் அழ கான கன்னிப்பெண் தேவை.''

ஆனால், இதற்கெல்லாம் பலன் என்ன? சமீபத்தில் லக்னௌவி லிருந்து வந்த ஒரு பத்திரிகைச் செய்தி அங்கே விவாகரத்து மனுக் கள் மலிந்துவிட்டதாகக் கூறுகிறது. தங்கள் படித்த புருஷர்கள் தங்களைக் கொடுமையாக நடத்து வதாகப் புகார் செய்துகொண்டு கோர்ட்டுக்குப் பல படித்த பெண் கள் ஓடி வருகிறார்களாம். அந்தச் செய்தி மேலும் கூறுவது இது: ''...அவர்களில் பெரும்பாலோரும் விளம்பரத்தைப் பார்த்து மணம் செய்துகொண்டவர்கள் என்று தோன்றுகிறது.''

பழைய அரிசி உயர்ந்தது; புதிசு தாழ்ந்தது. ஆகையால் ஆராய்ச்சியாளர்கள் ஒரு யுக்தி கண்டு பிடித்திருக்கிறார்கள். அதன் மூலம் அரிசியிலே—

# புதிசு பழசாகிறது

சம். ரா. பவானிகர்

பெங்களூர் சென்ட்ரல் காலேஜ் ரசாயன போதகாசிரியர் டாக்டர் சஞ்சீவிராயரும் அவருடைய மாணவர்களும் பல வருஷங்களாக அரிசியைப் பற்றி ஆராய்கிறார்கள். அதிலிருந்து அரிசியின் சில குணாதிசயங்களை அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

நல்ல அரிசியாக இருந்தால் அதற்குச் சில குணங்கள் உண்டு. அரிசி கொதி தாங்கும்; பருக்கை மிகப் பெரியதாக உப்பும்; சாதம் பூப் போல் தனித்தனியாக உதிரும்; கைக்கு மெத்தென்று இருக்கும். பருக்கை எத்தனைக்கு எத்தனை பெரிதாக உப்புகிறதோ அத்தனைக்கு அத்தனை அரிசி உயர்ந்தது. அரிசியில் வாசனையும் ருசியும் முக்கியம் அல்ல. அரிசி ஊறிப் பெரிதாவதற்கும், தண்ணீரை அரிசி உறிஞ்சுவதற்கும் சம்பந்தம் உண்டு. நல்ல அரிசி சீக்கிரமே தண்ணீரை உறிஞ்சி விடும். ஊறியபின் உலர்த்தினால் சீக்கிரம் காய்ந்துவிடும்; அதாவது, உறிஞ்சிய நீரைச் சீக்கிரமாக வெளியே விட்டுவிடும்.

புதுப் பச்சரிசியை வடித்தால் சாதம் காண்பது இல்லை; உடம்புக்கும் ஒத்துக்கொள்வதில்லை. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். என்ன காரணம்? புதுப் பச்சரிசி தண்ணீரைச் சீக்கிரமாக உறிஞ்சுவதில்லை; அதே அரிசி பழசாகிவிட்டால் சாதம் நன்றாயிருக்கும்; புது நெல்லுடன் தழைகளைப் போட்டுக் கலந்து மட்கவைத்து நாமே பழைய நெல் ஆக்கிவிடலாம். நெல் தானாகப் பழசாக வேண்டுமானால் சில மாதங்கள் பிடிக்கும்; நாமே அதைப் பழசாக்குவதில் சில சமயம் பதம் கெட்டுவிடுவது உண்டு. நம் தேசத்தில் வெகு காலமாக நெல்லைப் புழுக்கிக் குத்தி உபயோகிக்கும் வழக்கம் இருக்கிறது. ஆனால் இது பழைய அரிசிபோல் சாதம் காணாது. ஆகவே புதுப் பச்சரிசியும் சிறந்ததல்ல; புழுங்கலரிசியும் சிறந்ததல்ல.

பழைய நெல் வேண்டுமென்றால் காலதாமதமாகிறது. நாம் தற்சமயம் நெல்லைச் சேகரித்து வைத்துக்கொண்டு வெகு நாளைக்குப் பிறகு உபயோகிக்கும் நிலையில் இல்லை. ஆனால் புதுப் பச்சரிசியில் உள்ள குறையும் புழுங்கலரிசியில் உள்ள குற்றங்களும் நீங்க வேண்டும். அதற்குத் தகுந்த வழியைக் கண்டு பிடிக்க வேண்டும். அரிசியில் இருக்கும் சத்தும் கெடாமல் பாதுகாக்க வேண்டும்.

வெகு காலமாக நம் நாட்டில் புழுங்கல் அரிசியை உபயோகிக்கும் வழக்கம் இருக்கிறது அல்லவா?

காப்பிரைட்: கர்மவீர (கன்னடம்: 31-5-'48), ஹுப்ளி.

விட்டு அப்போதுதான் கட்கரி மறைந்துபோன காலம். என் பேனாவீரத்துக்குத் தகுந்த துறைகள் இவைதாம் என்று முடிவுகட்டி, நான் படபடவென்று கவிதைகளும் கடகடவென்று விகடக் கட்டுரைகளும் எழுதிக் குவிக்கலானேன். குப்பைக்காட்டிலே உயர்தர நாடகங்கள் பார்க்கக் கிடைக்காததால், நான் நாடகம் எழுதும் வழிக்கு அதிகமாகப் போகவில்லை. நல்ல நாடகங்களைப் பார்த்திருந்தேனே, வருஷத்துக்கு இரண்டு மூன்று நாடகங்களும் எழுதித் தள்ளியிருப்பேன்!

கோல்ஹட்கர் அடிக்கடி கடிதங்களிலே தமது அபிப்பிராயத்தைத் தெரிவிப்பார். அவருடைய விமரிசனக் கடிதங்களில் பாராட்டு இருந்தாலும் நிறையக் குற்றங்குறைகளைப் பற்றியே எழுதியிருக்கும். விடாமல் நாலு வருஷகாலம் அவர் என் குறைகளை எடுத்துக் காட்டினார். அவரைப்போன்ற திக்கஜ விமர்சகர் வழி காட்டியும் நான் கவியாகவோ விகட எழுத்தாளனாகவோ சோபிக்கவில்லை. என் முதல் கேலிக் கட்டுரைமீது மான நஷ்ட வழக்குத் தொடர்ந்தது! அதனால் அதன் புகழ் பரவியது. ஆனால் அதைப்போன்ற பல கட்டுரைகள் எழுதியும், மாதந்தோறும் பல பத்திரிகைகளில் என் கவிதைகள் வெளிவந்துங்கூட என் மனத்துக்குத் திருப்தி உண்டாகவில்லை. ஏதோ ஒரு குறை குறுகுறுத்துக் கொண்டே இருந்தது. பூட்ஸும் செருப்பும் தைக்கும் தொழிலாளி, கோட்டும் நிஜாரும் தைக்கப் போனால் எப்படி இருக்கும்! அது போல நான் ஏதோ தவறு செய்வதாக அடிக்கடி தோன்றும்; ஆனால் என் மனத் தவிப்பின் உண்மையான காரணம் எனக்கு விளங்கவே யில்லை.

1923 - இல் ஒரு நாள் திடீரென்று கோல்ஹட்கரிடமிருந்து வந்த கடிதம் அதை நன்றாக விளக்கிவிட்டது. அந்தக் கடிதம் வந்த வரலாறு மிகவும் ரசமானது. 1920 - இல் என் தாத்தா இறந்துபோனதனால் சோர்ந்த மனநிலையில் துன்பத்தை மறக்கடிக்க நான் ஒரு கதை எழுதியிருந்தேன். 'நமக்குக் கவிதையும் ரகளைக் கட்டுரையுமே எழுத வரும்; நல்ல கதை எழுத வராது' என்ற நினைப்பில் அதை ஒரு மூலையில் எறிந்துவிட்டேன். மூன்று வருஷங்கள் கழித்து, ஒரு மாதப் பத்திரிகையின் ஆண்டுமலருக்கு அழைப்பு வந்தபோது, என் கையில் கவிதையோ விநோதக் கட்டுரையோ இல்லாமையால், அந்தக் கதையையே அனுப்பிவைத்தேன். இந்தச் செய்தியை நான் கோல்ஹட்கருக்கு முன்னதாக அறிவிக்கவில்லை; காரணம்: கவிதையும் கேலியும் என் பேனாவின் சொந்தக் குழந்தைகள், சிறுகதை என்பது தத்துப்பிள்ளை என்பது என் எண்ணம்! அந்த இதழ் வெளிவந்ததும் நான் எதிர்பாராத ஒரு கடிதம் வந்தது. "உங்கள் கதை இந்த இதழிலே இருக்கும் என்று நான் கனவில்கூட நினைத்ததில்லை. புரட்டிக்கொண்டே வரும்போது உங்கள் பெயர் தென்பட்டதால் உடனே கதையைப் படித்தேன். ஒரு தடவை படித்துத் திருப்தி ஏற்படாததால் மறுமுறை படித்தேன். 'வீடு யாருடையது?' என்ற கதையை மூன்றாம் முறை படித்துவிட்டு இந்தக் கடிதம் எழுதுகிறேன். கதை எழுதுவதுதான் உங்களுக்குச் சரியான துறை; காவியமோ கேலியோ உங்

கள் துறையல்ல. உங்கள் கற்பனைத் திறமை கதாசிரியனுடையது; கவியினுடையதல்ல. இதைக் கவனித்து இனிமேல் நீங்கள் உங்கள் துறையில் இறங்கவேண்டும் என்று நான் வற்புறுத்திக் கூறுகிறேன்'' என்று கோல்ஹட்கர் எழுதியிருந்தார்.

அவருடைய இந்தக் கடிதம் என் இலக்கியத் துறையை எனக்கு விளக்கிக் காட்டியது என்று சொல்லத் தடையில்லை. பிறகு ஐந்து வருஷகாலம் நான் முக்கியமாகச் சிறுகதை எழுதுவதிலேயே கவனம் செலுத்தினேன். இந்தச் சிறுகதைகளை வாசகர்கள் விரும்பினார்கள். அதனால் துணிவுகொண்டு, 'உள்ளத்தின் குரல்' என்ற என் முதல் நாவலை எழுதினேன். பிறகு 'இரு துருவங்கள்', 'எரி நட்சத்திரம்' என்ற என் நாவல்களைப் படித்துத் தான், பாபூராவ் பேண்டார்கரும் டைரெக்டர் விநாயக்கும், ஆயுசிலே நாலு படங்கள்கூடப் பார்க்காத என்னைப்போன்ற எழுத்தாளனிடம் 'ஹம்ஸ் பிக்சர்ஸு'க்கு முதல் சமூகக் கதை எழுதித் தரும் பொறுப்பை ஒப்படைத்தார்கள்.

கோல்ஹட்கரைப் போலவே, கேள்கரும் வாமனராவ் ஜோசியும் என் ஆரம்பக் கட்டுரைகளை விடாமல் படித்துப் பாராட்டியும் குறை கூறியும் வந்தார்கள். 'நாடக இலக்கியம்' என்ற என் நூலை ஆழ்ந்து படித்துக் கேள்கர் சமீப காலத்திலே விரிவான விமரிசனம் எழுதியிருந்தார். வருஷத்துக்கு ஒரு தரமோ ஆறு மாதத்துக்கு ஒரு தரமோ சந்திக்கும்போது, இடையிலே வெளியான என் இலக்கியத்தைப்பற்றிய தமது கருத்தை ஜோசி தெளிவாகச் சொல்லிவிடுவார். அவரைப்போலச் சுவையோடு படித்துக் கண்டிப்பாக அபிப்பிராயம் சொல்லும் விமர்சகர்கள் கிடைப்பது அரிது.

பதினெட்டு வருஷங்களாக, எத்தனையோ விதமான விமர்சகர்களின் கைக்கு என் நூல்கள் போயிருக்கின்றன. ஓர் அரிசியைக் கொண்டு ஒரு பானைச் சோற்றைப் பதம் பார்க்கும் ரசிகர்கள், புத்தகத்தைத் தாங்கள் படிக்காமலே தங்கள் சிஷ்யகோடிகளின் சிறுபிள்ளைத்தனமான அபிப்பிராயங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு சொற்சித்திரம் புனையும் பண்டிதர்கள், 'உலகமே மஞ்சள் நிறமானது' என்று கூச்சல் போடும் காமாலைக் கண்ணுள்ள 'ராஜவைத்தியர்'கள், பத்துப் பதினைந்து வருஷத்துக்கு முந்திய என் நூல்களைப் படித்துவிட்டு அதிலிருந்து தாம் கொண்ட கொள்கையை இந்த நிமிஷத்திலே தமது 'அப்டுடேட்' கொள்கையாக அடித்துவிடும் அல்ப சந்தோஷிகளான ஆத்மாக்கள் - இப்படிப் பலவகையான விமர்சகர்கள் உண்டு. ஆனால் நல்ல வேளையாக, அவர்களிலே பெரும்பாலும் உயர்ந்த ரசிகத் தன்மையுள்ள விமர்சகர்கள்தாம் என் வழிக்கு வந்திருக்கிறார்கள்.

மாட்கோல்கரும் நானும் பதினைந்து வருஷங்களாக நண்பர்கள்; அதனால் நாங்கள் அந்தக் காலத்திலேயே பரஸ்பர முகஸ்துதிக் கழகம் ஸ்தாபித்துக்கொண் டிருக்கலாம் என்று யாராவது நினைத்தால் அது பெருந் தவறு. 'பொன்மான்' என்ற என் நாவலுக்கு மாட்கோல்கர் எழுதிய விமர்சனத்தைப் படித்துவிட்டு, நாக்பூரிலுள்ள ஒரு பிரசித்த கவி, ''இனிமேல் காண்டேகர் உங்கள் முகத்திலேகூட விழிக்கமாட்டார்'' என்று அவரிடம் சொன்னாராம்.

அதற்குப் பிறகு நான் ஏதோ வேலையாக நாக்பூருக்குப் போனபொழுது, இந்தச் செய்தி என் காதில் விழுந்தது. நானாகப் போய் மாட்கோல்கரைச் சந்தித்தேன். இந்த விமர்சனத்துக்குப் பிறகும் எங்கள் நட்பு நிலைத்திருந்ததைக் கண்டு அந்தக் கவி அசந்துபோய்விட்டார்! இதில் ஆச்சரியப் படக்கூடிய விஷயம் எதுவுமில்லை. மாட்கோல்கரின் விமர்சனம் கடுமையாக இருந்தது என்பது வாஸ்தவம். ஆனால், ஆட்டை அறுக்கும் கசாப்புக்காரனுடைய கொடுமையோ, குற்றமற்ற மருமகளுக்குச் சூடு போடும் கொடிய மாமியாரின் நெஞ்சமோ அதில் இல்லை. சிஷ்யனைச் சரியான வழிக்குத் திருப்ப விரும்பும் குருவின் மனமும், மகன் நல்லவனாக வாழவேண்டும் என்பதற்காக அவனை அதட்டிப் பேசும் தந்தையின் உள்ளமும் அந்தக் கடுமையிலே ஒளிந்திருக்கின்றன. 'பொன்மான்', 'இரு துருவங்கள்' என்ற என் நாவல்களிலுள்ள குற்றங்களை எடுத்துக் காட்டியபோது உலகப் பிரசித்திபெற்ற ருஷ்ய நாவலாசிரியர்களான துர்கனேவ், டால்ஸ்டாய் ஆகியவர்களோடு என்னை ஒப்பிட்டு, அவர்களுக்கு முன்னால் நான் ஒரு 'துக்கடா' என்பதை அவர் விளக்கியிருந்தார். இந்த விமர்சனத்தினால் நான் சோர்வடையவில்லை. இன்னும் கேட்டால், என்னை நானே ஆராய்வதற்கும், இலக்கியத்தை நிறையப் பயிலுவதற்கும் இது தூண்டுகோலாக இருந்தது.

என் விமர்சனக் கட்டுரைகள் என் சிறுகதைகளைவிட உயர்ந்தவை என்பது காட்கிள் என்பவருடைய அபிப்பிராயம். 'நிலவிலே' என்ற என் சிறுகட்டுரைத் தொகுதியை விமர்சித்தபோது, இலக்கியத்துக்கும் எழுத்தாளனின் தனித்தன்மைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய முனைந்து, விமர்சனத்திலே ஒரு தனிப் பாதையைக் குலகர்ணி வகுத்தார். 'இரு மனம்' என்ற என் நாவலுக்கு விமர்சனம் எழுதிய ஸாளே என்பவர், இன்ன இன்னபடி எழுதியிருந்தால் அந்த நாவல் பின்னும் நன்றாக இருந்திருக்கும் என்று சொன்னார். அந்த மாறுதல்கள் எனக்கும் ஏற்கனவே தோன்றித்தான் இருந்தன; ஆனால் எதனாலோ, எழுதும்போது அவற்றைப் பயன்படுத்த முடியவில்லை. எழுத்தாளனுடைய இந்த ரகசியத்தை அறிந்துகொள்ளும் அவருடைய ரசிகத் தன்மையைக் கண்டபோது எனக்கு மிகவும் ஆச்சரியமாகத்தான் இருந்தது.

குசுமாவதி அம்மையார் எப்போதுமே உன்னதமான இலக்கியத்தை எடுத்துக்காட்டாக வைத்துக்கொண்டு விமர்சனம் செய்வது வழக்கம். சமீபத்திலே புனாவில் ஒரு பிரசங்கத்தில் நாவல்களைப் பற்றி அவர் பேசியபோது, 'யாருக்கு அக்கறை?' என்ற மராட்டி நாவலை லட்சியமாக வைத்துக்கொண்டு 'எரி நட்சத்திர'த்தை நுணுக்கமாக ஆராய்ந்தார். ஆனால் நம் நாட்டில் உயர்ந்த விமர்சகர்களான குசுமாவதி அம்மையாரைப் போன்றவர்களுக்குக்கூட, ஒரு கலைச் சிருஷ்டியின் குணதோஷங்களை ஆராயும்போது எந்தக் காலத்திலே எந்த நிலையிலே அது தோன்றியிருக்கிறது என்பதையும், எந்த எந்த வகையான இலக்கியங்கள் எழுத்தாளனுக்குத் தனித்தன்மையை அளிக்க உதவியிருக்கின்றன என்பதையும் ஆழ்ந்து கவனிக்க வேண்டிய அவசியம் இன்

னமும் புலப்படாதது விந்தையாகத் தான் இருக்கிறது. கோல்ஹட்கர் யுகத்து இலக்கிய மதிப்புகளும், ஆப்டே யுகத்துச் சமூக நிலைமைகளும் கலந்த ஒரு பண்பாடு சிறு வயதிலிருந்து என்னிடத்திலே ஊறியிருக்கிறது. என் இலக்கியத்தி லுள்ள பல குறைகளுக்கு அதுதான் காரணம். ஆனல் இதுவரையில் எந்த விமர்சகனும் இந்த நோக்கத்தோடு என் இலக்கியத்தை ஆராய்ந்ததில்லை.

எல்லா விமர்சகர்களுமே மாட்கோல்கரைப்போலவோ குசுமாவதி அம்மையாரைப்போலவோ நிபுணர்களாகவும், இலக்கிய வளர்ச்சியில் ஊக்கம் கொண்டு விமர்சனத் தொழிலை மேற்கொண்டவர்களாகவும் இருப்பதில்லை. அரசியலைப் போலவே இலக்கிய உலகத்திலும் வாய்ப்பேச்சு வீரர்களும், சூழ்ச்சி செய்யும் சாணக்கியர்களும், தகுதியற்றவர்களும் மலிந்திருக்கிருர்கள்; அதிகாரப் பதவியிலே இருப்பதனல் அவர்களுடைய ஆட்சி செல்லுகிறது. வெவ்வேறு கட்சிகளும் கொள்கைகளும் இங்கும் உண்டு. பெரிய ஆசாமி என்று பெயர் பெறவதிலே ஒரு மோகமும், குருட்டுத்தனமான அகங்காரமும் இலக்கியத் தொண்டர்களிடத்திலே கூடப் புலப்படுகின்றன. சிறந்த விமர்சகர்கள் வகுத்து வைக்கும் தெள்ளிய விமர்சனத் துறையிலே, இத்தகைய ஆசாமிகளின் செய்கையினல் அடிக்கடி கலங்கல்கள் தோன்றுகின்றன. தூய்மையான இலக்கியத் துறையிலும் இம்மாதிரி நடக்கிறது.

இலக்கியத் துறையிலுள்ள போட்டி, கட்சி மனப்பான்மை, அகந்தை முதலியவற்ருேடு சாதாரண வாசகர்கள் சம்பந்தப்படுவதில்லை. இந்த வாசகர்கள் புகழ் பெற்றவர்களாக இல்லாமலிருக்கலாம். ஆனல் தம்முடைய கருத்துக்களை இவர்கள் ஒளிவு மறைவில்லாமல் தாராளமாக எழுத்தாளனிடம் சொல்லுகிருர்கள். இலக்கியப் பரிபாஷையில் அவற்றைச் சொல்ல இவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம்; ஆனல் இவர்கள் ரசித்துக் கூறும் உண்மைகள் எழுத்தாளனுக்கு வழி காட்டுகின்றன.

'கிழிந்த சட்டை' என்ற என் சிறுகதை வெளிவந்ததும் புனவிலுள்ள போலீஸ்காரர் ஒருவர் எழுதிய கடிதம் வேடிக்கையானது. ஒரு தரம் ஒரு சகோதரி, "உங்கள் 'வெறுங் கோயில்' நன்ருக இருக்கிறது; ஆனல் ஒரு குறை என் நெஞ்சை உறுத்துகிறது. சமூகக் கொடுமைகளுக்குப் பலியான பல வீனப் பெண்களைத்தான் நீங்கள் இன்னமும் சித்திரிக்கிறீர்கள். நவீன காலத்துப் புரட்சிப் பெண்ணைப் பற்றி நீங்கள் எப்பொழுதுதான் கனவு காண்பீர்களோ?" என்று கேட்டிருந்தார். தொழில்முறையிலே விமர்சனம் செய்யாத இந்த வாசக நண்பர்களுக்கு, என் நூலைப் படிப்பதற்கு முன்பே என்னைப் பற்றித் தப்பபிப்பிராயம் ஏற்படக் காரணம் இல்லை. இத்தகைய ரசிகர்களின் அபிப்பிராயத்தில் உண்மையும் ஆர்வமுமே இருக்கும். கடந்த பதினெட்டு வருஷங்களாக, விமர்சகர்களல்லாத இந்த ரசிகர்கள் எனக்குப் பேருதவி புரிந்திருக்கிருர்கள். நான் எழுதுவதிலுள்ள குற்றங் குறைகளை நீக்கிக்கொள்வதற்கு இன்னமும் நான் பாடுபடுவதற்குக் காரணம், இவர்களைத் திருப்தி செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கந்தான்!

தொல்லை பழைய தொல்லைதான். அனுபவம் புதிது புதிதாக நேர்கிறது. இதோ ஒரு வெள்ளைக்காரப் பெண்ணின் அனுபவம்.

# மூன்றாம் வகுப்பு

கெர்ட்ரூட் மர்ரே

இரவிலே மெதுவாகச் செல்லும் ரெயில்வண்டியில் பம்பாயிலிருந்து புனாவுக்கு நான் பிரயாணம் செய்ய நேர்ந்தது. தூரம் 120 மைல். வண்டி அதைக் கடக்க ஆறு மணி நேரம் ஓடுகிறது.

முதலில் டிக்கட் வாங்குவதே ஒரு பெரிய கண்டமாயிருந்தது. ஆகையால், வண்டி வந்து நிற்பதற்கு முன்னதாகவே, நான் பிளாட்பாரத்துக்குள் நுழைந்து, சகல வித மல்யுத்தங்களுக்கும் முஸ்தீப்பாக இருந்தேன்.

அங்கே ஏக ஜனக்கூட்டம். அந்த ஜனத் திரளுக்கு இடையில் வந்து நின்ற வண்டியே கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போயிற்று. அலை மோதுவதுபோல் ஜனசமுத்திரம் வண்டியை நெருங்கியது. வண்டியிலே இடம் பிடிக்க என்ன போராட்டம் நடத்தவேண்டுமோ என்ற பரபரப்புடன் அத்தனை பேர் இருதயங்களும் துடித்துக்கொண்டிருந்தன.

கூச்சல், கூக்குரல், குத்தல், முட்டல் முதலிய ஆர்ப்பாட்டங்கள் வலுத்தன. மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக்கொண்டு ஓலமிட்டவண்ணம் கூலிகள் இந்த ஜனசமுத்திரத்துக்குள்ளே வழி விலக்கிக்கொண்டு புகுந்தார்கள். இந்தப் பரபரப்பிலே அந்த மூட்டை முடிச்சுகளின் சொந்தக்காரர் ஒரு புறமும் இந்தக் கூலிகள் ஒரு புறமுமாய்ச் சிதறிப் போவார்கள் போலிருந்தது. எல்லாம் ஒரே அமளி.

மூன்றாம் வகுப்பில் பெண்கள் வண்டியை நான் தேடினேன். பயனில்லை. பெண்கள் வண்டியிலே இவ்வளவு கும்பல் இராது என்பது என் எண்ணம்.

ரெயில்வே அதிகாரி எவருமே கண்ணில் தட்டுப்படாததால், “பெண்கள் வண்டி எங்கே?” என்று கூலிகளைக் கேட்டேன்.

எவனைக் கேட்டாலும், “இன்னும் பின்னாலே போங்கள்” என்றான். கடைசியிலே கார்டிடம் போய்ச்



காப்பிரைட்: பம்பாய் கிரானிக்கிள் (ஆங்கிலம்: 4-7-’48), பார்ஸி பஜார் தெரு, கோட்டை, பம்பாய்.

சேர்ந்தேன். அவரும் நானுமாக இன்னும் இரண்டு தடவை ஒரு கோடியிலிருந்து மறுகோடிக்கு நடந்தோம். பெண்கள் வண்டியையே காணோம்.

"ஒருவேளை இதில் பெண்கள் வண்டியே இல்லையோ என்னவோ?" என்று நான் சொன்னேன்.

"அதெப்படி இல்லாமல் போகும்?" என்றார் கார்டு.

மூன்றாவது முறையாக அதைத் தேடி முடித்தோம்.

"நீங்கள் வேண்டுமானால் இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்யுங்களேன்" என்றார் கார்டு.

"நான் அவ்வளவு பணக்காரியாக இருந்தால், இப்படி முட்டாள் தனமாக நேரத்தையும் பலத்தையும் வீணடிக்கமாட்டேன்" என்று எரிச்சலோடு சொன்னேன்.

திடீரென்று கார்டு ஓட்டை உடைசலான ஒரு வண்டிக் கதவின் மேலே வெண்மையான சில கிறுக்கல்களைக் கண்டுவிட்டார். ஆஹா! அவருடைய கண்கூர்மைதான் என்ன அபாரம்! அவர் வெற்றிக் குதூகலத்துடன் எனக்கு அந்த வண்டியைக் காட்டினார். அந்த வண்டிக்குள்ளே அடைபட்டுக் கிடந்த ஆண்களைப் பார்த்து அடுத்த நிமிஷம் கூச்சல் போடத் தொடங்கினார். அதில் பெரும் பகுதியும் ஆண்களே அப்படி இப்படி அசைய முடியாமல் நெறித்துக்கொண்டிருந்தார்கள்.

"எப்படி இதில் ஆண்கள் நுழையலாம்? இது பெண்கள் வண்டி அல்லவா? ஆண்களெல்லாம் உடனே வாய் பேசாமல் இறங்குங்கள்" என்றார் கார்டு.

என்ன ஆச்சரியம்! வண்டியிலிருந்த அத்தனை ஆண்களும் மிகுந்த பணிவுடன், சிறிது சிறிது மட்டும் முணுமுணுத்துக்கொண்டு, வெகு கஷ்டப்பட்டு வெளியேறத் தொடங்கினார்கள். "இது பெண்கள் வண்டியாகத் தோன்றாதது எங்கள் குற்றம் அல்ல" என்று ஒரு மனிதன்கூட ஆட்சேபிக்கவில்லை. 'பெண்கள் வண்டி' என்ற வார்த்தைகளைப் புதுப்பித்து எழுதினால், இந்த உபத்திரவமெல்லாம் நேரிடாது அல்லவா? இது ஏன் ரெயில்வே அதிகாரிகளுக்குத் தெரியவில்லை?

வண்டி காலியாயிற்று. அதற்குள்ளே நுழைய எனக்கு இடம் கிடைத்தது. நான் நுழைந்தேன்.

"இதென்ன இருட்டாயிருக்கிறதே!" என்றேன்.

"வண்டி புறப்படும் போது, உங்களுக்கு வெளிச்சம் கிடைக்கும்" என்று எனக்கு ஆறுதல் சொன்னார் கார்டு. (வண்டி புறப்பட இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது. ஆனால், வண்டியில் இடம் பிடித்துக்கொள்ள, இப்போதே பூர்ண முயற்சியையும் மேற்கொள்வது நலம் என்று தீர்மானித்துக்கொண்டேன்.)

"ஏன் அதற்கு முன்னாலேயே விளக்குப் போடலாகாது?" என்று கேட்டேன்.

"யுத்த காலம்" என்றார் கார்டு.

"இப்போதுதான் யுத்தம் முடிந்துவிட்டதே. முதல், இரண்டாம் வகுப்பு வண்டிகளில் விளக்கு எரிகிறதே!" என்றேன்.

கார்டு தமது இலாகாவின் மீதுள்ள பக்தியால் மௌனம் சாதித்தார்.

அப்போது இரண்டு மூன்று பெண்கள் மட்டிலுமே வண்டியில் ஏறினார்கள். ஆகவே சௌக்கியமாகப் பிரயாணம் செய்யலாம் என்று அசட்டு

மனோராஜ்யம் செய்துகொண்டிருந்தேன். கார்டு நகர்ந்தார்.

திடீரென்று மலை சரிந்து உருண்டு வருவது போல், ஒரு பெரிய ஜனக் கும்பல் திமிதிமி என்று வண்டிக்குள் புகுந்தது. ஏராளமான பெண்களும் குழந்தைகளும் ஆண்களும் ஒரே




யடியாய் முட்டி மோதிக்கொண்டு வந்தார்கள். இது 'பெண்களின் வண்டி' என்று அந்த ஆண்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் என்ன செய்வார்கள்? அந்தக் கார்டின் பருந்துக் கண் பாக்கியம் அவர்களுக்கு இல்லை. வண்டி நிறைந்து பிதுங்கியது. கதவைச் சாத்த முடியவில்லை. கடைசியாக வண்டி புறப்பட்டது.

ஆனால், அடுத்த ஸ்டேஷனில் இன்னொரு கார்டு வந்து சேர்ந்தார். அவரும் பருந்துப் பார்வை உள்ளவர் தாம் போலிருக்கிறது. "இந்த வண்டிக்குள்ளே இருக்கும் ஆண்களெல்லாம் இறங்கவேண்டும்" என்று, அவரும் கூச்சல் போட்டார். அவர்களும் இறங்கினார்கள். கார்டு நகர்ந்தார். மறுபடியும் வண்டி நிறைந்தது. ஆனால், இந்தத் தடவை வந்து புகுந்தவர்கள் அத்தனை பேரும் பெண்களே. வண்டி புறப்படப் போகும் சமயத்தில் மூன்றுவது கார்டு ஒருவர் வந்து, "கதவைச் சாத்துங்கள், கதவைச் சாத்துங்கள்!" என்று கத்தினார். சொல்லுவதற்கென்ன, சொல்லிவிடலாம்; செய்து பார்த்தால் அல்லவா அந்தக் கஷ்டம் தெரியும்?

பலத்த போராட்டம் நடந்தது; பெருங்கூச்சல் கிளம்பியது; பலருடைய கை கால் நசுங்கியது. கதவைச் சாத்தும் முயற்சியில் சிறிதும் முன்னேற்றம் ஏற்படவில்லை. கார்டுக்கா கோபம் கோபமாக வந்தது. கடைசியாக மூன்று பெண்கள் பலவித சர்க்கஸ்கள் செய்து கதவைச் சாத்தி விட்டார்கள். ஆனால், கதவை மறுபடியும் திறப்பதானால் மீண்டும் பலவித சர்க்கஸ்களைச் செய்தாக வேண்டும். ஆகையால், 'நாங்கள் எல்லோருமே புனாவுக்குப் போகும் பிரயாணிகளாக இருக்கவேண்டும், ஆண்டவனே' என்று நான் பிரார்த்தித்துக்கொண்டேன்.

ஒரு மணியாயிற்று; இரண்டு மணியாயிற்று. இப்படியாக, நேரம் சென்றுகொண்டிருந்தது.

கல்லும் இரும்புந்தாம் உலோகங்களுக்குள்ளே கடினமானவை என்று இதுவரைக்கும் நான் எண்ணிவந்தேன். ஆனால், நாங்கள் உட்கார்ந்திருந்தோமே இந்த மரப்பெஞ்சுகளுக்கு அவை இரண்டும் இணையாகமாட்டா. மற்றப் பெண்களும் ஒவ்வொருவராக இந்த ரகசியத்தை உணரத் தொடங்கினார்கள். அதன் மேல் தங்கள் உடம்பை எத்தனை விதமான கோரங்கள் உண்டோ அத்தனை விதமாகவும் நெளித்துக்கொண்டார்கள். இரவு செல்லச் செல்ல, எல்லார் முகமும் சோர்ந்து வாடியது; எல்லார் உடம்பும் முறுக்கி நெளித்துக்கொண்டது. நரக சித்திரந்தான்.

செத்து விழுந்த பிணம்போல் பலர் தூங்கினார்கள். சில குழந்தைகள் மகா பரிதாபமாய் ஓலமிட்டன. அவற்றின் கண்ணீர் அவற்றின் அழுக்கு முகத்திலே அரும்பிய வேர்வையோடு கலந்தது. எல்லாருமே தாம் அழுக்கிலே புழுங்கினோம். காற்றிலே நிறைந்த புழுதியும் வேர்வையும் களிம்புப் படைபோல எங்கள் அத்தனை பேர் உடம்பையும் சூழ்ந்தன.

தளேகாம் ஸ்டேஷனில் அநேகம் பிரயாணிகள் இறங்க விரும்பினார்கள். கதவைத் திறக்க ஒரு பயங்கரமான போராட்டம் நடந்தது. கதவுக்கும் ஒரு டிரங்குப் பெட்டிக்கும் இடுக்கிலே அகப்பட்டுக் கொண்ட ஒரு குழந்தை வீரிட்டு அலறியது. (பிரயாணிகள் எத்தனை பேரோ அத்தனை எண்ணிக்கை டிரங்குப் பெட்டிகளும் மூட்டைகளும் வண்டியில் இருந்தன.) ஒரு கிழக் கைம்பெண் வெகு சிரமப்பட்டுத் தன் படுக்கையை ஒரு ஜன்னல் வழியாக வெளியே உருட்டிவிட்டாள். (ஏனென்றால், ஜன்னல் வழியாக வெளியேற மூட்டைமுடிச்சுகளுக்கு உரிமை உண்டா என்ற விஷயம் பெரிய விவகாரத்தில் இருந்தது. மூட்டைமுடிச்சுகளை ஜன்னல் வழியாகப் பலர் வெளியே தள்ளிக்கொண்டிருந்தபோது, அதே வழியாகப் பலர் உள்ளே நுழைய முயன்றுகொண்டிருந்தார்கள்.) வண்டி புறப்படப் போகிற சமயத்தில் ஒரு பெண் எப்படியோ சமாளித்துக்கொண்டு உள்ளே நுழைந்துவிட்டாள். ஆனால், "ஐயோ, என் படுக்கை!" என்று அலறினாள். அது பிளாட்பாரத்திலேயே தங்கிவிட்டது.

எங்கள் வேதனையான பிரயாணம் தொடர்ந்தது.

வண்டிக்குள்ளே யார் நுழைய வந்தாலும் சரி, வண்டியிலிருந்து யார் வெளியேறப் போனாலும் சரி, கதவு திறக்கும் போராட்டம் நடந்துகொண்டேயிருந்தது. வண்டி சில நிமிஷநேரமே நிற்கும் சின்ன ஸ்டேஷன்களில் ஜனங்கள் மூட்டைமுடிச்சுகளோடு எப்படியோ சமாளித்துக்கொண்டு இறங்கிவிட்டார்கள். அதுதான் மகா ஆச்சரியம். ஒருசமயம் ஜனங்கள் இப்படி இறங்க முயன்றபோது, கதவடியில் ஒரு பெண் சுருட்டி முடங்கிக்கொண்டு தூங்கினாள். அவள் முடங்குவதற்கு வேறே இடம் அகப்படவில்லை. அவளைப் பிற பிரயாணிகள் எழுப்பினார்கள். அவள் விழித்துக்கொண்டபோது, அந்தக் கடும் புழுக்கத்தில் அவளுக்கு இவர்கள் என்னதான் சொல்கிறார்கள் என்றே புரியவில்லை. ஜன்னிபிடித்தாற்போல் பல குரல்கள் உறுமின; வெறிபிடித்தாற்போல் பல கைகள் அவளை அலக்காகத் தூக்கி வீசின. அவள் சுருண்டு பொட்டலம்போல் என் மடியில் வந்து விழுந்தாள்.

பெஞ்சியில் குந்தியிருந்த வலி ஒரு புறம்; மடியில் படுத்த பெண்ணின் பாரம் ஒரு புறம்; (அவள் என் மடியில் பாதியும் பக்கத்தில் இருந்த பெண்ணின் மடியில் பாதியுமாகவே படுத்திருந்தாள்.) உக்கிரமான புழுக்கம் ஒரு புறம்—இத்தனை உபத்திரவங்களுக்கும் நடுவிலே நானும் கொஞ்சம் கண்ணயர்ந்தேன்.

ஊர் வந்து சேராதா என்ற ஆவலும், விமோசனம் கிட்டிவிட்டது போன்ற ஏதோ ஓர் உணர்ச்சியும் என்னை எழுப்பிவிட்டன. வண்டி மெதுப்பட்டது. எனக்கெதிரே உட்கார்ந்திருந்த சிறு பெண் தன் படுக்கையைச் சுருட்டினாள். பல

கால்களை இடறி மிதித்துக்கொண்டு, கதவருகே அவள் சென்ருள். ஆனல், இதற்குள்ளே கடல் போல் பல முகங்கள் வெளியே வந்து சூழ்ந்துவிட்டன. வெளியிலிருந்த யாரோ வண்டி நிற்பதற்குள்ளேயே கதவைத் திறந்துவிட்டார்கள். பல கூலிகள் ஒலமிட்ட வண்ணம் உள்ளே புகுந்தார்கள். அவர்கள் தூக்கி வந்த சாமான்களின் சொந்தக்காரர்கள் தங்களுக்கு இடம் பிடிப்பதற்காக அந்தக் கூலிகளை உந்திக்கொண்டிருந்தார்கள். நாங்கள் வெளியேறினல்தான் தாங்கள் உள்ளே வர இடம் கிடைக்கும் என்ற விஷயம், அவர்களுடைய இந்த அவசரத்தில் அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது? கீழே இடம் கிடைக்காததைக் கண்ட கூலிகள், எங்கள் மடியிலும் தலையிலும் திருவடி சாத்தியவண்ணம், சாமான் தட்டி விருந்த தகரப் பெட்டிகளை யெல்லாம் வீசித் தள்ளிவிட்டு, வேறு பெட்டிகளை அங்கே வைத்தார்கள். ஆனல், என் எதிரே இருந்த வீரப் பெண், சிறிதும் பின்வாங்கவில்லை. ஏன், முன்னேறிக் கொண்டுதான் இருந்தாள். கதவடிக்குப் போய்ச் சேர்ந்துவிட்டாள். இந்தச் சமயத்தில் யாரோ அவளைக் காலை வாரி விட்டுவிட்டார்கள். தன் படுக்கையும் தானுமாய்க் கட்டிப் புரண்டு கொண்டு, பிளாட்பாரத்திலே அவள் தலைகுப்புறப் போய் விழுந்தாள். இந்தச் சமயம் சிறிது சந்து கிடைத்தது. அந்தச் சந்திலே நான் 'டபக்' கென்று வெளியே குதித்துவிட்டேன்.

இப்படியாக நான் புனு வந்து சேர்ந்தேன்.

## ஜட்ஜும் வக்கீலும்

அமெரிக்காவின் பிரபல ஜட்ஜ் ஒருவர் மிகவும் குத்தலாகக் கேலி செய்வதில் வல்லவர். அவருக்கு ஒரு விருந்து நடந்தது. அங்கே ஒரு பிரபல வக்கீலை ஜட்ஜ் கேலி செய்ய விரும்பினர். தட்டில் வட்டித்திருந்த இரண்டு பன்றிக் காதுகளைத் தமது பரிசாக ஒரு சிப்பந்தி மூலம் அந்த வக்கீலுக்கு ஜட்ஜ் கொடுத்தனுப்பினர்.

அந்த ஜட்ஜின் கோர்ட்டிலே இந்த வக்கீலுக்கு ஒருநாளும் வெற்றி கிடைப்பதில்லை என்பது எல்லாருக்கும் தெரியும்.

பன்றிக்காதுகளை வக்கீல் மிக்க மரியாதையோடு வாங்கிக்கொண்டு, "ஜட்ஜ் அவர்களுக்கு என் வந்தனம். இது வரையில் எனக்கு அவர் காது கொடுத்ததில்லை; இப்போது கொடுத்து விட்டார்" என்ருர்.

—ஸால் எல். லிங்கர், 'லவ் அவ் திலர்'.

## துன்பத்தால் ஞானம் வருமா?

துன்பத்தின்மேல் துன்பம் வந்தால் மனிதர்கள் புத்திசாலிகளாகிவிடுவார்கள் என்று சொல்வது வழக்கம். ஆனல் அது தவறு. துன்பத்திலே பட்டுப் பட்டு மனிதர்கள் பெரும்பாலும் பலவீனர்களாகிருர்கள்; முட்டாள்களாகிருர்கள். இடைவிடாமல் துன்பங்களை அநுபவித்து வந்த ஒரு நாட்டிலுள்ள மக்கள் அந்த நாட்டுப் பெருந்தலைவர்களைக் கொலை செய்யுமளவுக்கு வெறியர்களாகிவிடுகிருர்கள்.

—எர்னஸ்ட் டோலர், 'மனேஹர்'.

# நமது அரசியல் நகல்

ரஞ்சன் கே. ஸோம்

நமது சுதந்தர அரசியல் திட்டத்தின் சாரம் இது. பம்பாய் 'பாரத ஜோதி'யில் வெளியான இந்த ரசமான கட்டுரையை 'இந்தியா டைஜெஸ்ட்' எடுத்துச் சுருக்கி வெளியிட்டிருக்கிறது.

இந்திய அரசியல் நிர்ணய சபை 1946-இல் அமைந்து வேலை செய்யத் தொடங்கியது.

நகல் அரசியல் திட்டத்தைத் தயாரிப்பதற்காக அமைந்த கமிட்டி உலகத்தின் பல வேறு நாடுகளின் அரசியல் அமைப்புகளை ஆராய்ந்தது; அவற்றின் அநுபவங்களைப் பயன்படுத்திக்கொண்டு, நமது அரசியல் அமைப்பு நகல் திட்டத்தைத் தயாரித்தது.

இந்தியாவின் மத்திய அரசியல் அமைப்பு, 'ஸ்டேட்ஸ்' என்ற பல சம்ஸ்தானங்களின் யூனியனாக இருக்கும். அந்தச் சம்ஸ்தானங்கள் மூன்று வகை: தற்போது கவர்னர் ஆட்சி செலுத்தும் மாகாணங்களைப் போன்றவை ஒருவகை; சீப் கமிஷனர்கள் ஆட்சி செலுத்தும் மாகாணங்களைப் போன்றவை இரண்டாவது வகை; சுதேச சம்ஸ்தானங்களைப் போன்றவை மூன்றாவது வகை.

யூனியனின் நிர்வாக அதிகாரம் (பிரஸிடெண்ட்) என்ற ராஷ்டிரபதியிடம் இருக்கும். அவரை 'எலெக்டொரல் காலேஜ்' என்ற ஒரு தேர்தல் கழகம் தேர்ந்தெடுக்கும். இந்திய யூனியன் பார்லிமெண்டின் இரு சபைகளின் அங்கத்தினர்களும், சம்ஸ்தானச் சட்டசபைகளில் தேர்தல் மூலம் ஸ்தானம் பெற்ற அங்கத்தினர்களும் மேலே கண்ட தேர்தல் கழகமாக அமைவார்கள். ராஷ்டிரபதி ஐந்து வருஷகாலம் பதவி வகிப்பார். ராஷ்டிரப்பதிப் பதவியை ஒரு முறை வகித்த ஒருவர் மறுபடியும் ஒரே ஒரு முறை மட்டுமே அதை வகிக்கத் தேர்தலில் போட்டி போடலாம்.

'வைஸ் பிரஸிடெண்ட்' என்ற ஓர் உதவி ராஷ்டிரபதி இந்திய யூனியனுக்கு உண்டு. இந்தியப் பார்லிமெண்டின் இரு சபை அங்கத்தினர்களும் கூட்டாக ஒரு கூட்டங் கூடி உதவி ராஷ்டிரபதியைத் தேர்ந்தெடுப்பார்கள். அவரும் ஐந்து வருஷ காலந்தான் பதவி வகிப்பார். 'கவுன்ஸில் அவ் ஸ்டேட்ஸ்' என்ற ராஜாங்க சபைக்கு அவர் தலைவராக இருப்பார். நாட்டிலே ராஷ்டிரபதி ஆஜரில்லாத போதும், ராஷ்டிரபதியின் ஸ்தானம் அகஸ்மாத்தாகக் காலி விழும்போதும், உதவி ராஷ்டிரபதியே தாற்காலிகமாக ராஷ்டிரபதி பதவியை வகிப்பார்.

பார்லிமெண்டு சபைகள் கூடியிராத காலத்தில் அவசர நடவடிக்கை எடுக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால், அவசரச் சட்டங்

மூலம்: இந்தியா டைஜெஸ்ட் (ஆங்கிலம்: ஜூலை '47).
9, கண்டோன்மெண்ட், அஹமதாபாது.

களைப் பிறப்பிக்க ராஷ்டிரபதிக்கு அதிகாரம் உண்டு. சாதாரணச் சட்டத்தைப் போலவே இந்த அவசரச் சட்டமும் அமலுக்கு வரும். ஆனால், பார்லிமெண்டின் இரு சபைகளும் கூடும்போது, அவற்றின் முன்பு இது சமர்ப்பிக்கப்படும். தவிர, மீண்டும் பார்லிமெண்ட் கூடிய ஆறுவார காலத்தில், இந்த அவசரச் சட்டம் தானே ரத்தாகிவிடும்; அல்லது அதற்கு முன்னதாகவே இதை நிராகரிப்பதாகப் பார்லிமெண்டின் இரு சபைகளும் தீர்மானங்கள் நிறைவேற்றினாலும் இது ரத்தாகிவிடும்.

ராஷ்டிரபதிக்கு உதவி புரியவும் ஆலோசனை கூறவும் ஒரு மந்திரி சபை இருக்கும். அதற்குத் தலைவராக ஒரு பிரதம மந்திரியை ராஷ்டிரபதி நியமிப்பார். பிரதம மந்திரி செய்யும் சிபார்சின் பேரில் மற்ற மந்திரிகளையும் ராஷ்டிரபதியே நியமிப்பார். ராஷ்டிரபதிக்கு இஷ்டமுள்ள வரையில்தான் மந்திரிகள் பதவி வகிப்பார்கள். 'ஹௌஸ் அவ் தி பீப்பிள்' என்ற ஜனசபைக்கு மந்திரிகள் கூட்டுப் பொறுப்பு உள்ளவர்கள்.

யூனியனுக்கு ஒரு பார்லிமெண்ட் இருக்கும். அது ராஷ்டிரபதியையும் இரண்டு சபைகளையும் கொண்டதாக இருக்கும்: ராஜாங்க சபை என்பது ஒன்று; ஜனசபை என்பது மற்றொன்று. ராஜாங்க சபையில் 250 அங்கத்தினர்கள் இருப்பார்கள். அவர்களில் 15 - பேரை ராஷ்டிரபதி நியமிப்பார். மற்றவர்களைப் பல சம்ஸ்தானச் சட்டசபைகளின் கீழ்ச் சபைகளும் தேர்ந்தெடுக்கும். ஜனசபையில் 500 - பேருக்கு மேற்படாமல் அங்கத்தினர்கள் இருப்பார்கள். பல சம்ஸ்தான ஓட்டர்களும் நேரே ஓட்செய்வதன் மூலம் அந்த




அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பல சம்ஸ்தானங்களிலும் வயது வந்த மக்கள் அனைவரும் இந்தத் தேர்தல்களில் ஓட்செய்ய உரிமை உண்டு.

ராஜாங்க சபை ஒருபோதும் கலையாது. அதன் அங்கத்தினர்களில் மூன்றில் ஒரு பகுதிக்கு இரண்டு வருஷத்துக்கு ஒரு தடவை தேர்தல் நடக்கும். ஜனசபை ஐந்து வருஷம் ஜீவித்திருக்கும். அதற்குள்ளாகவே அதைக் கலைத்துவிடவும் ராஷ்டிரபதிக்கு உரிமை உண்டு.

நிதி சம்பந்தமான மசோதா எதுவும் ராஜாங்க சபையில் பிரேரிக்கப்பட மாட்டாது.

சம்ஸ்தானங்களின் அரசியல் அமைப்பும் யூனியன் அரசியல் அமைப்பு மாதிரியே இருக்கும். சம்ஸ்தானங்களில் கவர்னரிடம் நிர்வாக அதிகாரம் இருக்கும். அவர் ஐந்து வருஷகாலம் பதவியில் இருப்பார். ஒன்று, வயதுவந்த சகல மக்களும் ஓட்டுச் செய்து கவர்னரைத் தேர்ந்தெடுப்பார்கள்;

அல்லது, அந்த அந்தச் சம்ஸ்தானச் சட்டசபை தேர்ந்தெடுக்கும் நாலு பேர்களில் ஒருவரைக் கவர்னராக ராஷ்டிரபதி நியமனம் செய்வார். மீண்டும் ஒரே முறை பதவி பெறத் தான் கவர்னரும் மறு தேர்தலில் போட்டி போடலாம்.

கவர்னருக்கு உதவிபுரியவும் ஆலோசனை சொல்லவும் முதல் மந்திரியும் மந்திரிசபையும் உண்டு. அவர்களைக் கவர்னர் நியமிப்பார். சட்டசபைக்கு மந்திரிகள் கூட்டுப் பொறுப்புள்ளவர்கள். ஒவ்வொரு சம்ஸ்தானத்துக்கும் கவர்னரும் ஒன்று அல்லது இரண்டு சபைகளும் அடங்கிய சட்டசபை உண்டு. நிதி சம்பந்தமான மசோதாக்கள் மேல் சபையில் பிரேரிக்கப்பட மாட்டா.

அமெரிக்க ஜனாதிபதியை விட இந்திய யூனியன் ராஷ்டிரபதி அதிகாரத்தில் குறைந்தவர் என்று தோன்றுகிறது. அமெரிக்க ஜனாதிபதிகளும் பிரிட்டிஷ் பிரதம மந்திரிகளும், சட்டப்படி எத்தனை தடவை வேண்டுமானாலும் மறுதேர்தலுக்கு நிற்கலாம். இந்திய யூனியன் ராஷ்டிரபதியோ ஒரே ஒரு முறைதான் மறுதேர்தலில் பதவி பெறலாம்.

அமெரிக்க ஜனாதிபதி தாமே தமக்குப் பிரதம மந்திரி. பிற மந்திரிகளைத் தம் இஷ்டப்படி தேர்ந்து அவர் நியமித்துக் கொள்ளுகிறார். ஜனாதிபதிக்கே அந்த மந்திரிகள் பொறுப்புள்ளவர்கள். ஆனால், பிரிட்டனில் பிரிட்டிஷ் மந்திரி சபைதான் உண்மையான அதிகாரம் உடையது. அது பார்லிமெண்டுக்குப் பொறுப்புள்ளது. இந்திய மந்திரி சபையார் ராஷ்டிரபதிக்கு ஆலோசனை சொல்லும் சபையாகவே செயல் புரிவர். ஆனால், அவர்களைப் பார்லிமெண்டிலிருந்தே தெரிந்தெடுப்பார்கள். பார்லிமெண்டுக்குத்தான் அவர்கள் பொறுப்புள்ளவர்கள். அமெரிக்க அரசியல் முறைக்கும் பிரிட்டிஷ் அரசியல் முறைக்கும் இடைப்பட்ட ஒரு சமரசமாகவே இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள்.

ராஷ்டிரபதிப் பதவியிலும் பிரதம மந்திரிப் பதவியிலும் யார் இருக்கிறார்களோ அவர்களுடைய சொந்த மனோபாவத்தைப் பொறுத்துத்தான் இந்த ஏற்பாடு வெற்றி பெறும். அவர்கள் இருவரும் மாறுபட்ட அபிப்பிராயங்கள் உடையவர்களாக இருந்தால், இருவருக்கும் இடையிலே ஓயாத தகராறுகளும் முடிவிலே முட்டுக்கட்டையும் ஏற்படும். பிரதம மந்திரி பலவீனமுள்ளவராக இருந்தால், அவர் ராஷ்டிரபதியின் நிழலாகிவிடுவார். சரளமாக அரசியல் நடைபெற வேண்டுமானால் பிரதம மந்திரியும் ராஷ்டிரபதியும், ஒருவருக்கொருவர் இணங்கிக் கொடுத்துக்கொண்டு வேலை செய்ய வேண்டும். இருவருக்கும் இடையிலே தகராறு வந்தால், பிற மந்திரிகளைத் தங்கள் தங்கள் கட்சிக்கு இழுக்க இருவரும் முயலுவார்கள். அப்போது அந்த மந்திரிகள் பாடு தான் சங்கடம்.

## அன்பு : பாலும் காடியும்

தாயின் அன்பிலே பசும்பாலிலுள்ள இனிமை இருக்கிறது; இளம் பெண்ணின் அன்பிலே திராட்சைக் காடியிலுள்ள வெறியூட்டும் தன்மை இருக்கிறது. ஒன்று, அறிவுக்கு ஆறுதல் அளிக்கிறது; மற்றொன்று, உள்ளத்தின் தவிப்பை வளர்க்கிறது.

—ஆசார்ய அத்ரே, 'மனோஹர்'.

# திருடர்கள் - ஜாக்கிரதை!

பி. கே. ஸேன்

போலீஸார் எத்தனையோ விதக் குற்றங்களைக் கண்டுபிடிக்கிறார்கள். அவற்றிலெல்லாம் மிகப் பழமையானது ஜனக் கும்பலுக்குள்ளே புகுந்து முடிச்சவிழ்க்கும் திருடனின் திருட்டுத்தான். இந்தத் திருட்டு ஏராளமாக நடக்கிறது. முடிச்சுமாறியும் கண்கட்டி வித்தையாடியும் உண்மையில் ஒரேவிதமான சாமர்த்தியம் உள்ளவர்கள் தாம். ஆனால், முடிச்சுமாறி தவறான வழியில் சென்றுவிட்டான். இதுதான் வித்தியாசம். திருடவும், திருடியபின் தப்பித்துக் கொள்ளவும் முடிச்சுமாறிக்கு அபாரமான லாகவம் இருக்க வேண்டும். தவிர, என்ன என்ன சந்தர்ப்பங்களில் மனிதர்கள் எப்படி எப்படி நடந்துகொள்ளுகிறார்கள் என்பதையும் அவன் நன்றாய் அறிந்திருக்கவேண்டும்.

**'திருடர்கள் - ஜாக்கிரதை!' என்ற ரெயில் வண்டிகளில் இருக்கும் அறிக்கை நம்மை எச்சரிக்கிறதா, திருடர்களை எச்சரிக்கிறதா என்று சிலர் சந்தேகிப்பதுண்டு. ஆனால், இந்தக் கட்டுரை நம்மையே எச்சரிக்கிறது. கட்டுரையாளர் கல்கத்தா போலீஸ் டெபுடி கமிஷனர்; பல திருடர்களைப் பிடித்து அநுபவம் பெற்றவர்.**

பிற குற்றங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் கூட்டத்தில் முடிச்சுமாறும் திருட்டு, முறையிலும் மாதிரியிலும் முன்னேற்பாட்டிலும் இப்போது வெகுவாய் முன்னேறி விட்டது என்று சொல்லலாம். பட்டணங்களில் இந்தத் திருட்டு அதிகமாயிருப்பதற்குக் காரணம்: முதலாவது, விரைவில் பணம் சம்பாதிக்கச் சுலபமான வழி இதுதான்




ஒருவராய்த் திருடுவதில்லை; பலர் சேர்ந்தே திருடுகிறார்கள்.

காப்பிரைட்: அமிர்த பஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 4-7-'48), கல்கத்தா.

என்ற ஆசை; இரண்டாவது, இப்படித் திருடித் திருடித்தான் பெரிய திருடனாவதற்குப் பழக முடியும் என்ற எண்ணம். லாபம் கைமேல் கிடைத்துவிடுகிறது; அபாயமோ மிகக் குறைவு. கையும் களவுமாய் அகப்பட்டுக்கொண்டால்கூட இரண்டொரு மாதம் ஜெயிலில் போடுவார்கள்; அவ்வளவுதான். ஜெயிலுக்குப் போய்ப் பழக்கமான பேர்வழிகள் இந்தத் தண்டனையை லட்சியம் செய்யமாட்டார்கள். திருடிய பொருள் கையில் இல்லாதவனைச் சந்தேகத்தின் பேரில் பிடித்தாலோ, அவனுடைய குற்றத்தை ருசுச் செய்ய முடியாமல் போலீசார் விழிக்க வேண்டியதுதான்.

இந்த முடிச்சுமாறிகள் எப்படியெல்லாம் திருடுகிறார்கள் என்பதைச் சுருக்கமாகக் கூறிவிட்டு, இவர்களின் கையில் அகப்படாமல் ஜனங்கள் ஜாக்கிரதையாக இருப்பதற்கு என்ன வழிகள் என்பதையும் இங்கே கூறுகிறேன். சாதாரணமாக, 'ஜேஜே' என்று ஜன நடமாட்டம் மிகுந்த பெரிய வீதிகளிலும் கும்பல் கூடியுள்ள இடங்களிலுந்தான் முடிச்சுமாறிகள் சௌகரியமாய்த் திருடுவார்கள். நமது கவனக் குறைவே அவர்களுக்குப் பெரிய லாபமாகிறது. வீதியில் ஒருவரையொருவர் இடித்துத் தள்ளிக்கொண்டு செல்லும் கூட்டத்திலோ, கும்பல் நிறைந்த டிராம், பஸ் முதலியவற்றிலோ நீங்கள் இருக்கும்போது, அலுப்பிலும் சொந்த நினைவுகளிலும் முழுகிவிடுவதால் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி அதிகமாகக் கவனிக்கமாட்டீர்கள். நீங்கள் போகவேண்டிய இடத்துக்குச் சீக்கிரம் போய்ச் சேர்ந்தால் போதும் என்று இருக்கும் உங்களுக்கு. அப்போதெல்லாம் பக்கத்திலிருக்கும் முடிச்சுமாறிகள் உங்களைக் கவனித்துக்கொண்டே இருப்பார்கள். யாரைக் குறிவைக்கலாம் என்பது அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். நீங்கள் பத்தடி செல்லுவதற்குள் உங்கள் பணப்பை உங்களை விட்டு ஓடி மறைந்துவிடும்.



மூன்று விரல்களையே முடிச்சுமாறிகள் உபயோகிக்கிறார்கள்.

கட்டைவிரல், நடுவிரல், மோதிரவிரல் இந்த மூன்று விரல்களைக் கொண்டே சாதாரணமாக முடிச்சுமாறிகள் தங்கள் வேலையை முடித்துக்கொள்வார்கள். எப்படியாவது உங்கள் கவனத்தை மாற்றுவதுதான் அவர்களுடைய முதல் வேலை. இதற்கு அவர்கள் பின் வரும் முறைகளைக் கையாளுகிறார்கள்.

1. நீங்கள் காலிடறி விழச்செய்து திருடுவது.
2. உங்கள் காலை மிதித்துத் திருடுவது.
3. உங்களை இடித்துத் தள்ளித் திருடுவது.
4. உங்கள் தொப்பி அல்லது குல்லாயைத் தட்டிவிட்டுத் திருடுவது.
5. உங்களைக் குண்டூசியால் குத்தித் திருடுவது.
6. முழங்கையால் உங்களை நெட்டித் தள்ளித் திருடுவது.
7. உங்கள் மூக்குக் கண்ணாடியைத் தட்டிவிட்டுத் திருடுவது.

8. குடை நுனியால் உங்களைக் குத்திவிட்டுத் திருடுவது.

9. உங்களை மோதிக் கீழே தள்ளித் திருடுவது.

இந்தமாதிரி இன்னும் எவ்வளவோ வழிகளை அவர்கள் கையாளுகிறார்கள். ஆனால், கூட்டம் நிறைந்துள்ள டிராம்களிலும் பஸ்களிலும் பெரும்பாலும் மேற்கண்ட முறைகளே கையாளப்படுகின்றன.

ஆபீஸைவிட்டு வெளிவந்த நீங்கள், ஜனங்கள் நிறைந்த ஒரு பஸ்ஸில் ஏறிக்கொண்டு வீட்டுக்குத் திரும்புகிறீர்கள். பஸ்ஸில் இரு பக்கமும் வரிசையாக ஏற்கனவே ஜனங்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். முன்புறம், பின்புறம், பக்கம் எல்லா இடங்களிலும் சுவரெடுத்தாற்போல் ஜனங்கள் அசையாமல் உட்கார்ந்திருக்கும்போது, எப்படியோ கஷ்டப்பட்டு நீங்களும் உள்ளே நுழைந்துவிடுகிறீர்கள். பஸ்ஸில் உள்ளவர்களை ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டுப் பஸ் கிளம்புகிறது. அந்தச் சமயத்தில் யாரோ உங்கள் பின்புறம் வந்து மோதுகிறார்கள்; உங்கள் கால் வழுக்குகிறது. அல்லது யாரோ உங்கள் காலை நன்றாய் மிதித்து விடுகிறார்கள்; நீங்கள் நிதானம் தவறி வேறு யார்மீதோ மோதிக்கொண்டு ஆடிவிழப் பார்க்கிறீர்கள். நிலைமையைச் சமாளித்துக்கொண்டு நிமிர்ந்து வெகு கோபத்துடன், பின்னால் இருப்பவருடன் நீங்கள் தர்க்கம் செய்யக் கிளம்புகிறீர்கள். இந்த வேளை பார்த்து உங்கள் பணப்பை வெளியே கிளம்பி விடுகிறது. உங்கள் பக்கத்திலே கண்ணியமாய் உடுப்பு அணிந்து நிற்கும் மனிதர் தாம் அதை லாகவமாய் எடுத்து மற்றோர் ஆசாமியின் கைக்கு மாற்றி விட்டவர். பணப்பையைப் பெற்ற



பணப்பை பறந்து போயிற்று.

ஆசாமி அங்கேயிருந்து வெகு வேகமாக முன்பே நழுவிவிட்டான். பணப்பை போனதை நீங்கள் அறிந்து கொள்வதற்கு முன்பே, அது வெகு தூரம் காற்றாய்ப் பறந்துவிட்டது. உங்களுக்குப் பின்னால் இருப்பவரையோ பக்கத்தில் இருப்பவரையோ நீங்கள் சந்தேகிக்கிறீர்கள். நீங்கள் தைரியசாலியானால் அவர்களைச் சோதித்தும் பார்க்கிறீர்கள். ஆனால் இதனால் எல்லாம் ஒன்றும் லாபமில்லை. நீங்கள் அவர்களைத் திட்டுவது போக அவர்கள் உங்களையே திருப்பிக் கொள்கிறார்கள். இந்தமாதிரி திருட்டை ஓர் ஆசாமி தனியாகச் செய்ய முடியாது. குறைந்தது மூன்று பேர்களாவது இதற்கு வேண்டும்.

இந்தத் திருட்டுகள் பெரும்பாலும் காலை 9 மணியிலிருந்து 11 மணி வரையிலும், மாலை 4-30 மணியிலிருந்து 6 மணிவரையிலுந்தான் நடைபெறும். இந்த வேளைகளில் தானே உத்தியோகஸ்தர்கள் ஆபீசுக்குப் போய் வருகிறார்கள்?

இத்தகைய திருட்டுகள் நடக்கத்தான் நடக்கும், நாம்தான் ஜாக்கி

ரதையாக இருக்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை. இருந்தாலும் நாமும் கொஞ்சம் உஷாராக இருப்பதில் ஒரு பிசகும் இல்லை அல்லவா? ஆயினும் அதற்காக எடுத்ததற்கெல்லாம் ஒரேயடியாகச் சந்தேகப்படுவதும் கூடாது. ஜாக்கிரதையாக மட்டும் இருக்கவேண்டும். இப்படி எல்லாரும் ஜாக்கிரதையாக இருந்தால், இந்தத் திருட்டுகள் குறையும்; சமூகத்துக்கும் நன்மை ஏற்படும். நாம் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பணத்தை எவனோ அடித்துக்கொண்டு போக விடவாவது? நம் அஜாக்கிரதையைக் கண்டே திருடர்கள் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ளுகிறார்கள். ஆகவே, நாம் தினசரி வெளியே போய்வரும்போது ஏதோ நினைவாக இராமல் எப்போதும் கவனமாகவும் ஜாக்கிரதையாகவும் இருக்கவேண்டியது அவசியம்.

### விசித்திர உண்மைகள்

கடலில் இடிமுழக்கம் ஒருபோதும் கேட்பதில்லை.

மனிதன் உணவுண்ட பிறகு இருப்பதைவிடப் பட்டினி கிடக்கும்போதே அதிக நிறை இருக்கிறான்.

வானத்திலே பறக்கும் விமானியின் கண்ணுக்கு, வானவில் முழு வட்டமாகத் தெரியும்.

—'ஸ்டிராண்டு', லண்டன்.

## எது சரி?

1. **திருக்களிற்றுப்படியார்:** (அ) ஒரு சாதியினர், (ஆ) யானைகள் ஏறும்படி படிகளைக் கட்டுபவர், (இ) ஒரு சைவசித்தாந்த நூல், (ஈ) யானை இலக்கணம் தெரியாதவர்.

2. **சம்பாபதி:** (அ) ராஜபுத்திர அரசருள் ஒருவன், (ஆ) நாவலந்தீவின் அதிதேவதை, (இ) சோழ நாட்டிலுள்ள ஓர் ஊர், (ஈ) ஒரு மருந்து.

3. **அரிசில்:** (அ) ஒரு வகைக் கனிப்பொருள், (ஆ) சோழநாட்டு நதிகளுள் ஒன்று, (இ) ஒரு பணியாரம், (ஈ) அரிசி வைத்திருக்கும் இடம்.

4. **ஆதுளி:** (அ) சிறுபறை, (ஆ) கல்லைச்செதுக்கும் உளி, (இ) ஒரு விலங்கு, (ஈ) ஒரு மரம்.

5. **சித்தன் வாழ்வு:** (அ) ஒரு பழைய நூல், (ஆ) பொதியில் மலையிலுள்ள ஒரு குகை, (இ) சித்தர்கள் வாழும் இடம், (ஈ) பழநி.

6. **படுமலைப்பாலை:** (அ) தமிழ் நாட்டில் இருந்து கடலில் மறைந்த ஒரு பாலைவனம், (ஆ) பாலைமர வகை, (இ) இளம் பெண், (ஈ) ஒரு பண்.

### இதுதான் சரி

1. இ 2. ஆ 3. ஆ
4. ஆ 5. ஈ 6. ஈ

# வீரனின் துறவு

மகாகவி பாணபட்டர்

> வீரன் துறவு பூண்டாலும், அவன் வீரம் மங்குமா? சிங்கம் சாதுவானாலும் பசியிலே அதன் உக்கிரம் பொங்கி விடும். அது போலத்தான் வீரனின் துறவு. உன்னத சம்ஸ்கிருத கவியாகிய பாண பட்டரின் 'ஹர்ஷ சரித'த்தில் உள்ள இந்தக் காட்சி அத்தகைய ஒரு வீரனின் துறவைச் சித்திரிக்கிறது.

சக்கரவர்த்தி பிரபாகரவர்த்தனன் இறந்தான். அப்போது அவனுடைய இளைய மகன் ஹர்ஷன் மட்டுமே ராஜ்யத்தில் இருந்தான். மூத்த மகன் ராஜ்யவர்த்தனன் திக்விஜயத்துக்காகப் போயிருந்தான். அரசன் இறந்த சமாசாரம் தெரிந்து அவன் வீடு திரும்பிவரப் பதினைந்து நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது. வந்ததும் ஒரு நாள் அண்ணனும் தம்பியும் வருத்தத்தில் மூழ்கி மௌனமாக இருந்தார்கள். உணவைக்கூட மிகவும் கஷ்டத்துடன் உண்டார்கள். மறுநாள் அரசர்கள் சூழச் சபையிலிருக்கும் போது, ராஜ்யவர்த்தனன் ஹர்ஷனைப் பார்த்து மிகுந்த வருத்தத்துடன் சொல்லத் தொடங்கினான்:

"தம்பி, நீ முதியோரின் உபதேசத்தைப் பெற்றவன். இளம் வயதிலேயே குணசாலி என்ற புகழ் அடைந்தவன். நம் தந்தையின் மனத்தையும் கவர்ந்துவிட்டாய். நான் சொல்வதை நீ கேட்பாய் என்ற நம்பிக்கையினால் என் மனம் உன்னிடம் ஏதோ சொல்லத் துணிகிறது. விஷயம் அறியாதவனைப் போல், என் விருப்பத்துக்கு இடையூறு செய்யாதே. நீ உலகம் தெரியாதவன் அல்ல.

"மூவுலகத்தையும் காக்கும் புஜபலம் கொண்ட மாந்தாதா இறந்தபோது புருகுத்ஸன் என்ன செய்தான்? புருவத்தை அசைத்தே பதினெட்டுத் தீவுகளையும் ஆண்டு வந்த திலீபன் இறந்தபோது, ரகு என்ன செய்தான்? அசுரரை ஜயித்துத் தேவருக்கும் உதவிய தசரத மகாராஜன் இறந்தபோது ராமன்தான் என்ன செய்தான்? குளம்படிபோல் குவலயமனைத்தையும் ஆண்ட துஷ்யந்தன் இறந்தபோது, பரதன் என்ன செய்தான்? இவர்கள் எல்லாம் போகட்டும். நம் பாட்டன் இறந்தபோது, நம் தந்தைதாம் என்ன செய்தார்? ராஜ்யத்தை ஏற்கவில்லையா? எல்லோருமே ராஜ்யத்தை ஏற்று ஆண்டார்கள்.

"துயரத்துக்கு ஆட்பட்டவனை அற்பன் என்று பெரியோர் கூறுவர். வருந்துபவன் பேடி. என்றாலும் நான் என்ன செய்வேன்? தந்தையின் பிரிவால் துயரம் என்னும் தீ என்னைத் தகிக்கிறது. அருவி போல் என் கண் நீர் பெருக்குகிறது.

என்னிடம் அறிவென்னும் விளக்கு மங்கிவிட்டது. உள்ளம் பற்றி எரிகிறது. தைரியம் அரக்கைப்போல் உருகிக் கரைந்துவிட்டது. விஷம் தோய்ந்த அம்பு பாய்ந்த பெண் மான்போல் என் மதி மயங்குகிறது. தாயைப் போல் தந்தையைத் தொடர்ந்து சென்றுவிட்டது என் நம்பிக்கை. வட்டிக்குக் கொடுத்த பணம்போல் நாளுக்கு நாள் துக்கம் மட்டும் வளர்ந்துகொண்டே வருகிறது. துயரம் என்னை வாடவாக்னி போல் வாட்டுகிறது; மலையைப் பிளக்கும் இடிபோல் பிளக்கிறது; சந்திரனைக் குறைக்கும் க்ஷயம்போல் தேய்க்கிறது; சூரியனைப் பிடித்த ராகு போல் விழுங்குகிறது. மலைபோன்ற அந்த மகானின் பிரிவால் உண்டான என் துக்கத்தை வெறும் கண்ணீரை உதிர்த்து நான் குறைக்க விரும்பவில்லை. என் மனம் ராஜ்யத்தை விஷம்போல் வெறுக்கிறது. தீப்பிடித்த இடத்தில் சிக்கிய கிளியைப்போல் இந்த ராஜ்யத்தில் என்னால் இருக்க முடியாது. நான் வனத்திலே ஆசிரமங்களுக்குச் சென்று, மலை அருவியில் என் துணி அழுக்கைக் கழுவுவதுபோல் என் மன அழுக்கையும் கழுவ விரும்புகிறேன். தனக்குப் பிடிக்காவிட்டாலும் பூரு தன் தகப்பனின் முதுமையை வாங்கிக்கொள்ளவில்லையா? நீயும் உன் குழந்தை விளையாட்டை யெல்லாம் விட்டு நான் தரும் ராஜ்ய லக்ஷ்மியை அணைந்துகொள். ராஜ்யத்தைக் கட்டியாளும் ஆயுதங்களை இதோ நான் எறிந்துவிட்டேன்'' என்று கூறிக்கொண்டே ராஜ்யவர்த்தனன் தன் உடைவாளைத் தரையில் எறிந்தான்.

இதைக் கேட்ட ஹர்ஷன் கூரிய சூலம் குத்தி இருதயம் பிளவு பட்டவனைப் போல யோசிக்கலானான்: "எவனாவது பொறாமைக்காரன் என்னைப்பற்றி அண்ணாவிடம் என்னவாவது சொல்லிவிட்டானோ? அல்லது அண்ணா தாமாகவே என்னை இந்த முறையில் சோதிக்கிறாரோ? சோகம் கொண்ட அவருடைய மனசு ஒருவேளை நிலை தவறிவிட்டதோ? அண்ணா ஒன்று சொல்ல அதை வேறொன்றாக என் காதுதான் பிழைபடக் கேட்டுவிட்டதோ? அல்லது அவரே ஒன்றை நினைத்து மற்றொன்றைச் சொல்லிவிட்டாரோ? இல்லாவிட்டால் அவர் ஒரு சாதாரண மனிதனைப் போல் என்னிடம் இப்படிப் பேசுவாரா?

"நான் புஷ்பபூதியின் வம்சத்தில் பிறக்கவில்லையா? இவருக்குத் தம்பியல்லவா? இவரிடம் எனக்குப் பக்திதான் குறைவா? அப்படி இருக்க, வேதமோதியவனைக் கள் குடிக்கத் தூண்டுவதுபோலும், விசுவாசமுள்ள வேலைக்காரனை எஜமானத் துரோகஞ்செய்யச்சொல்லுவது போலும், குணவானைத் தூர்த்தனுக்குத் தொண்டு செய்யச் சொல்லுவது போலும், பதிவிரதையைப் பரபுருஷனிடம் தள்ளுவது போலும், இவர் என்னை இந்தக் கொடிய காரியத்தைச் செய்ய வற்புறுத்துகிறாரே!

"தோள் வலியால் பகைவர் கூட்டம் என்ற கடலைக் கடைந்து புகழ்பெற்ற தந்தை இறந்ததால் கானகம் செல்கிறேன், மரவுரி உடுக்கிறேன், தவம் புரிகிறேன் என்றெல்லாம் இவர் சொல்வது சரிதான். ஆனால் என்னை ராஜ்யம் ஏற்க இவர் தூண்டுவது எப்படிச் சரியாகும்? இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலும், மழை

யின்றி வறண்ட மண்ணில் அனல் சொரிவது போலுந்தான் இருக்கிறது. அண்ணுவுக்கு இது அழகல்ல.

"கர்வமற்ற பிரபுவும், ஆசையற்ற அந்தணனும், கோபமற்ற முனிவனும், போட்டியற்ற புலவனும், திருடாத வியாபாரியும், கபடமற்று அன்பு செலுத்தும் கணவனும், ஏழைமையற்ற உத்தமனும், பொல்லாங்கு ஒழிந்த பணக்காரனும், ஹிம்சை புரியாத வேடனும், சுகமுள்ள சேவகனும், நன்றியுள்ள சூதாடியும், உண்மை பேசும் மந்திரியும், அடக்கமுள்ள அரசகுமாரனும் உலகத்தில் கிடைப்பது அருமைதான். ஆனுலும் நான் அண்ணுவைக் குருவாக வழிபடுபவன் ஆயிற்றே?

"உத்தமத் தந்தை இறந்து தமையனும் காட்டுக்குச் சென்றபின்பு மக்களின் கண்ணீர் விழுந்து களங்கமுறும் மண்கட்டியான இந்த ராஜ்யத்தைக் கையால் யார் தொடப்போகிருர்? ராஜ்யலக்ஷ்மி தோள் வலிகொண்ட போர்வீரனின் வீட்டில் வேலை செய்யும் அடிமையல்லவா?

"லக்ஷ்மணன், பீமன் முதலியவரை அண்ணு மறந்துவிட்டாரா? இதுவரையில் அண்ணுவின் அதிகாரம், தன்னிடம் பக்திகொண்ட ஊழியரைக் கவனியாமல், தன் நலத்தைமட்டும் ஈடேற்றிக்கொள்ளும் வழியில் செல்லவில்லை. அண்ணு காட்டுக்குச் சென்றபிறகு இந்தப் பூமியை யார் நினைக்கப்போகிருர்? சிங்கம் காட்டைச் சுற்றிவர வெளிக்கிளம்பினுல், அந்தக் குகையில் தாம் நுழைய யாருக்குத் தைரியம் வரும்? இவர் இந்த ராஜ்யலக்ஷ்மியையும் தம்மோடு காட்டுக்கு அழைத்துச் செல்லட்டுமே. இதை எல்லாம் பற்றி நான் யோசிக்கவேண்டிய அவசியமில்லை; பேசாமல் அண்ணுவைப் பின்பற்றி நானும் காட்டுக்குச் சென்றுவிடுகிறேன். அண்ணன் சொல்லை மீறிய பாவத்தைத் தபோவனத்தில் நான் செய்யப்போகும் தவமே போக்கிக்கொள்ளும்."

இப்படித் தீர்மானித்துக் கொண்டு, மனத்தால் தன் தமையனுக்கு முன்பே தபோவனம் சென்றவனுகத் தலைகுனிந்து ஹர்ஷன் மௌனமாக நின்றுன்.

மரவுரி தயாராகிவிட்டது. என்ன செய்வதென்று சபையோரெல்லாம் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிருர்கள். இச்சமயம் ஓர் ஒற்றன் கதறிக்கொண்டே உள்ளே ஓடிவந்தான். அப்போது ராஜ்யவர்த்தனன் திகைப்புற்று, 'இந்தத் துயரத்தைவிட இன்னும் பெரிய துயரம் வேறு என்ன இருக்க முடியும்?' என்று எண்ணியவனுய், "என்ன நடந்தது?" என்று அந்த ஒற்றனை விசாரித்தான்.

"சக்கரவர்த்தி இறந்தார் என்று கேள்விப்பட்ட துஷ்டமாளவ மன்னன் நம்மீது படையெடுத்து வருகிருன்" என்று ஒற்றன் தெரிவித்தான்.

உடனே ராஜ்யவர்த்தனன் மகா கோபம் கொண்டான். "இந்தப் பெருங்கோபத்திலே என் தாபம் போய்விட்டது. தம்பி, இந்த மன்னர்களும் யானைகளும் புடைசூழ நீ இங்கேயே இரு. இந்த மகா துஷ்டனை நான் அடக்கித் தீருவேன். இதுவே என் துறவு, இதுவே என் தவம், என் சோகம் தீரும் வழியும் இதுதான்" என்று கூறி, யுத்தத்துக்குப் புறப்பட்டுவிட்டான். வேறு வழியில்லாமல் ராஜ்யத்தைத் தம்பி ஹர்ஷன் ஏற்றுக்கொண்டான்.

**பதினாயிரம் மைலுக்கு அப்பால் ஒரு ஹிந்து ராஜ்யம் இருந்தது. அதை ஸ்பானியர்கள் வந்து சூழ்ச்சியால் அழித்தார்கள். ஆனால், அது இருந்த அடையாளங்கள் அழியவில்லை.**

# அமெரிக்காவில் ஹிந்து நாகரிகம்

**சமன்லால்**

கிரீஸ், எகிப்து, ஸிரியா, இந்தோனேஷியா, அமெரிக்கா முதலிய இடங்களுக்குப் பழங் காலத்தில் ஹிந்துக்கள் சென்று வாழ்ந்தார்கள். நான்கு என்ற எண் ஹிந்துக்களுக்குப் புனிதமான எண். கிரீஸ் முதலிய நாடுகளில் பல விஷயங்கள் நான்கு நான்காக இருந்தன. அமெரிக்காவில் உள்ள பெரு என்ற ராஜ்யத்தில் வாழ்ந்த இன்கா மன்னர்களின் தலைநகரம் குஸ்கோ. அது பெரிய சதுர வடிவில் அமைந்திருந்தது. நகரத்தின் இடையே ஒரு பொற் கும்பம் இருந்தது. அதன் வழியே ஊற்று ஜலம் பொங்கி வழிந்தது. இன்கா ராஜ்யம் முழுவதும் நான்கு பகுதிகளாகப் பிரிந்திருந்தது. ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகுப்பினர் வாழ்ந்துவந்தார்கள். அந்த அந்தச் சாதியினர் தங்களுக்கென்று வரையறுக்கப்பட்ட இடங்களில் வசித்துவந்தார்கள். தங்கள் முன்னோர்களின் பழக்க வழக்கங்களை அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு ஜாதிக்கும் தனித்தனியாகத் தலைமயிரை முடிக்கும் முறை இருந்தது. ஒவ்வொரு வகையினரும் தாங்கள் வசிக்கும் இடத்திலேயே நிரந்தரமாக இருக்கவேண்டும்.

இன்காக்கள் தமக்கென்று அமைந்த ஒரு பாஷையில் பேசினார்கள். அது ஸம்ஸ்கிருதத்தின் திரிபாக இருக்கவேண்டும்.

ஸ்பானியர்கள் பழங்காலத்தில் தென் அமெரிக்காவின் மேல்கரையிலே வந்து இறங்கினார்கள். அப்போது அந்த நாடு முழுவதும், சிறந்த நாகரிகம் படைத்த ஜனங்கள் வாழ்ந்துவந்தனர். இன்கா என்று வழங்கிய அரசன் அவர்களை ஆட்சி புரிந்தான். அவன் இயற்பெயர் அடாஹு-ஆல்பா என்பது. சில காலத்துக்கு முன்புதான் அவன் தன் சகோதரனோடு போர் செய்து வென்று அவனையும் சிறைப்படுத்தி



மெக்ஸிகோவில் உள்ள கோயில் சிற்பங்களுக்கு இந்திய முண்டாசும் கடுக்கன்களும் இருக்கின்றன.

காப்பிரைட்: மாடர்ன் ரெவ்யு (ஆங்கிலம்: ஏப்ரல் '48),
120/2, அப்பர் ஸர்க்குலர் ரோட், கல்கத்தா.

பிருந்தான். அந்த ராஜ்யத்தை ஆண்ட இன்கா அரசர்களுக்குள் அவன் பதின்மூன்ரும் தலைமுறையைச் சேர்ந்தவன். மான்கோ கபக் என்பவனே முதல் அரசன். அந்த அரசர்கள் சூரியகுலத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டார்கள். குஸ்கோ என்று இப்போது வழங்கும் இடத்தில் அவர்கள் தங்கள் தலைநகரை அமைத்துக்கொண்டார்கள். அவர்கள் ராஜ்யம் தெற்கும் வடக்குமாக 3000 மைல் நீளம் பரவியிருந்தது. பன்னிரண்டு லட்சம் சதுர மைல் பரப்புடையது. ஜனத்தொகை இரண்டு கோடிக்கு மேல் இருந்தது. ஐரோப்பியர் ஆக்கிரமிப்பதற்கு முன்னுல் பல நூற்ருண்டுகள் இன்கா வம்சத்தினர் மிக உன்னதமான நிலையில் வாழ்ந்துவந்தார்கள். ஸ்பானியப் பாதிரிகள் பலர் இன்காக்களுடைய பழக்கவழக்கங்கள், சமய ஆசாரங்கள், ஆட்சிமுறை முதலியவற்றைப் பற்றி நிரம்ப எழுதியிருக்கிருர்கள்.

மிகவும் சுவாரசியமான விஷயம்: அந்தப் பழங்காலத்தில் பொதுவுடைமைக் கொள்கை - கம்யூனிசம் - அவர்களிடத்தில் பரவியிருந்தது. தனி மனிதனின் நன்மை தீமை, வாழ்க்கை, செயல் எல்லாம் சமூதாய நன்மைக்கு உட்பட்டவைகளே. கடமைகள், பதவி, வீட்டு வாழ்க்கை, கல்யாணம், குழந்தைகளின் நிலை, வாழ்க்கை முறைகள் எல்லாவற்றைப் பற்றியும் வரையறையான சட்டங்கள் இருந்தன. சமுதாயம் என்னும் ஒரு பிண்டத்தில் தனி மனிதன் ஓர் அம்சமாகவே வாழ்ந்தான். பிறக்கும்போதே ஆணுக்கும் பெண்ணுக்கும் இப்படி வாழவேண்டுமென்ற நியதி உண்டு. எந்தக் குழந்தையாளுலும் ஐந்து வயதாகிவிட்டால்



அமெரிக்காவில் கணேசர்.

அரசாங்கம் அதை எடுத்துக்கொள்ளும்; கல்வியோ காரியமோ ஏதாஞலும் அதன் பொறுப்பில் இருக்கும். குழந்தை வளர்ந்து முன்னுக்கு வந்து உத்தியோகம் பார்க்கும் விஷயமெல்லாம் அரசாங்கத்தின் கவனிப்பில் இருக்கும். ஆணுக்கு இருபத்துநாலு வயதாகிவிட்டால் உடனே கல்யாணம் செய்துகொள்வது அவசியம்; பெண்கள் பதினெட்டு வயதுக்குள் செய்துகொள்ளவேண்டும்.

குஸ்கோ நகரத்தில் மிகவும் அற்புதமான கோயில் ஒன்று இருந்தது. அதைப் பிறகு சர்ச்சாக மாற்றிவிட்டார்கள்! அந்தப் பழங் கோயிலில் சூரியவழிபாடு நடந்து வந்தது. மிகவும் சிறந்த சிற்பக் கலைத் திறமையைக் காட்டுவது அக்கோயில். அது பிரம்மாண்டமான கற்களால் அமைக்கப்பெற்றிருந்தது. உட்புறத்தில் எல்லாக் கற்களும் கணக்காகப் பொருத்தப் பெற்றிருந்தன. இக்காலத்து எஞ்சினீர் யாரும் அதைக்காட்டிலும் திறமையாகக் கணக்குப்போட்டுப் பொருத்த முடியாது. சுவர்களின் உள்ளும்

புறம்பும் ஆணிப்பொன்னாற் செய்த தகடுகள் அணிசெய்தன. பொன்னாலும் வெள்ளியாலும் மலர்மரமும் பூங்காவும் அமைந்திருந்தன. இலையும் தளிரும், பறவையும் விலங்கும், பொய்கையும் பொழிலும் எல்லாம் வெள்ளியாலும் பொன்னாலும் அமைந்திருந்தன.

கோயிலுக்குள் தகதகவென்று பளபளக்கும் பெரிய பொன்னாலாகிய வட்டவடிவில் சூரியனுடைய உருவம் ஒளிர்ந்தது. பல வகை அணிகள் நிரம்பிய உருவம் அது. அதன் எதிரே நல்ல வெள்ளியால் அமைந்த சந்திரன் உருவம் இருந்தது. சுற்றிலும் பொன்னாலும் வெள்ளியாலும் அமைந்து சுடர்விடும் நட்சத்திர உருவங்கள் திகழ்ந்தன.

சூரியனுடைய உருவத்துக்குக் கீழே இன்காவம்ச மன்னர்களுடைய 'மம்மி'கள் வைக்கப்பெற்றிருந்தன. அந்த 'மம்மி'களுக்கு ஆடையாபரணங்களை அணிந்திருந்தார்கள். 'மம்மி'களின் தலையில் கிரீடங்கள் இருந்தன. சந்திரனின் உருவத்துக்குக் கீழே ராணிகளுடைய 'மம்மி'கள் ஆடையணிகளுடன் இருந்தன. பாத்திரங்களும் நகைகளும் அபரிமிதமாக அங்கே குவிந்து கிடந்தன.

ஸ்பானியர் வந்தார்கள்; கொள்ளைக்கும் கொலைக்கும் அஞ்சாத அவர்கள்கூட இந்தத் திருக்கோவிலுக்குள் நுழைந்தவுடன் இங்குள்ள பண்டங்களைக் கண்டு பிரமித்துப் போனார்கள். தங்கள் கண்களையே அவர்கள் நம்பவில்லை. கனவிலும் காணாத அணிகளும் ஆடைகளும் செல்வமும் குவிந்து கிடந்தன. அவர்கள் அவற்றைப் பார்த்துப் பாராட்டவா வந்தார்கள்? சூறைத்துக் கொள்ளை கொள்ளவல்லவா வந்தார்கள்? கடவுள் உருவங்களைச் சிதைத்தார்கள்; அரசருடைய 'மம்மி'களை வீழ்த்தி மிதித்தார்கள்; கிழித்து எறிந்தார்கள். பூஜைக்குரிய பாத்திரங்களை உடைத்துத் தூளாக்கினர். நுண்ணிய சித்திர ஆடைகளைக் கிழித்துச் சின்னபின்னமாக்கினர். கத்தியாலும் ஈட்டியாலும் சால்வைகளையும் துப்பட்டாக்களையும் கிழித்துக் கொள்ளையிட்ட பண்டங்களை மூட்டையாகக் கட்ட உபயோகப்படுத்தினர். அங்குள்ள அழகைக் காணவில்லை; சிற்பத்தைப் போற்றவில்லை; கலைத்திறத்தை மதிக்கவில்லை. எல்லாப் பொருள்களையும் சிதைத்து உருக்கித் தங்கப்பாளமாகவும் வெள்ளிக் கட்டிகளாகவும் ஆக்கிக்கொண்டனர். இன்கா ராஜ்யம் முழுவதும் ஸ்பானியரின் கைப்பட்டுக் குலைந்து அழகிழந்து சூன்யமாயிற்று.

ஸ்பானியர்கள் இன்கா அரசனாகிய அடாஹுவால்பாவை மிகக் கொடுமையாகக் கொன்றனர். அந்த அரசன் அவர்களை வரவேற்று உபசரித்தவன். ஸ்பானியத் தலைவன் பிஸாரோ பெருவில் இறங்கியது முதல் அந்நாட்டு மக்களும் அவனுக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்தார்கள். ஆனால் ஸ்பானியர்களோ நாட்டுக்குள் புகுந்ததும் அரசனைக் கைப்பற்றியதோடு பழங்குடிகளைக் கொலை செய்தனர். கிறிஸ்தவ சமயப் பிரசாரத்துக்காக அரசனைப் பற்றிக்கொண்டதாகக் காரணம் சொன்னாலும், ஆயிரக்கணக்கான மக்களைக் கொலை செய்தது பெரிய அக்கிரமம்.

அரசனை நெடுங்காலம் சிறையில் வைத்திருந்தார்கள். அவனைப் பயமுறுத்தி மெல்ல மெல்ல அவன் செல்வத்தைப் பறித்துக்கொண்டார்

கள். அவன் மிகவும் தாராளபுத்தியோடு நடந்துகொண்டான். ஸ்பானியர்கள் தன் ராஜ்யத்தில் எங்கும் போகலாம், வரலாம் என்று அநுமதித்தான்; வேண்டிய உதவிகளையெல்லாம் செய்தான். இவற்றைச் செய்தால் அவனை விடுதலை செய்துவிடுவதாக ஸ்பானியர் வாக்களித்தனர். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. ஏதோ விசாரணை நடத்துவதாகப் பேர் பண்ணிச் சிரச்சேதம் செய்ய ஏற்பாடு செய்துவிட்டார்கள்.

அரசனைப் பிடிக்க எண்ணிய ஸ்பானியர்கள், படைவீரர்களை மறைவில் வைத்திருந்தார்கள். கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப எத்தகைய தியாகத்தையும் செய்யச் சித்தமாக இருப்பதாக அவர்கள் சொல்லிக்கொண்டார்கள். சங்கேதமான தொனி கேட்டால் உடனே வந்து அவர்கள் காரியத்தை நிறைவேற்றவேண்டுமென்பது ஏற்பாடு.

அரசன் ஸ்பானியர்களைச் சந்தித்து விருந்துண்ணுவதென்று திட்டம். அவன் ஆடம்பரங்களோடு ஊர்வலமாகச் சென்றான். ஆயுதமணியாத வீரர் சிலருடன் அரசன் குறிப்பிட்ட இடத்துக்கு வந்தான். அவனுடன் வந்தவர்கள் விலையுயர்ந்த ஆபரணங்களை அணிந்திருந்தனர். அரசன் ஒரு சிங்காதனம் அமைந்த சிவிகையில் வந்தான்.

குறிப்பிட்ட இடத்துக்கு வந்தபோது அங்கே ஒருவரையும் காணவில்லை. "எங்கே அவர்களில் ஒருவரையும் காணோமே!" என்றான் அரசன். அப்போது ஒரு பாதிரி வந்தான். அவன், "அரசே, கிறிஸ்தவராகி எங்கள் ஸ்பெயின் தேச அரசருக்குக் கப்பம் கட்ட ஏற்பாடு செய்யும். எங்கள் குருவாகிய போப் இந்தப் பாகங்களுக்கு எங்களை அனுப்பி இந்தப் புண்ணிய கைங்கரியத்தைச் செய்யும்படியாகப் பணித்திருக்கிறார்" என்றான்.

ஹிந்து அரசன் கண்ணில் கனல் பிறந்தது; புருவம் நெறிந்தது. "என்ன! நான் எந்த மனிதனுக்கும் கப்பம் கட்டமாட்டேன். மண்ணிலுள்ள மன்னவர் யாரிலும் நான் பெரியவன். உங்கள் அரசன் பெரியவனாக இருக்கலாம். அவனை நான் சகோதரனாக மதிக்கத் தடையில்லை. யாரோ குருநாதர் என்று சொன்னாயே, அந்தப் போப் தமக்குச் சொந்தமில்லாத மண்டலங்களைப் பிறருக்கு வழங்குவதாவது! சுத்தப் பைத்தியக்காரத்தனம்! நான் மதம் மாறமாட்டேன். உங்கள் கடவுள் தம்மால் படைக்கப்பட்ட மனிதன் கையாலே மரணமடைந்தார். அதோ பார் எங்கள் கடவுளை; அவர் நித்தியப்பொருளாக வானமண்டலத்திலே வாழ்ந்து தம் மக்களை ரட்சித்து வருகிறார். அது சரி. நீ உங்கள் மதத்தின் பெருமையைச் சொல்கிறாயே. அதற்கு என்ன ஆதாரம்?" என்று அரசன் பேசினான்.

அந்தப் பாதிரி பைபிள் புத்தகத்தைக் காட்டினான். அரசன் அதைக் கையில் எடுத்துக் கொஞ்ச நேரம் புரட்டிப் பார்த்தான்; அவன் மனம் கொதித்துக்கொண்டிருந்தது; பைபிளைக் கீழே போட்டுவிட்டு, ஸ்பானியர்கள் தன் நாட்டு ஜனங்களுக்கு இழைத்த கொடுமைகளுக்குக் காரணம் கூறும்படி கேட்டான்.

உடனே முன் ஏற்பாட்டின்படி ஸ்பானியர்கள் அவனைச் சிறைப்படுத்தினர். அப்போதுதான் அவர்கள் கிறிஸ்துவசமயத் தொண்டர் அல்ல, பொன்னாசை பிடித்த பாத

கர்கள் என்று மன்னனுக்குத் தெரிய வந்தது. அதற்குப் பிறகு மன்னனுக்கு ஸ்பானியர்கள் விடுதலை ஆசை காட்டிக் காட்டிப் பல செல்வத்தைப் பறித்தார்கள். கடைசியில் கொன்றேவிட்டார்கள்.

கிறிஸ்துவ சமயத்தின் பேரைச் சொல்லிக்கொண்டு இவ்வாறு நடந்த அக்கிரமங்கள் பல. ஸ்பானியர்கள் செய்த அக்கிரமங்களின் விளைவாக விதி அவர்களுக்கு மூர்களின் மூலம் தண்டனை விதித்துவிட்டது.

## சாவை வென்ற வீரர்



பிரிகேடியர் உஸ்மானுக்கு முப்பத்தைந்தே வயது. அவர் புகை குடிப்பதில்லை. மரக்கறி உணவே உண்பார். ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த ஆஜம்கட் ஜில்லாவில் பீபிபூரில் அவர் பிறந்தார். காசி ஹரிச்சந்திரா ஹைஸ்கூலில் படித்தார். அதன் பிறகு அலகாபாத் க்வீன்ஸ் காலேஜுக்குச் சென்றார். நல்ல படிப்பாளி. சகோதர மாணவர்களின் அன்பைப் பெற்றவர். விளையாட்டில் சிறந்தவர். தேகக் கட்டுள்ளவர்.

பின்னர், சாண்ட்ஹர்ஸ்ட் ராணுவக் காலேஜில் சேர்ந்தார். திறமைவாய்ந்த ராணுவ அதிகாரியானார். இரண்டாவது உலக யுத்தத்தில் பைபோர்ஸ் என்னும் இடத்துக்கு அவரை அனுப்பினார்கள்.

பாகிஸ்தான் பிரிவினையால் நாட்டிலே வகுப்புக் கலவரங்கள் நேர்ந்தபோது, மூல்தானில் ஓர் இந்தியப் படைக்கு அவர் அதிபதியானார். ஆயிரக்கணக்கான ஹிந்து குடும்பங்களை அப்போது அவர் காப்பாற்றினர்.

1947 - ஆகஸ்டு 15-ஆம் தேதி இந்திய ராணுவத்தை இரண்டாகப் பிரித்தாகள். அப்போது பாகிஸ்தானுக்குப் போக விரும்பாமல் இந்திய யூனியனிலேயே உஸ்மான் தங்கிவிட்டார். அவருக்குக் கீழிருந்த முஸ்லிம் வீரர்களும் அப்படியே தங்கிவிட்டார்கள். அவரிடம் பாகிஸ்தான் பசப்பிப் பார்த்தது. அவர் மசியவில்லை. இதன்மேல் சலிப்புற்று, அவரைக் 'காபிர்' என்று பாகிஸ்தான் தலைவர்கள் திட்டினர்கள்.

காஷ்மீரைக் கலகக்காரர்கள் தாக்கவே, அங்கே உஸ்மான் இந்தியப் படையின் தலைவரானர். கலகக்காரர்களை அவர் விரட்டியடித்தார். அவரைப் பழி வாங்க, "உஸ்மானை உயிருடனே பிணமாகவோ பிடித்து வருவோருக்கு 50,000 ரூபாய் இனம் தருவோம்'' என்று பாகிஸ்தானியர் விளம்பரம் செய்தார்கள்.

உஸ்மானுக்கு இராத்தூக்கம் கிடையாது. சண்டை நடக்கும் ஸ்தலத்திலே அவர் முன்னே நிற்பார். ஜாட் வகுப்பார், மராட்டியர், சென்னைவாசிகள், சீக்கியர், கிறிஸ்தவர், முஸ்லிம்கள் ஆகிய பல இனத்தார் கலந்தது அவரது படை. போர்முனையிலே குண்டு பட்டபோது, "நான் சாகிறேன்; ஆனல், எதிரிக்கு ஓர் அங்குலமும் இடங் கொடாதீர்கள்" என்று சொல்லிக்கொண்டே அவர் இறந்தர். நேரு சொன்னதைப் போல, 'அவர் மரணத்துக்கு வருந்துகிறேம்; ஆனல், சாவையும் வென்ற அவர் வீரத்துக்கு மகிழ்கிறேம்.' அவருடைய ஆத்மா சாந்தியடைக!

—'போரம்'

# பாபுராவ் பதில் சொல்லுகிறார்

இந்திய ஸினிமாப் பத்திரிகை உலகத்திலே ஒரு புரட்சி உண்டாக்கியவர் பாபுராவ். வழவழவென்ற ஆர்ட் காகிதத்தில், சுடச் சுட ஸினிமா விஷயங்களை எழுதுகிறார். 'பிலிமிண்டியா'வில் கேள்விகளுக்கு அவர் எழுதிவரும் பதில்கள் நகைச்சுவையும் விறுவிறுப்பும் மிகுந்திருக்கின்றன. ஸினிமாபற்றி மட்டுமல்ல; வேறு விஷயங்கள் பற்றியும் அருமையாகப் பதில் தருகிறார்.

கே: இந்தியாவில் ஆண்களும் பெண்களும் ஒன்றாகப் படிக்கும் விஷயத்தில் உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: வாழ்க்கைப் பிரயாணத்தில் இணைந்து செல்லப் பிறக்கிறவர்கள் ஆணும் பெண்ணும். அப்படியிருக்க அவர்கள் ஒன்றாக வளர்ந்து ஒன்றாகப் படிக்க மாத்திரம் கூடாதா?

*    *

கே: இவ்வுலகத்தில் சாந்தி என்பது எங்கே கிடைக்கிறது?

ப: எங்கோ மறைவான இடத்தில் இருக்கலாம்; அல்லது சாம்பலாகிப் போயிருக்கலாம்.

*    *

கே: ஒரு பெண்ணை ஓர் ஆடவன் முத்தம் மாத்திரம் இடுகிறான்; அவளுடைய கற்புக் கெட்டுவிடுமோ?

ப: அவள் எந்தத் தேசத்துக்காரி என்பதைப் பொறுத்தது அது. மேல்நாட்டில் கிறிஸ்துமஸ் பண்டிகையில் ஆயிரம் தடவை முத்தமிட்டாலும் ஒரு பெண் கன்னியாகவே இருக்கலாம். இந்தியாவிலோ வெறும் புரளி இருந்தால் கூடப் போதும், ஒரு கன்னி தற்கொலை செய்துகொள்கிறாள்.

கே: அதிகமான சிநேகத்தால் சண்டை விளைகிறதே; ஏன்?

ப: ஒரு பொருளை மிகவும் நெருங்கினால் அதனுடைய குறைபாடுகள் தெரிய வருகின்றன. காதல் மணங்களிற் பல ரசப்படாமல் போவதற்குக் காரணம் அதுதான். பரஸ்பரம் ஒருவருடைய குறைகளைக்கூட மற்றவர் கண்டு மகிழும் நிலை வந்தால் மணவாழ்க்கை ரசப்படும்.

*    *

கே: இப்பொழுதெல்லாம் மனைவிக்கு அடங்கிய கணவர்களை அதிகமாகப் பார்க்கிறோமே; ஏன்?

ப: நவீனப் பெண்மணிகள் தங்கள் பெண்மையை வேகமாக இழந்து ஆடவர்களைப் போல நடந்துகொள்கிறார்கள்; அதுதான் காரணம்.

*    *

கே: எதைக் கொண்டு நாகரிகத்தின் இயல்பைச் சரியாக அறிந்து கொள்ளலாம்?

ப: மனிதனோடு மனிதன் பழகும் விதத்தைக் கொண்டு.

*    *

கே: பருமனான நண்பர் ஒருவர் இருக்கிறார். அவர் ஒல்லியாக வேண்

காப்பிரைட்: பிலிமிண்டியா (ஆங்கிலம்: ஜுலை '48), பம்பாய்.

டுமாம். ஏதாவது வழி சொல்லுங்கள்.

ப: கூடியவரையில் சாப்பிடுவதை நிறுத்தச் சொல்லுங்கள்.

* *

கே: எனக்கு எவன் மேலாவது கோபம் வந்துவிட்டால் அவனை அடித்தாலொழியக் கோபம் ஆறுவதில்லை. என் கோபத்தை அடக்கும் வழி என்ன?

ப: அடுத்த தடவை ஒரு பலசாலியின்மேல் கோபத்தைக் காட்டுங்கள்; அவன் சரிப்படுத்திவிடுவான்.

* *

கே: பொதுவாக, கண் இழந்த மனிதர்கள் சந்தோஷமாகவும் உத்ஸாகமாகவும் இருக்கிறார்களே; என்ன காரணம்?

ப: கண்ணால் புன்னகையைக் காட்ட முடியாதவர்கள் முகத்தால் புன்னகை பூக்கிறார்கள்; அப்போதைக்குத் தங்கள் வாழ்க்கையின் துக்கத்தை மாற்றிக் கொள்ளத் தான்.

* *

கே: ஒரு பெண் அகதி என்னிடம் அடைக்கலமாகப் புகுந்தால் நான் எவ்வகையான உதவியைச் செய்வது?

ப: அவள் சிறுமியாக இருந்தால், உங்கள் தங்கையாக ஏற்றுக்கொள்ளுங்கள்; சம வயதானால் நீங்களும் மனைவியில்லாமலிருந்து அவளுக்கும் சம்மதமாக இருந்தால் அவளைக் கல்யாணம் செய்துகொள்ளுங்கள்; அதிக வயதுள்ளவளானால் தாயைப்போல வழிபடுங்கள். பெண்கள் வெவ்வேறு பருவத்தில் வெவ்வேறு வகையில் உபயோகமாக இருப்பவர்கள்.

கே: நம்முடைய பிரபல பட முதலாளிகள் இப்போதெல்லாம் அநேகமாகக் காதற் படங்களையே பிடிக்கிறார்களே; நாட்டுக்கு உபயோகப்படும் வேறு ஒன்றும் கிடைக்கவில்லையா?

ப. கொள்ளையும் கொலையும் எங்கும் பரந்திருக்கும் இந்நாளில், அந்தக் கஷ்டத்தை மறக்கக் காதற்படத்தைத் தவிர வேறெதையும் எடுக்கவே கூடாது. ஆனால் காதல் என்பதே நம் பட முதலாளிகளுக்குத் தெரியாதே!

* *

கே. பேரழகிகளெல்லாம் இவ்வுலகத்தில் அநேகமாகச் சுகப்படுவதில்லையே; என்?

ப. அவலக்ஷணமான உலகத்தில் லக்ஷணத்தைக் கண்டால் பொறாமையும் எரிச்சலும் உண்டாவது இயல்புதான்.

* *

கே. பதினேழு வயது அழகி எழுபது வயதுக் கிழவனிடம் பிரமாத ஆசை காட்டுகிறாள்; இதை என்னவென்று சொல்வது?

ப. பிதுருவிசுவாசம்; இது சாதாரணமான சமாசாரந்தானே?

* *

கே: இன்பத்தை எதைக் கொண்டு அளக்கிறீர்கள்?

ப: என்னைச் சூழ்ந்துள்ள புன்முறுவல் பூத்த முகங்களைக் கொண்டு.

* *

கே: ஓர் அழகிய காட்சியைக் கண்டால் உங்களுக்கு எப்படி இருக்கிறது?

ப: கடவுள் என் அருகில் இருப்பதாக உணர்கிறேன்.

# மூக்கின் மகத்துவம்

நமது மூக்கு நம்மைப் பல வகைகளில் ஆட்டிவைக்கிறது. பல விஷயங்களில் நம் தீர்மானத்துக்கு இந்த மூக்கே முக்கிய காரணமாக இருக்கிறது. ஆனால் நம்மில் பலருக்கு இந்த உண்மை தெரிவதில்லை. "வாசனை சோப்புகளும், வாசனைத் தைலங்களும் உங்களுக்குப் பிடிக்குமா?" என்று ஜனங்களைக் கேட்டால், பத்துக்கு ஒன்பது பேர், "பிடிக்கவே பிடிக்காது" என்று அழுத்தமாகச் சொல்லுவார்கள். ஆனால் வாசனை கலந்த க்ஷவர சோப்பையும் வாசனையில்லாத க்ஷவர சோப்பையும் அவர்களுக்கு முன் வைத்து, "எது வேண்டும்?" என்று கேளுங்கள். 100-க்கு 90-பேர் வாசனை கலந்த சோப்பையே தேர்ந்தெடுப்பார்கள்! இதுதான் மூக்கின் மகத்துவம். நம்மை அறியாமலே நம் மூக்கு இப்படிச் செய்துவிடுகிறது.

ஓர் அமெரிக்க ஜவுளிக் கடைக்கு வந்த பல சீமாட்டிகளுக்கு ஆறு ஜதை ஸ்டாக்கிங்ஸை எடுத்துக் காட்டினார்கள். அவற்றில் மூன்று ஜதை உயர்ந்த ரகம். மற்ற மூன்று ஜதை சாதாரணமானவை; ஆனால் அவை நறுமணம் வீசின. என்ன நடந்தது தெரியுமா? ஐந்து பேரில் நாலு பேர் மணம் வீசிய மட்டமான ஸ்டாக்கிங்ஸையே தேர்ந்தெடுத்தார்கள். "இவை பார்வையாக இருக்கின்றன. இவற்றின் நிறம் கவர்ச்சியாக இருக்கிறது" என்று சொன்னார்களே ஒழிய, ஒருவராவது வாசனையைப் பற்றிப் பிரஸ்தாபிக்கவே இல்லை!

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**நம்மை வசீகரிக்க முடியாத வியாபாரிகள் நம் மூக்குக்கு லஞ்சம் கொடுக்கிறார்கள். இந்த ரகசியம் உங்களுக்குத் தெரியுமா? தெரியாதே! கட்டுரையைப் படியுங்கள். அமெரிக்காவில் வெளியாகும் 'காரனெட்' என்ற அருமையான பத்திரிகையில் வில்பிரெட் வீஸ் என்பவர் எழுதியுள்ளதை ஆதாரமாகக் கொண்டது இது.**

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

மூக்கின் ரகசியத்தை வியாபாரிகள் நன்கு அறிந்துவிட்டார்கள். அமெரிக்காவில் நடைபெறும் 150-தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களுக்குக் குளுகுளுவென்று லேசான நறுமணம் ஊட்டுகிறார்கள். இதன் பயனாகச் செயற்கை வாசனைப் பொருள்களின் உற்பத்தி பல மடங்கு பெருகிவிட்டது.

குழந்தைகளின் கிலுகிலுப்பைக்குக் கொளுஞ்சி மிட்டாயின் வாசனையை ஊட்டுகிறார்கள். சாமான்களைக் கட்ட உபயோகப்படும் காகிதத்தில் வாசனை; வாழ்த்துச் செய்தி அனுப்பும் கார்டுகளில் புஷ்ப வாசனை; போலி ட்வீட் துணிக்கு ட்வீட் வாசனை - இப்படி வெளிவருகின்ற எல்லாப் பொருள்களுக்கும் வியாபாரிகள் வாசனை ஊட்டி வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்கிறார்கள்.

பெண்கள் அணியும் டிராயர்கள் ஒரு துணி வியாபாரியிடம் கட்டுக் கடையாக நின்றுவிட்டன. லேசான ரோஜா வாசனை வீசும் அட்டைப் பெட்டிகளில் அவன் அவற்றைப் போட்டு வெளியே எடுத்து வைத்தான். அவ்வளவுதான்; சில நாட்களில் எல்லா டிராயர்களும் பறந்து விட்டன.

இப்படி மூக்கின் தயவைச் சம்பாதித்து விற்கும் சரக்குகள் இருக்கட்டும். ரப்பர்த் தொழிற்சாலை, பிளாஸ்டிக் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் சில சரக்குகளில் ஒரு கெட்ட வாசனை இருக்கிறது. நல்ல வாசனையை ஊட்டித்தான் இவற்றையும் விற்கவேண்டி யிருக்கிறது. வியாபாரத்தில் வாசனையின் பயன் இது.

வேறு விவகாரங்களுக்கும் வாசனை பயன்படுகிறது. சண்டை நடந்தபோது எவ்வளவோ விமானிகள் கடலில் விழ நேர்ந்தது. அவர்கள் தங்களைச் சுற்றி ஒருவகை வாசனையைப் பரப்பிவிடுவார்களாம். போர் விமானத்தில் செல்லும் ஒவ்வொருவரிடமும் இந்த வாசனைச் சரக்கு இருக்கும். இந்த வாசனை சுறு மீன்களுக்குப் பிடிக்காதாம். எனவே கடலில் விழும் விமானிகளைச் சுறுமீன் விழுங்காமல் இந்த வாசனை காப்பாற்றியது. இப்பொழுது மீன்களைக் கவரும் ஒரு வாசனையைக் கண்டுபிடித்து நிறைய மீன்கள் பிடிக்க முயலுகிறார்களாம்.

தன்னைத் துரத்தும் வேட்டை நாய்களைத் தடுப்பதற்காகக் குள்ளநரி ஒருவகைக் கெட்ட காற்றை வெளிவிடும். நாய்கள் வெகுநேரம் ஓடிவர முடியாமல் அவற்றை இந்தக் கெட்ட காற்றின் வாசனை நிறுத்திவிடுமாம்; துரத்தும் மனிதர்களைக் கூடத் தடுத்துவிடுமாம்.

மாமிசம் தயாரிக்கும் தொழிற்சாலை, எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை இங்கெல்லாம் நாற்றமெடுக்கும். இந்த நாற்றத்தால் தொழிலாளிகளுக்குத் தலைவலியும் குமட்டலும் அடிக்கடி ஏற்பட்டு வேலை தடைப்படும். இந்த மாதிரித் தொழிற்சாலைகளிலெல்லாம் நறுமணம் பரவும்படி செய்து தலைவலி, குமட்டல் முதலிய தொல்லைகள் இல்லாமற் செய்துவிடுகிறார்களாம்.

அப்படியானல் எங்கும் வாசனையை வாரி இறைத்தே பல காரியங்களைச் சாதித்துக்கொள்ளலாமே என்றால், இயற்கை ஸெண்டுகள் செய்ய ஏராளமான செலவு பிடிக்கும். ஒரு பவுண்டு மல்லிகை எஸ்ஸென்ஸ் இறக்குவதற்கு 2000 டாலர் ஆகிறது! ஓர் அவுன்ஸ் கஸ்தூரி தயாரிக்க 45-டாலர் ஆகிறது. இப்பொழுது இந்த ஸெண்டுகளையே செயற்கையாகச் செய்ய வழி கண்டு பிடித்துவிட்டார்கள். அந்த முறைப்படி மல்லிகை எஸ்ஸென்ஸ் ஒரு பவுண்டுக்கு 2 டாலர் ஆகிறது. செயற்கைக் கஸ்தூரி பவுண்டு ஒன்றுக்கு 5 டாலர் ஆகிறது. ஒரு பவுண்டு அசல் ரோஜா அத்தர் இறக்க 2 டன் ரோஜா இதழ்கள் வேண்டும். ஓர் அவுன்ஸ் அசல் ரோஜா அத்தரின் விலை 35 டாலர் ஆகும். ஆனால் செயற்கை ரோஜா அத்தரின் விலை அவுன்ஸ் ஒன்றுக்குச் சுமார் அரை டாலர்தான் ஆகிறது. (அமெரிக்க டாலர் ஏறக்குறைய மூன்றரை ரூபாய்க்குச் சமம்.) இப்பொழுது சுமார் 2 லக்ஷம் செயற்கை ஸெண்டுகள் செய்வதற்குப் போதிய 250 வகை ரசாயனப் பொருள்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்!

இது வியாபாரத்துக்குப் பெரிய வெற்றிதான். அந்த வெற்றியோடு இப்பொழுது ஓர் உபத்திரவமும்

வந்து சேர்ந்துவிட்டது. 'வாசனையைக் கொண்டுதான் நாம் சாமான்களை வாங்குகிறோம்' என்று ஜனங்களுக்குத் தெரிவதில்லை. என்றாலும், தாங்கள் வாங்கும் ஒவ்வொரு சாமானின் வாசனையும் அவர்களுடைய மனத்தைப் பற்றிக்கொண் டிருக்கிறது. ஆகவே இதுவரைக்கும் தாங்கள் வாங்கிவந்த ஒரு சாமானின் வாசனை அதில் இப்போது இல்லையானால், அதை வாங்காதே என்று மூக்கு ஆட்சேபித்துவிடுகிறது. இது அவர்களுக்குத் தெரிவதில்லை.

பூட்ஸுக்குப் போடும் ஒருவகை மெழுகு நன்றாக விற்றுக்கொண் டிருந்தது. அதன் கடுமையான வாசனையைப் போக்கிவிட்டார்கள். பிறகு அதை யாருமே வாங்க மறுத்துவிட்டார்கள். ஆனால் 'அதே மெழுகுதான் இது' என்று சொல்லிக் கடைக்காரர்கள் பூட்ஸுக்கு அதைப் போட்டுக் காட்டியும் ஜனங்கள் நம்பவில்லை. அந்த வாசனையும் அந்த மெழுகும் அவர்களை அறியாமலே அவர்கள் மனத்தில் இணைந்துவிட்டன.

சண்டை நடந்தபோது 'காட்லிவர் ஆயில்' என்ற மீன் எண்ணெய்க்குப் பதிலாக வேறு ஒரு செயற்கை எண்ணெய் தயாரித்தார்கள். இதில் மீன்வாசனை இல்லை. எவ்வளவு பிரசாரம் செய்தும் ஜனங்கள் இதை வாங்கப் பின்வாங்கினார்கள். இதற்கு மீன்வாசனை ஊட்டிய பிறகே இதை எல்லோரும் வாங்கினார்கள்.

வருங்கால உலகம் வாசனை உலகமாகவே இருக்கலாம். ஆனாலும் எங்கும் வாசனை மலிந்துவிட்டால், வாசனை அறியும் சக்தியையே மூக்கு இழந்துவிடுமோ என்று பயப்பட இடமில்லை. வியாபாரிகள் தங்கள் சரக்குகளுக்கு லேசான வாசனைதான் ஊட்டியிருப்பார்கள். அளவுக்கு மிஞ்சினால் காரியமே கெட்டுவிடுமே!

சில பேருக்குப் பிடிக்கும் வாசனை சில பேருக்குப் பிடிப்பதில்லை. ஒருவருக்கே காலையில் பிடிக்கும் வாசனை மாலையில் பிடிப்பதில்லை; கோபம் வருவதற்கு முன் பிடித்த வாசனை கோபம் வந்துபோன பிறகு பிடிப்பதில்லை. இதனால்தான் எந்த வாசனையையும் தீர்க்கமாக வியாபாரிகள் உபயோகிப்பதில்லை; லேசாகவே உபயோகிக்கிறார்கள். உங்களுக்குத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் அந்த வாசனை உங்கள் மூக்குக்குத் தெரியும். அதில் கொண்ட மோகத்தால் உங்கள் மூக்குத் தன் இஷ்டப்படியெல்லாம் உங்களை ஆட்டிவைக்கும்.

## சமூக வாழ்வின் அஸ்திவாரம்

பொய் இல்லாவிட்டால், மரியாதை இல்லை; மரியாதை இல்லாவிட்டால், சமூக வாழ்வு இல்லை.

—கிருஸ்டியன் மெக்ரெட், 'கார்ரிபோர்'

மனிதன் நியாயமாக நடந்தால்தான் ஜனநாயகம் சாத்தியமாகும். ஆனால், மனிதன் அநியாயமாக நடப்பதால், ஜனநாயகம் தேவையாகிறது.

—டாக்டர் ரெயின்ஹோல்டு நீபுர்.

|  இந்தியா | | பாகிஸ்தான்  |
|---|---|---|
| ஜனத் தொகை<br>300,000,000 |  | ஜனத் தொகை<br>100,000,000 |
| விஸ்தீர்ணம்<br>1,200,000 ச. மைல்கள் |  | விஸ்தீர்ணம்<br>300,000 ச. மைல்கள் |
| ரெயில் பாதை<br>25,970 மைல்கள் |  | ரெயில் பாதை<br>15,542 மைல்கள் |
| அரிசி<br>17,229,000 ஏக்கரா |  | அரிசி<br>5,376,000 ஏக்கரா |
| பருத்தி<br>13,770,000 ஏக்கரா |  | பருத்தி<br>1,630,000 ஏக்கரா |
| பஞ்சாலைகள்<br>380 |  | பஞ்சாலைகள்<br>9 |
| சணல்<br>984,000 ஏக்கரா |  | சணல்<br>1,404,000 ஏக்கரா |
| சணல் ஆலைகள்<br>108 |  | சணல் ஆலைகள்<br>0 |
| இரும்பு, எஃகுத்<br>தொழிற்சாலைகள் 18 |  | இரும்பு, எஃகுத்<br>தொழிற்சாலைகள் 0 |

—'ட்ரெண்ட்', (பம்பாய்).

கட்டுரையாளர்களின் கட்டுரையைத் தொலைத்துவிட்டுத் தவியாத ஆசிரியர்கள் இல்லை. காந்திஜியும் அப்படித் தவித்திருக்கிறார்!

# காணமற்போன கட்டுரை

## ஜகதீசசந்திர சாஸ்திரி

காந்தியடிகளிடமிருந்து 1927, நவம்பர், 5-ஆம் தேதி எனக்கு முதல் கடிதம் வந்தது. அது ஒரு சிறிய கார்டு.

ஐயா,

தங்கள் கடிதம் கிடைத்தது. தங்கள் கட்டுரையைப் பண்டிதர் ஸாதவலேகரிடம் அனுப்பியிருக்கிறேன். அவருடைய பதில் வந்ததும் ஏதாவது அவசியமானால் எழுதுகிறேன்.

இலங்கை வழியில்,
கார்த்திக சுக்ல த்ரயோதசி.

தங்கள்
மோகன்தாஸ் காந்தி

என் கடிதத்துக்கு மகாத்மா தாமே பதில் எழுதுவார் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. காலஞ்சென்ற விநாயக சிந்தாமணி வைத்தியர், பழைய வேத காலத்தில் கோமாமிசம் புசிக்கும் வழக்கம் இருந்ததாக 'யங் இந்தியா'வில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். ஸ்ரீபாத தாமோதர ஸாதவலேகர் அதற்குப் பதில் கட்டுரை எழுதியிருந்தார். அப்பொழுது எனக்கு வயது 19; சாஸ்திரிப் பட்டம் பெற்ற புதிதாகையால் என் சம்ஸ்கிருத ஞானம் பசுமையாக இருந்தது. நிறைய எழுத வேண்டுமென்ற ஆசையும் இருந்தது. நான் இவ்விரு வித்துவான்களின் விவாதத்திலே திடீரென்று வந்து பாய்ந்தேன். பண்டித ஸாதவலேகரின் யுக்திகளைக் கண்டித்தும், சிந்தாமணி வைத்தியரின் கொள்கையைப் பாராட்டியும் ஒரு கட்டுரை எழுதி அதை மகாத்மாவிடம் அனுப்பினேன். மகாத்மா எனக்குத் தாமே பதில் எழுதியதோடு, அந்தக் கட்டுரையை ஸாதவலேகருக்கு அனுப்பினர். அதற்கு அவர் எழுதியிருந்த பதில் கட்டுரையை "இதற்கு மறுபடி பதில் எழுதுங்கள்" என்ற குறிப்போடு என்னிடம் பாபூ அனுப்பிவைத்தார். என் சொற்ப ஞானத்துக்கு ஏற்பட்ட கடுமையான சோதனை இது. நான் மிகவும் சிரமப்பட்டு விரைவில் விடை எழுதி அனுப்பினேன். "இந்தப் பதிலும் மறுப்புகளும் வெளியிடுவதற்காக அல்ல. நான் தெரிந்துகொள்வதற்குத்தான் வேண்டும்" என்று பாபூ தம் குறிப்பிலே எழுதியிருந்தார். என் பதில் அவருக்குத் திருப்தி யளித்ததோ இல்லையோ தெரியாது. ஆனல் அதற்குப் பிறகு அவரிடமிருந்து கடிதம் ஏதும் வரவில்லை.

"பசுப் பாதுகாப்பு" என்ற விஷயத்தைப் பற்றிய சிறந்த கட்டுரைக்கு ஆயிரம் ரூபாய் பரிசளிப்பதாக மகாத்மா ஒரு விளம்பரம் வெளியிட்டிருந்தார். முதல்

காப்பிரைட்: விசால பாரத் (ஹிந்தி: மே '48),
120/2, அப்பர் ஸர்க்குலர் ரோட், கல்கத்தா.

தடவை போட்டிக்கு வந்த கட்டுரைகள் திருப்திகரமாக இல்லை. ஆகையால் இனிமேல் எழுத விரும்புகிறவர்கள் தங்கள் யோக்கியதாம்சங்கள் முதலியவற்றை முன்னதாகத் தெரிவித்து அநுமதி பெற்றே எழுத வேண்டும் என்று தெரிவித்தார்கள். 'பசுப் பாதுகாப்பு' விஷயமாக மகாத்மாவுடன் கடிதப் போக்குவரவு நடந்ததில் அந்த விஷயத்தில் எனக்குச் சுவை உண்டாயிற்று. மிகவும் சிரமப்பட்டு இருநூறு பக்கங்களில் நான் ஒரு கட்டுரை எழுதி அனுப்பினேன். இந்தப் போட்டிக்கு இரண்டு பேர் ஜட்ஜ்கள் - ஆசார்ய ஆனந்தசங்கர துருவரும், விநாயக சிந்தாமணி வைத்தியரும். கட்டுரைகள் காசிக்கும் புனாவுக்குமாக அலைந்தன. கடைசியில் இரண்டு கட்டுரைகளில் சில பகுதிகள் அவர்களுக்குப் பிடித்தன. அவற்றில் என் கட்டுரையும் ஒன்று. ஆனால் கடைசி முடிவை அவர்கள் பாபூஜியிடமே விட்டுவிட்டார்கள். 1929 - ஆம் வருஷக் கடைசியில் கோசேவா சங்கத்தின் காரியதரிசி, எனக்குப் பரிசிலே ஒரு பங்கு கிடைக்கக்கூடுமென்றும், அதனால் நான் காப்பிரைட்டை யாருக்கும் விற்க வேண்டியதில்லை என்றும் எழுதியிருந்தார். மகாத்மா தாண்டி யாத்திரை செய்தபொழுது அந்தக் கட்டுரையும் அவரிடம் இருந்தது. பிறகு அவர் சிறைப்பட்டதும் அது எங்கோ தொலைந்து போயிற்று. சிறையிலிருந்து வெளிவந்ததும் அவர் வட்டமேஜை மகாநாட்டுக்கு லண்டனுக்குப் போனார். வந்ததுமே மீண்டும் சிறைப்பட்டார். அவர் விடுதலையானதும் ஒரு கடிதம் எழுதினேன். பதில் வந்தது.

சகோதரர் சாஸ்திரி
அவர்களுக்கு,

தங்கள் கடிதம் கிடைத்தது. பசுப் பாதுகாப்பைப் பற்றிய தங்கள் கட்டுரை எங்கே இருக்கிறதோ, தெரியவில்லை. ஸ்ரீ பால்ஜீ தேசாயியும் பியாரேலாலும் சிறையில் இருக்கிறார்கள். ஆசிரமத்தைக் கலைத்துவிட்டதுதான் தங்களுக்குத் தெரியுமே. ஆயினும் தேடிப் பார்க்கிறேன். ஏதாவது முடிந்தால் செய்வேன்.

வர்தா தங்கள்
6-10-'33 மோகன்தாஸ் காந்தி

அந்தக் கட்டுரை கிடைக்கவில்லை. "உங்களிடம் வேறு பிரதி இருக்கிறதா? இருக்குமானால் என் பெஜவாடா விலாசத்துக்கு ரிஜிஸ்டரில் அனுப்புங்கள்" என்று அவர் தெரிவித்தார். என்னிடம் அடித்தலும் திருத்தலுமாக ஒரு பிரதி இருந்தது. அதை அவரிடம் அனுப்பினேன். அவர் கைக்குக் கிடைத்த இந்தப் பிரதியும் என் துர்ப்பாக்கியத்தினால் தொலைந்து போயிற்று.

சில நாள் கழித்து ஹரிஜனத் தொண்டுக்காக அவர் டில்லிக்கு வந்தார். அப்போதுதான் 'ஹரிஜன் காலனி' ஏற்பட்டது. இரவோடு இரவாகச் செங்கற்சுவர் வைத்து ஒரு சிறு குடிசை தயாராயிற்று. நான் அப்போது டில்லி காலேஜில் உபாத்தியாயராக இருந்தேன். அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். இந்தத் தடவை மகாதேவ தேசாயி பதில் எழுதினார்.

டில்லி
11-1-35

சகோதரர்
ஸ்ரீ சாஸ்திரி அவர்களுக்கு,

தங்கள் கடிதம் காந்தியடிகளுக்குக் கிடைத்தது. சம்

பவம் முழுவதுமே வருத்தம் தருவதாகத்தான் இருக்கிறது. முதல் பிரதியைத் தேடுவதற்கு ஸ்ரீ பால்ஜீ தேசாயிக்கு எழுதியிருந்தோம். அவருக்கு அது கிடைக்கவில்லை. தாங்கள் அனுப்பிய மற்ருெரு பிரதியைத் தமது சொந்தக் காகிதக் கட்டோடுதான் காந்திஜி ஜாக்கிரதையாக வைத்திருந்தார். அவை எல்லாமே தொலைந்து போய்விட்டன. தேடித் தேடி அலுத்துப் போனேம். இன்னமும் தேடி வருகிறேம். எங்களுடைய கொந்தளிப்பான வாழ்க்கைதான் இதற்குக் காரணம். சத்தியாக்கிரக ஆசிரமத்தை மூடியது, சிறை சென்றது, ஓயாமல் ஹரிஜன சேவா யாத்திரை முதலிய பல காரணங்களினல் எங்களிடம் இருந்த அருமையான பொருள்களும் புத்தகங்களும் தொலைந்து போய்விட்டன. ஆனல் தங்கள் கட்டுரை தொலைந்து போனதற்கு இந்தக் காரணங்களைச் சாக்காகச் சொல்வது சரியல்ல. தங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டியது தான் பாக்கி. ஆனல் இன்னமும் நாங்கள் நம்பிக்கையை விடவில்லை.

தங்களிடம் வேறு பிரதி இருக்கிறதா? இருந்து தாங்கள் அனுப்பினல் காந்திஜி அதைப் படித்துப் பயன்படுத்துவார். பதில் எழுதுங்கள்.

தங்கள்

மகாதேவ தேசாயி

இந்தக் கடிதம் வந்ததும், நான் காந்தியடிகளைச் சந்திக்க அநுமதி கோரினேன். உடனே பதில் வந்தது:

சகோதரர் ஜகதீசசந்திர
சாஸ்திரிகளுக்கு,

நீங்கள் சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு வாருங்கள். கட்டாயம் அரைமணி நேரம் உங்களுக்குக் கொடுப்பேன்.

டில்லி.
22-1-'35 மோ. க. காந்தி

நான் ஐந்து நிமிஷம் தாமதமாகப் போனேன். தேசாயி என்னை உள்ளே அழைத்துப் போனர். மகாத்மா என்னைத் தலைமுதல் கால்வரைக்கும் பார்த்தார். "இந்த இரண்டு மூன்று கடிதங்களை எழுதி முடித்துவிடட்டுமா?" என்ருர். சரி என்று தலை ஆட்டினேன். கடிதங்களை எழுதிக் காரியதரிசியிடம் கொடுத்து அவர் போனதும், "நமக்குத்தான் வெகு நாளாகக் கடிதப் போக்குவரத்து உண்டே! சாஸ்திரி என்ருல் யாரோ பெரிய தலைப்பாகைக்காரனக வயதானவனக இருப்பான் என்று நான் எண்ணியிருந்தேன். நீ சிறுபிள்ளையாக அல்லவா இருக்கிருய்! சரி, நான் உன்னிடம் வலைக் கட்டாயமாக வேலை வாங்கிக்கொள்வேன்" என்று மகாத்மா என்னிடம் சொன்னர்.

பிறகு பேச்சுவாக்கில் ஒரே கேள்வியில் அவர் என் அறிவைப் பரீட்சித்துவிட்டார். பசுப் பாதுகாப்பைப் பற்றி நான் வைத்திருந்த குறிப்புக்களை மேலெழுந்தவாரியாகப் பார்த்துவிட்டு, "நீ எழுதியதெல்லாம் வெறும் புத்தகங்களைப் படித்து எழுதினயா அல்லது தொழுவங்களையும் பிஞ்சராபோல்களையும் பார்த்து எழுதினயா?" என்று கேட்டார். நான் மிகவும் கூச்சத்தோடு, "வேறு புத்தகங்களைப் படித்துத்தான் நான் எல்லாவற்றையும் எழுதினேன். பரிசு பெறுவதுதான் என் நோக்கமாக இருந்தது" என்றேன்.

"அந்தக் கட்டுரைகளிலே இந்தக் குறைதான் எனக்குத் தென்பட்டது.

நீ சிறுபிள்ளையாக இருக்கிறாய். நான் தனியாக எது எதைத்தான் செய்வது? பசுப் பாதுகாப்பைப்பற்றி இதுவரை வெளியான நூல்களை நீ தூர வீசி எறிந்துவிடு. நானே உனக்கு விஷயங்களைக் கோவையாக எழுதிக் கொடுக்கிறேன். தொழுவங்களையும் பிஞ்சராபோல்களையும் நேரில் போய்ப் பார். பிறகு உன் புத்தகத்தை எழுது. கட்டாயம் ஒரு நாளைக்கு நீ பரிசு பெற்றுவிடுவாய்'' என்றார் மகாத்மா.

நாலைந்து நாள் கழித்து அவருடைய கடிதமும், 26 அத்தியாயங்கள் அடங்கிய அவருடைய கையெழுத்துப் பிரதியும் எனக்குக் கிடைத்தன. "இது விஷயமாக என்னைப் பார்க்க வேண்டிய அவசியம் இருந்தால் வா'' என்று அவர் அன்போடு எழுதியிருந்தார். நான் அந்த மகாபுருஷரைப் பார்க்கப் பல தடவை போனேன். ராஜாக்களும் ராணிகளும் பெரிய மனிதர்களும் அவரைப் பார்க்கக் காத்திருப்பார்கள். அவர் என்னைக் கூப்பிட்டு, நான் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் அலுப்பு சலிப்பில்லாமல் பதில் சொல்வார். அந்தக் காலத்திலே 'பசுப் பாதுகாப்பு' அவருக்குப் பிரியமான விஷயமாக இருந்தது. அதைப்பற்றிய தம் கருத்துக்களை ஓயாமல் சொல்லிவந்தார்.

1942-இல் நான் மகாத்மாவிடமே வேலைக்குப் போனேன். "காகா காலேல்கரோடு இருக்கவும் சாப்பிடவும் உனக்கு ஏதும் சிரமம் இராதே? அப்படி ஏதாவது இருந்தால் என்னிடம் வந்துவிடு'' என்று அவர் சொன்னார். பிறருடைய வசதிகளைப் பற்றி அவருக்கு அவ்வளவு கவலை. ஆகஸ்டு அடக்குமுறையில் நான் வேலையை விட்டுப் போகவேண்டியதாயிற்று. அதற்குப் பிறகு அவருடைய பிரசங்கங்களையும் பிரார்த்தனைகளையும் பல தடவை கேட்டேன்; ஆனால் அவருடைய இனிய சம்பாஷணையில் கலந்துகொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை.

## கணக்கிலே தவித்துக் கவியானாள்

ஐம்பது வருஷத்துக்கு முன் இது நடந்தது. சதுர்வேதிகுலப் பெண் ஒருத்தி படுக்கையிலே படுத்துக்கொண்டிருக்கிறாள். அவளைப் பார்த்து, "நீ என்ன இப்படி நோய் பிடித்திருக்கிறாய்?'' என்றார் லண்டன் டாக்டர். அவர் ஆச்சரியப்படும்படி, உடனே எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தாள் பெண். இரண்டாயிரம் வரிகளில் ஒரு ரசமான நாடகத்தை எழுதி முடித்து, தான் நோயாளியல்ல என்று டாக்டருக்கு நிரூபணம் செய்தாள். இந்தப் பெண் தனது பன்னிரண்டாவது வயதில் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினாள். பீஜ கணிதக் கேள்விகளுக்கு விடை கண்டுபிடிக்க முயன்றபோதெல்லாம், இவள் தன்னையறியாமலே கவிகள் புனைய ஆரம்பித்து, அதிலிருந்து ஒரு பெரிய கவி ஆகிவிட்டாள். இவள்தான் இப்போது கவர்னராக இருக்கும் ஸ்ரீமதி சரோஜினி நாயுடு.

—'போரம்'

# பணமுடை நீங்க—

ஸில்வானஸ் எம். டுவால்
எவெலின் எம். டுவால்

**இளந்தம்பதிகள் கீரியும் பாம்பும் ஆகிவிடுவதற்குக் காரணம் பெரும்பாலும் பணமுடைதான். அவர்களுக்குப் புத்திமதி கூறும் இந்த ஆசிரியர்களில் புருஷன் சிகாகோவில் ஜார்ஜ் வில்லியம் காலேஜில் சமய சமூகப் புரொபஸர்; பெண்மணி அமெரிக்காவில் குடும்ப உறவுகளின் தேசீயக் கவுன்ஸில் நிர்வாகக் காரியதரிசி; ' நீ மணம் புரிந்து கொள்ளும்போது' என்ற புத்தகத்தின் கூட்டாசிரியர்.**

புதுக் குடித்தனங்களுக்குத்தான் பணவிஷயம் ஒரு சிக்கல். வரும்படி குறைவாக இருக்கும் பொழுதுதான் செலவினங்கள் வந்து குவியும். ஒருவர் வேலையில் நிலைத்து, நிச்சயமான, கணிசமான வரும்படியைப் பெற வருஷக் கணக்கில் ஆகும். ஆனால் வேலையில் நிலைப்பதற்கு முன்னால் உள்ள இந்த இரண்டுங்கெட்டான் காலத்தில்தான் செலவு உச்சத்தில் நிற்கும். தனிக்குடும்பம் தொடங்கிய ஒருவர், தம் வீட்டுக்கு அவசியமான சாமான் செட்டுகளை வாங்க முதலீடு வேண்டும். அடுத்தபடியாகக் குழந்தைகள் வந்துவிடும். அதற்குப் பின் ஒரு சொந்த வீடு வாங்கவோ கட்டவோ முயற்சி நடக்கலாம். வைத்தியச் செலவு, இன்ஷ்யூரன்ஸ், குழந்தைகளுக்கென்று தனிப்பட்ட ஆகாரம், வளர்ச்சிக்குத் தக்கபடி புதுப் புதுத் துணிமணிகள், குழந்தைகளுக்குப் படிப்புச்செலவு என்று செலவினங்கள் விஷம்போல் ஏறிக்கொண்டே போகும். இந்தச் செலவுகளையெல்லாம் தாக்குப் பிடிப்பது எப்படி?

பணம் கிடைக்கும் வகையிலும் சங்கடங்கள் இருக்கலாம். இளந்தம்பதிகள் வாழும் ஒரு வீட்டுக்குப் பெண்ணின் தாய் வந்திருந்தாள். அவளிடம் சொந்தமாகக் கொஞ்சம் பணம் இருந்தது. அதற்குச் செலவில்லை. அவள் பிள்ளைகள் நல்ல உத்தியோகத்தில் இருந்தார்கள். தன் மாப்பிள்ளைக்குக் கொஞ்சம் பணம் இருந்தால் சௌகரியமாக இருக்கும் என்று நினைத்த மாமியார் அன்போடு மாப்பிள்ளைக்கு ஒரு 'செக்' கொடுத்து, சில சௌகரியங்கள் செய்துகொள்ளச் சொன்னாள். மாப்பிள்ளைக்குப் பிரமாத கோபம் வந்துவிட்டது. செக்கைக் கிழித்துக் காலின் கீழே போட்டுத் தேய்த்தார். "எனக்கு யாருடைய பிச்சைக் காசும் வேண்டாம்" என்று எரிந்து விழுந்தார். வீட்டில் மனைவி மாமியார் எல்லோருக்கும் இதனால் வெகு வருத்தம் உண்டாயிற்று.

ஆனால், இந்த மாப்பிள்ளை கஷ்டப்பட்ட குடும்பத்தில் பிறந்தவன். இவன் எவ்வளவு முயன்றும் தான் நினைத்தபடி மனைவிக்குச் சௌகரியம் செய்து கொடுக்க முடியவில்லை. இதனால் இவன் ஏமாற்றமும் ஏக்கமும் அடைந்திருந்தான்.

**காப்பிரைட்: பேரெண்டஸ் மகஸீன், (ஆங்கிலம்: மே '48),
4600, டைவர்ஸி அவென்யு, சிகாகோ 39. யூ. எஸ். ஏ.**

இந்த மனநிலையில் தனக்கு யார் பணம் கொடுத்து உதவ வந்தாலும் தன்னைக் கேவலப்படுத்துவதாக இவனுக்குத் தோன்றியது. இவனுடைய ஆத்திரத்துக்கு அதுதான் காரணம்.

மனைவியும் வேலை செய்தால் என்ன? செய்யலாம். ஆனால் அப்பொழுது அவளுடைய பொறுப்புக்கள் பெருகிவிடுகின்றன. வேலை ஒரு புறம், வீட்டை நிர்வகிப்பது ஒரு புறம், குழந்தைகளைப் பராமரிப்பது ஒருபுறம் - இந்த மூன்றில் ஒன்றுக்கே பொழுது சரியாக இருக்கும். அவளும் கெட்டிக்காரியாக இருந்து, கணவனும் கஷ்டம் தெரிந்து அவளுக்கு உதவி செய்கிறவனாக இருந்தால், அவளும் உத்தியோகத்துக்குப் போகலாம். அப்படி இல்லாவிட்டால் சச்சரவும் சிக்கலும் ஏமாற்றமுமே விளையும்.

சம்பாதிக்கிற கஷ்டம் ஒரு புறம் இருக்கட்டும்; சம்பாதித்த பணத்தைப் புத்திசாலித்தனமாகச் செலவழிப்பதிலும் பல தொல்லைகள் இருக்கின்றன. அதிகச் செலவும் கூடாது; கருமித்தனமும் கூடாது. ஒரு குடும்பத்தில் மனைவி கடும் செட்டுக்காரி; ஒவ்வொரு காசுக்கும் கணக்குப் பார்ப்பாள். பணம் செலவழிந்துவிடுமே என்று அவள் அவசியமான சௌகரியங்களைக்கூடச் செய்துகொள்ள மாட்டாள். ஆனால் கணவனோ, "அநுபவிப்பதற்கு இல்லாவிட்டால் இந்தப் பணம் எதற்கு?" என்பான். அடிக்கடி சினிமா, பாட்டுக் கச்சேரி முதலியவற்றுக்குப் போவான். நல்ல புடைவையாக வாங்கிக்கொள் என்று மனைவியையும் கட்டாயப்படுத்துவான். இந்தக் குடும்பத்திலும் சச்சரவுதான். இதற்கு நேர்மாறாக, கணவன் காசுக் கணக்குப் பார்ப்பவனாகவும் மனைவி சற்றுச் செலவாளியாகவும் இருக்கும் குடும்பங்களும் உண்டு. அங்கும் இதே தொல்லைதான்.

புத்திசாலித்தனமான செலவு என்றால் வரவுசெலவு பற்றிய திட்டம் ஒன்று இருக்க வேண்டும். எவ்வளவோ குடும்பங்களில் வரவு செலவுத் திட்டம் ஒன்றைக் கைக்கொண்டு பிறகு சில வாரங்களிலேயே விட்டு விடுகிறார்கள். இதற்குக் காரணம் ஏதோ புஸ்தகத்தைப் பார்த்து அதில் சொன்னபடி திட்டம் வகுக்க முயல்வதுதான். இது தவறு. அநுபவ சாத்தியமான ஒரு திட்டம் வகுக்க வேண்டும். எதிர்பாராத செலவுகளுக்கென்று திட்டத்தில் கொஞ்சம் பணம் அவசியம் ஒதுக்க வேண்டும். வருமானத்துக்கு ஏற்றபடி தேவையை அமைத்துக்கொண்டு அதன்படி பிடிவாதமாக நடக்க வேண்டும். அப்பொழுதுதான் திட்டம் பயன்பெறும். எதிர்பாராத செலவுக்கு வகை செய்து கொள்ளாத திட்டம் முறிந்து போகும்.

பணம் ஒரு பிசாசுதான்; ஆனால் அது நம்மை ஆட்டி வைக்காமல் நாம் அதை ஆட்டி வைத்தால், பணத்தைப் போல் நன்மையும் இன்பமும் தரும் சாதனம் வேறொன்றும் இல்லை.

குடையின் லட்சணம்: ஒருவருக்குப் பாதுகாப்பு, இருவருக்கு ஷவர் பாத்.

—டபிள்யூ. ஹிட்ச்காக், 'லண்டன் ஒப்பினியன்'

சிறு கதை:

# நாஸ்திகன்

வித்தியாபதி

இந்தக் காலத்தில் மட்டும் அல்ல; எந்தக் காலத்திலுமே நாஸ்திகர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் புத்திமான் கள் அவ்வப்போது தர்க்க ரீதியாகவும் கதை உருவத்திலும் பதில் அளித்திருக்கிறார்கள். இதோ ஒரு பழமையான சம்ஸ் கிருதக் கதை. இதை இயற்றிய கவிகுலகண்டீரவ வித்தியாபதி சுமார் 500 வருஷங்களுக்கு முன் மிதிலையில் வாழ்ந்தவர். 'புருஷ பரீக்ஷா' என்ற நூலில் பல விதமான பாத்திரங்களை விளக்கும் 42-சிறு கதைகளை இவர் எழுதியிருக்கிறார்.

கங்கைக் கரையிலே கம்பிலா என்று ஒரு பட்டணம் இருந்தது. அதை ஹேமாங்கதன் என்ற அரசன் ஆண்டுவந்தான். அவன் காலமானதும், மந்திரிகள் அவனுடைய மகனான ரத்நாங்கதனை அரசனாக்கினார்கள்.

ராஜகுமாரனுக்கு இளம் வயது; போதாக்குறைக்குத் தகப்பனாரின் செல்வமும் கிடைத்துவிட்டது. நிறைந்த செல்வமும், பொங்கும் இளமையும், கசடறக் கற்ற கல்வியும் ஒருவனிடம் இருந்துவிட்டால் அவனுடைய கர்வத்துக்குக் கேட்க வேண்டுமோ? பணம் ஏராளமாக இருந்தும் எவனுக்கு மதம் இல்லையோ, கிளரொளி வீசும் இளமையிலும் எவனுக்குக் காம வேதனை இல்லையோ, அவன் மனிதர்களுக்குள்ளே சிங்கம். அவன்தான் உலகத்தை வெல்வான். ஆனால் அப்படிப்பட்ட மனிதன் இருப்பது மிகவும் அபூர்வம்.

ரத்நாங்கதனுக்கு மண்டைக் கிறுக்கு ஏறிவிட்டது. அவன் தன் நகரத்திலிருந்த பணக்காரர்களின் பணத்தையெல்லாம் கொள்ளையடித்தான். அவ்வளவோடு அவனுடைய பேராசை தணியவில்லை. நிரபராதிகளான குடிமக்களையும் ஹிம்சித்து ஏராளமான வரி வாங்கி வந்தான். அவனுடைய தொல்லையை ஜனங்களால் பொறுக்க முடியவில்லை. "இவன் அரசனல்ல; கொள்ளைக்காரன். மத வெறி பிடித்த யானைபோல, இவனுக்குக் கர்வம் தலைக்கேறியிருக்கிறது. அரசநீதியினின்றும் வழுவிய பிறகு இவனை அரசனென்று எப்படிச் சொல்வது? இந்த அநியாயம் எங்கே அடுக்கும்?" என்று அவர்கள் தமக்குள் பேசிக் கொண்டார்கள். இதற்கு என்ன வழி செய்யலாம் என்று ஆலோசித்தார்கள். "என்னதான் துஷ்டனாக இருந்தாலும் அரசனைக் கொல்வது

மகாபாவம்" என்று ஒரு கட்சியார் வாதாடினார்கள். "அப்படியானால் இந்தக் கொடுமையைப் பொறுத்துக் கொண்டே இருங்கள்! கொடுமை செய்பவன் சௌக்கியமாக இருப்பான்! நாம் எல்லோரும் அழிந்து போவோம்!" என்று மறுகட்சியார் கிண்டலாகப் பேசினார்கள். பிறகு எல்லோருமாகச் சேர்ந்து மந்திரியிடம் போய் முறையிட்டார்கள்.

மந்திரிக்கும் ஏற்கனவே இது கவலையாகத்தான் இருந்தது. "பெரியவர்கள் வந்து சொன்னால் அரசன் ஒருவேளை கேட்டாலும் கேட்கலாம். வனத்திலுள்ள முனிவர்களைக் கூப்பிட்டு அவனுக்குத் தர்மோபதேசம் செய்யச் சொல்லுகிறேன்" என்று அவர் ஜனங்களுக்கு ஆறுதல் கூறி அனுப்பினார்; ரிஷிகளையும் போய்க் கூப்பிட்டார்.

முனிவர்கள் அரசனிடம் வந்தார்கள். "அரசே, நீ தர்மத்தைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டும். தர்மத்தினால்தான் ராஜ்யம் நிலை நிற்கும். மற்றப் பேர்களெல்லாம் வெறும் நரர்களாக இருக்க, நீ நரபதியாக இருப்பதற்குக் காரணம் என்ன? இதைப்பற்றி நீ ஆராய்ந்தாயா?" என்று கேட்டார்கள்.

"என்ன காரணம்? சொல்லுங்களேன்" என்றான் அரசன்.

"முன் ஜன்மத்திலே நீ புண்ணியம் செய்திருக்கிறாய். அதன் பயனாகத்தான் உனக்கு இந்த ராஜ்யம் கிடைத்திருக்கிறது. ஆதலால் இந்தப் பிறவியிலும் நீ புண்ணியமே செய்யவேண்டும்."

"புண்ணியமா! அப்படியென்றால் அது என்ன?"

"அரசே, பிறர் பொருளைக் கவரக் கூடாது; பிறன் மனைவியை நாடக் கூடாது; பிறருக்கு ஹிம்சை செய்யக்கூடாது. தயையும், தானமும், குடிமக்களைக் காப்பதும், விரத உபவாசங்கள் இருப்பதுமான நற்செயல்களைச் சாஸ்திரத்தில் கூறியுள்ளபடி செய்யவேண்டும். இந்தச் செயலின் பயனாகக் கிடைப்பது தான் புண்ணியம் என்பது."

"அப்படியா! இந்தப் புண்ணியத்தினால் எனக்கு என்ன லாபம்? புண்ணியம் இருக்கிறது என்பதற்கு என்ன ஆதாரம்?"

"சாஸ்திரந்தான் ஆதாரம்."

"சாஸ்திரமா! அது யார் செய்தது?"

"கடவுள் செய்தது."

"கடவுளா! கடவுள் என்று ஒருத்தன் இருக்கிறானா? இருந்தால் என் கண்ணுக்குத் தெரியாமலா இருப்பான்? எப்போது அவனே இல்லையோ, அவன் செய்ததாக நீங்கள் சொல்லும் சாஸ்திரம் எங்கிருந்து வந்தது? நீங்களெல்லோரும் பெரியவர்கள்; கடுந்தவம் செய்த முனிவர்கள். நீங்கள் இப்படிப் பொய் பேசி என்னை ஏமாற்றுவது சரியல்ல. உண்மையிலேயே கடவுள் என்று ஒருவன் இருந்தால் அவனை இங்கே இட்டு வாருங்கள் பார்க்கலாம்!"

முனிவர்களின் உபதேசம் அந்த அரசனிடத்திலே மசியவில்லை. அவர்கள் யாவரும் அரண்மனையை விட்டு வெளியே வந்தார்கள். "இந்த அரசன் நாஸ்திகன், நல்லவர்களுடைய உபதேசம் இவனுக்கு ஏறாது. துஷ்டர்களுடைய வார்த்தையே ஏறும். தீய வழியில் முனைந்திருப்பவன் நல்லுபதேசத்தினாலே எங்காவது திருந்துவதுண்டா? இது நம்மால் முடியாத காரியம்!" என்று சொல்லிப் போய் விட்டார்கள்.

மந்திரி மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தார். சேனைத்தலைவர்



களும் அவரிடம் வந்தார்கள். எல்லோருமாகக் கலந்து ஆலோசித்தார்கள். "இந்தக் கொடுங்கோல் அரசனை காமே சிம்மாசனத்திலிருந்து இறக்கிவிட வேண்டியது தான். இவனுடைய தம்பியை அரசனுக்குவோம்" என்று தீர்மானித்தார்கள்; தீர்மானித்தபடியே செய்து முடித்தார்கள்.

பட்டத்துக்கு வந்த தம்பி தன்னைக் கொன்று விடுவான் என்று ரத்திணங்கதனுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. அவன் காட்டுக்கு ஓடிப்போனான். அப்படி அவன் ஓடியபோது மந்திரியோ சுற்றத்தாரோ யாருமே அவனோடு போகவில்லை. லவங்கிகை என்ற ஒரு தாசியை மட்டும் அவன் தன்னோடு அழைத்துப் போனான். அவர்கள் இருவரும் காட்டிலே ஒரு குடிசையில் வாழ்ந்தார்கள்.

துஷ்டன் எங்கே போனால்தான் என்ன? அவனுடைய துஷ்டத் தனம் அவனை விட்டுப் போவதில்லை. அமைதியான தபோவனத்துக்குச் சென்றும் ரத்தினாங்கதன் பிறருக்குக் கொடுமை செய்வதை விட வில்லை. சாதுக்களான தவசிகள் காடு மேடுகளிலும் முள்ளிலும் திரிந்து மிகவும் சிரமப்பட்டுக் கொண்டுவரும் கிழங்குகளையும் கனிகளையும் அவன் அவர்களிடமிருந்து பறித்துத் தின்றுவிடுவான். சில சமயம் அவர்களுடைய கமண்டலத்தை உடைத்து எறிந்து விடுவான்; துணிகளையெல்லாம் கிழித்து வைப்பான். இம்மாதிரியாக நாளுக்கு நாள் அவனுடைய உபத்திரவம் அதிகரிக்கவே, தவசிகள் அவனை அங்கிருந்து துரத்த விரும்பினார்கள். "அடே துஷ்டப் பயலே, உன் தம்பி உன்னைக் கொல்ல இங்கே வரப்போகிறானாம். நீ உயிர் பிழைக்க வேண்டுமானால் பேசாமல் இங்கிருந்து ஓடிவிடு" என்று அவர்கள் அவனைப் பயமுறுத்தினார்கள்.

'இதென்னடா சனியன்! எங்கே போனாலும் நம் உயிருக்கே ஆபத்து வரும்போலிருக்கிறது!' என்று எண்ணி, அந்தக் கொடியவன் ஒரு மலைக்குகைக்குள்ளே போய் ஒளிந்து வசித்துவந்தான். அவனிடத்திலே பணமில்லை; வேலையாள் எவனுமில்லை; அந்த வேசி ஒருத்திதான் அவனுக்குத் துணை. நிர்மானுஷ்யமான அந்தக் காட்டில் சாப்பாட்டுக்கு ஏதுமே கிடைப்பதாக இல்லை. ஆகவே அவன் ஒவ்வொரு நாளும் வேடனைப்போல வில்லையும் அம்பையும் எடுத்துக்கொண்டு வெளியே போய், மிருகங்களை வேட்டையாடி வருவான். மாமிசத்தைத் தின்று இருவரும் வயிறு வளர்த்து வந்தார்கள். அந்தக் குகையிலே அவர்கள் படாத கஷ்டமெல்லாம் பட்டார்கள். அவர்கள் உடுத்திருந்த துணிகள் கிழிந்து நைந்துபோயின. போதாக்குறைக்குக் குளிர்காலமும் வந்துவிட்டது.

அவர்களிடம் இருந்த ஆஸ்தி ஒரே ஒரு கம்பளிதான். குளிரிலே இருவரும் அந்த ஒரு கம்பளியையே போர்த்துக்கொண்டு தூங்குவார்கள். அவன் வேட்டைக்குப் போகும்போது கம்பளியை எடுத்துக் கொண்டு போய்விடுவான். அப்பொழுது லவங்கிகை, பாவம், குளிரிலே அவஸ்தைப்படுவாள். நாளுக்கு நாள் குளிரும் அதிகமாகிக் கொண்டே இருந்தது. ராஜபோகத்தில் வாழ்ந்த லவங்கிகைக்கு இந்தத் துன்பங்களைத் தாங்கவே முடியவில்லை.

ஒரு நாள் அவளுடைய பொறுமை எல்லை கடந்துவிட்டது. அவளுக்கு ஆத்திரம் பொங்கியது. ரத்தினாங்கதனிடம் வெறுப்பு உண்டாயிற்று. துயரம் தாங்காமல் அழுதுகொண்டே, "அடே அறிவிலி, நீ ராஜவம்சத்தில் பிறந்திருந்தும் உன் முட்டாள்தனத்தினால் ராஜ்யத்தை இழந்தாய். நீ எக்கேடு கெட்டாலும் உன்னோடு மட்டும் இருந்தால் பரவாயில்லை. என்னை எதற்காக இந்தக் காட்டுக்கு அழைத்து வந்து இப்படித் தொல்லைப்படுத்துகிறாய்? இந்தத் துன்பத்தை இனி என்னால் பொறுக்க முடியாது. ஒன்று, உன் கையாலேயே என்னைக் கொன்றுவிடு. இல்லாவிட்டால், என்னை விட்டுவிடு; நான் எங்காவது என் பாட்டுக்குப் போய்த் தொலைகிறேன்" என்றாள்.

"வீணாக என்மேல் கோபித்துக் கொள்ளாதேடீ மானே!" என்று அவன் சமாதானப்படுத்தினான்.

"மானாவது மயிலாவது! நீ புத்தியோடு வாழ்ந்திருந்தால், நமக்கு ஏன் இந்த மோசமான நிலைமை வருகிறது? அந்தக் காலத்தில் ஹம்ஸதூளிகா மஞ்சத்திலே படுக்காமல் நமக்குத் தூக்கம் வந்ததுண்டா? குதிரைகள் பூட்டிய ரதமும் வேலைக்காரனும் இல்லாமல் வெளியே கிளம்பிய நாள் உண்டா? கர்ப்பூர வாசனை இல்லாத வெற்றிலையை நாம் போட்டுக்கொண்டதுண்டா? மயில் விசிறி இல்லாவிட்டால் எனக்குக் காற்றே வராதே! இப்படிச் சுகபோகத்திலே வாழ்ந்த நான், இன்று இந்தக் காட்டில் உன்னோடு அவதிப்படுகிறேனே! பிசாசுபோலத் திரிந்து, வேடனாக அலைந்தும், உனக்கு வருத்தம் என்பது துளியும் உண்டாகவில்லையே!"

ரத்தினாங்கதனுக்கு அவளை அந்த நிலையிலே பார்க்கப் பரிதாபமாகத்தான் இருந்தது. அவன் அவளுடைய கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, "கொஞ்சம் பொறுத்துக்கொள்ளடி, லவங்கிகை! இது நமக்குப் போதாத காலம். எப்போதுமே நாம் இப்படிச் சிரமப்பட்டுக்கொண்டிருப்போம் என்று எண்ணாதே. நாளைக்கே நல்ல காலம் வந்தால் நம்முடைய துன்பம் பஞ்சாகப் பறந்து போகும். இன்றிரவு நீ இந்தச் சுள்ளிகளைக் கொளுத்திக் குளிர் காய்ந்துகொண்டு இரு. நான் இந்தக் கம்பளியைப் போர்த்துக்கொண்டு வெளியே போய், எப்படியாவது இன்னொரு கம்பளி கொண்டு வருகிறேன். இந்த ஒரு ராத்திரிக்குத்தான் உனக்குக் கஷ்டம்" என்று ஆறுதல் கூறினான்.

அன்றிரவு அவன் தன் கம்பளியைப்போர்த்துக்கொண்டு நகரத்தை நோக்கிச் சென்றான். ஒருபிராம்மணனுடைய வீட்டில் கன்னம் வைத்து உள்ளே புகுந்தான். கன்னத் துவாரம் வழியாக வெளியிலிருந்து உள்ளே வெளிச்சம் வராமலிருக்க அதைக் கம்பளியால் மூடினான். குளிர்காலமானதால், பிராம்மணன் கம்பளியை இழுத்துப் போர்த்துக்கொண்டு குறட்டை விட்டுத் தூங்கினான்.

'சரியான சமயந்தான்!' என்று யோசித்து, ரத்தினாங்கதன் டபக்கென்று அந்தப் பிராம்மணனுடைய கம்பளியை இழுத்தான். பிராம்மணனோ படக்கென்று விழித்துக்கொண்டு அலறி எழுந்தான். "திருடன், திருடன்! பிடியுங்கள், உதையுங்கள்!" என்று அவன் கூச்சல் போடவே அக்கம்பக்கத்தார் விரைந்து வந்தார்கள். அந்த அமளிகுமளியிலே 'தலை தப்பினால் போதும்' என்று எண்ணிய ரத்தினாங்கதன், தன் கம்பளியைக்கூட எடுத்துக்கொள்ளாமலே ஓட்டம் பிடித்தான். வெகுதூரம் ஓடிவந்த பின்பு அவன் சற்று இளைப்பாற உட்கார்ந்தான். நள்ளிரவில் கடுங்குளிர் அவனை நடுக்கியது. அவன் மனம் சிந்திக்கலாயிற்று.

'சே! நான் என்ன நினைத்தேன்? என்ன நடந்துவிட்டது? நான் வேறொரு கம்பளிக்காக வந்தேன்; என் கம்பளியே இப்பொழுது போய்விட்டது. ஏன் இப்படி நடக்கவேண்டும்? யாருடைய எண்ணத்தினாலே, யாருடைய முயற்சியினாலே இப்படி நடந்திருக்கிறது? உலகத்திலே நமக்கெல்லாம் மேலாகச் செயலாற்றும் ஏதோ ஒரு சக்தி இருக்கத்தான் வேண்டும். அப்படியில்லாமல் என் விருப்பப்படி நடப்பதாக இருந்தால், நான் ஆசைப்பட்ட அந்தக் கம்பளி எனக்குக் கிடைத்திருக்க வேண்டுமே! அவ்

விதம் நடக்காமல் என் கம்பளியும் போகும்படி எவனோ ஒருவன் வேலை செய்திருக்கிறான். அவன்தான் கடவுளாக இருக்கக் கூடும். அந்த முனிவர்கள் சொன்னது உண்மை தான் போலிருக்கிறது. அட பாவமே! உலகத்தைப் படைத்த கடவுள் ஒருத்தன் இருக்கிறான் என்பதைக்கூட இது வரைக்கும் நான் அறியவில்லையே!' என்று அவன் எண்ணினான்.

'சரி, போன நாள் போகட்டும். இனிமேலாவது நல்ல வழியிலே சென்று, தவம் புரிந்து, சிவபெருமானுடைய திருவடிகளிலே மனத்தைச் செலுத்தவேண்டும்' என்று முடிவு செய்தான்.

அவன் நேரே குகைக்கு வந்து, லவங்கிகையை அழைத்துப் போய் ஒரு நகரத்திலே கொண்டு விட்டான். அங்கே அவள் பழைய படி தன் வாழ்க்கையைத் தொடங்கினாள்.

ரத்தினாங்கதனோ மகா தபஸ்வியானான்; சிவபெருமானுடைய பக்தனாக வாழ்ந்து முனிவர்களும் பெறுதற்கரிய பதவியைப் பெற்றான்.

## தலைவர்களின் குறை

"தங்களை யாராவது வந்து தாக்கினால் இந்தியர் மிகுந்த வீரம் காட்டுகிறார்கள். இது எல்லாரும் ஒப்புக்கொண்ட விஷயம். அப்படியிருந்தும் படையெடுத்த அந்நியர்களெல்லாம் இந்தியரை வென்றுவிட்டார்களே; அது எப்படி?" என்று ஒரு சமயம் ஸர் வாலண்டைன் சிரால் என்ற 'டைம்ஸ்' ஆசிரியரை ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணி கேட்டார்.

அப்போது ஸ்ரீ வேங்கடரமணி வாலிபர். இவரைத் தமது பத்திரிகைக்கு ஓர் உதவி ஆசிரியராக வருமாறு கூப்பிட்டார் ஸர் சிரால். அந்த ஏற்பாடு நிறைவேறவில்லை.

ஆனால், ஸ்ரீ வேங்கடரமணியின் கேள்விக்கு ஸர் சிரால் சொன்ன பதில் இது: "இந்தியத் தலைவர்களிடம் ஒரு குறை இருக்கிறது. இந்திய சரித்திரத்தில் நேர்ந்த விபத்துக்களுக்கெல்லாம் அதுதான் காரணம். தாங்கள் விலகும்போது, தங்கள் ஸ்தானத்தை வகிக்கத்தக்க இளங்கிளைகளை இந்தியத் தலைவர்கள் பயிற்றுவிக்காததே அவர்களுடைய குறை."

—ஸாகா, 'ஸ்வதந்த்ர'.

## சிங்கமும் கழுதையும்

ஒரு கழுதை அகம்பாவம் கொண்டது. சிங்கத்தைப்பற்றித் தூஷித்து, உரத்த குரல் பாய்ச்சி என்ன என்னவோ ஊளையிட்டது. சிங்கம் ஆத்திரம் அடைந்தது. நறநறவென்று பல்லைக் கடித்துக்கொண்டே திரும்பிப் பார்த்தது. தன்னைத் தூஷித்த மிருகம் எது என்று கண்டதும், "ஓ! க-ழு-தை-யா!" என்று சொல்லிச் சிரித்துவிட்டு, அதற்குமேல் ஒன்றும் பேசாமல் தன் காரியத்தைப் பார்த்தது.

—ஈசாப் கதை.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

# சுதந்தர தினம்

ஆகஸ்ட் 15.

அது நமது சுதந்தர தினம். அன்று நாடெங்கும் விழாக் கொண்டாடுவோம்.

1947, ஆகஸ்ட் 15-ஆம் உ ஆங்கிலேயர் இந்த நாட்டின் ஆட்சியை, நம்மிடம் ஒப்படைத்துச் சென்றார்கள். அதற்குப் பின் ஒரு வருஷம் பூர்த்தியாகப் போகிறது. எனவே, இந்த ஆகஸ்ட் 15 நமது முதல் சுதந்தர தினம்.

இந்த ஒரு வருஷகாலத்தில் பல சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. துயரத்துக்குரியவை சில; மகிழ்ச்சிக்குரியவை சில; ஆறாத் துயரத்துக்குரிய சம்பவமும் ஒன்று: தேசத்தின் பிதாவை இழந்தோம். ஆம், நாம்தான் இழந்தோம்; அவர் என்றும் இறவாத அமரராய் - நம் உள்ளத்தில் மட்டும் அல்ல; உலக மக்களின் உள்ளங்களிலெல்லாம் - வாழ்கிறார்.

பண்டிகைகளிலும் விழாக்களிலும், பழைய சுகதுக்கங்களை நினைவுகூர்வது நம் இந்திய மரபு. அது நம் மனத்துக்கு நிதானம் அளித்து, நம்மைத் தூய்மைப்படுத்தவல்லது. நமது களியாட்டத்திலே தேசத்தின் பிதாவை நாம் நினைவுகூர் வோம். நமக்குச் சுதந்தரம் வாங்கித் தந்த கருணை வள்ளல் அவர்.

தேசம் அரசியல் விடுதலை அடைந்துவிட்டது. நமது முன்னேற்றத்துக்கெல்லாம் முட்டுக்கட்டையாக இருந்த தடை ஒழிந்தது என்றே அதற்குப் பொருள். இந்தச் சுதந்தரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, நாம் பற்பல துறைகளிலும் முன்னேற வேண்டும். வகுப்பு, மதக்குரோதங்களற்றுச் செல்வம் கொழிக்கும் தர்மராஜ்யத்தை இங்கே ஸ்தாபிக்க இந்த ஆகஸ்ட் 15-இல் நாம் ஒவ்வொருவரும் சங்கல்பம் செய்துகொள்ளுவோமாக.

—ஆசிரியர்

Regd. No. M. 4975

மஞ்சரி    ஸர்வதாரி - ஆடி    ஆகஸ்ட் ·18

விடுதலைக் கொடிகள் . . . . . . . . . . . . . . 1
சிருங்கேரி யாத்திரை . . . . . . . . ஆனந்தவாணி 4
குஷ்டமும் சிகிச்சையும் . . . . . . . பிப்பிள்ஸ் ஹெல்த் 8
மலரே மருந்து . . . . . . . . . . கிருஹலக்ஷ்மி 12
ஓரே பாஷை . . . . . . . . . . . ஸ்வதந்த்ரா 16
அரசன் - இங்கும் அங்கும் . . . . . நியூ டெமொகிராட் 22
பிரபுக்கள் வாழ்ந்த விதம் . . . . விசுவபாரதி பத்திரிகா 25
பிராணிகளின் போர் முறைகள் . . . . . . . மாத்ருபூமி 30
ஹைதராபாத் ஹிட்லர் . . . . . . . . . . . பிளிட்ஸ் 33
மணமகள் தேவை . . . . . . . . . . . இந்தியா 38
புதிசு பழசாகிறது. . . . . . . . . . . . கர்மவீர 42
என் விமர்சகர்கள் . . . . . . . . . . மனோஹர் 46
மூன்றும் வகுப்பு . . . . . . . . பம்பாய் குரானிக்கிள் 51
நமது அரசியல் நகல் . . . . . . . இந்தியா டைஜெஸ்ட் 56
திருடர்கள் - ஜாக்கிரதை! . . . . . . . . அமிர்த பஜார் 59
வீரனின் துறவு . . . . . . . . . . . . பாணபட்டர் 63
அமெரிக்காவில் ஹிந்து நாகரிகம் . . . . . மாடர்ன் ரெவ்யூ 66
மூக்கின் மகத்துவம் . . . . . . . . . . . . . . 73
காணமற்போன கட்டுரை . . . . . . . . . விசால பாரத் 77
பணமுடை நீங்க - . . . . . . . பேரெண்ட்ஸ் மகஸீன் 81

## விசேஷப் பகுதிகள்

சொல் பொருந்துமா? . . . . . . . . . . . . . . 7
நடுக் கடலில் . . . . . . . . . . . . . . 14
நகைச் சித்திரம் . . . . . . . . . . . . . . 15
குழந்தைகள் குறும்பு . . . . . . . . . . . . . 20
காந்தி: வாழ்வும் வாக்கும் . . . . . . . . . . . 44
எது சரி? . . . . . . . . . . . . . . . . 62
பாபுராவ் பதில் சொல்லுகிறார் . . . . . . . . . . 71
இந்தியா - பாகிஸ்தான் . . . . . . . . . . . . 76
சிறுகதை: நாஸ்திகன் - வித்தியாபதி . . . . . . . . . 83